கிராம நலம்

"விவசாய முன்னேற்றத்திற்கு கிராமப் பஞ்சாயத்துத் திட்டம்-
ஒவ்வொரு கிராமமும் உருவாக்கி நடத்தவேண்டும்"



26—1—61-ல் சென்னை நகரில் நடைபெற்ற குடியரசு தின விழா அணிவகுப்பில் பஞ்சாயத்தின் முக்கிய பொறுப்பான உணவுப் பெருக்கத் திட்டம் அலங்கார ஊர்வலத்தில் முக்கிய இடம் பெற்றது.

அடிகளாரின் அடிச்சுவட்டில்

"பஞ்சாயத்து சம்பந்தப்பட்டவர்கள் பஞ்சாயத்து வேலைகளில் சிரத்தை எடுத்துக்கொண்டு பாடுபட்டாலொழிய, அந்தத் துறையில் எடுத்துக்கொள்கின்ற முயற்சிகள் அத்தனையும் வீண்தான். நேர்மையும் பழைய பெருமையும், மறுபடியும் ஏற்படும்படிச் செய்வது பஞ்சாயத்துக்களின் கடமை. கிராம மக்கள் பூசல்கள் இல்லாமல் வாழும்படியும், சண்டை சச்சரவுகள் இருந்தால் அவற்றை தங்களுக்குள்ளேயே சமரசமாகப் பேசித் தீர்த்துக்கொள்ளும்படியும் செய்வது பஞ்சாயத்துக்களின் தலையாய பொறுப்பாகும். அப்படிச் செய்தால் அனாவசிய செலவு ஒழிக்கப்படும். நல்ல தீர்ப்பு விரைவில் கிடைக்க ஏதுவாகும். அப்படிப்பட்ட நிலை வந்துவிட்டால், கிராமங்களில் போலீஸ் படைக்கே அவசியமிராது."

கிராம நலம்

"கிராமங்கள் வாழ, கிராமப் பொருள் ஓங்க
திட்டங்கள் மேற்கொள்வோம் சேர்ந்து"

— காந்தி மணிக்குறள்.

மாடி 6 | பிப்ரவரி 1961 | படி 5

பொருளடக்கம்

	பக்கம்.
"ஒற்றுமை உணர்வோடு ஊரை உயர்ந்தப் பாடுபடுங்கள்."—முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ்	2
"காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்"—ஸ்ரீ வெ. சாமிநாத சர்மா ..	4
பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு—ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கிராம அபி .. விருத்தி கமிஷனர்	6
"கிராம சேவை" (பாட்டு)—ஸ்ரீ ஆர். கோவிந்தராஜன்	7
திட்டத்தின் சாதனை—விவசாயம்—ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ், ..	9
பஞ்சாயத்துத் தலைவர்களின் சென்னை விஜயம்.	12
சோழநாட்டு கிராமியப் பாடல்கள்—புலவர். மணவை தங்கவேலன் ..	15
மூன்று குழந்தைகள் போதும்—ஸ்ரீ பொ. திருகூடசுந்தரம்	21
குடும்பக் கட்டுப்பாடு (பாட்டு)—ஸ்ரீ எச். ஏ. கான்	23
கேள்வியும் பதிலும்	24
மழை பொழிந்ததினால் (பாட்டு)—"அழகனார்"	25
எலும்பு உரத்தின் உபயோகம்—ஸ்ரீ சங்கரசுப்பு	25
மூன்றுவது திட்டத்தில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள் ..	26
"காந்தியப் பாதையின் வேர்"—ஸ்ரீ பொ. சௌரிராசன்	27
1961-ல் இந்தியா	28
உணவும் மக்கள் தொகையும்	30
கிராமங்களுக்கு மின்சார வசதி	32
மாதர்கள் ஆட்சி புரியும் கிராமப் பஞ்சாயத்து	34
பத்து வருட திட்ட ரீதியான முன்னேற்றம்	35

'கிராம நல' இதழ் ஆலோசனைக் குழு

ஸ்ரீ ஆர். ஏ. கோபாலசாமி, ஐ.சி.எஸ்.,
பிரதமச் செயலாளர்.

ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி
கிராம அபிவிருத்திக் கமிஷனர்

ஸ்ரீ எஸ் கிருஷ்ணசாமி பிள்ளை
துணைக் காரியதரிசி [பஞ்சாயத்து]

ஸ்ரீ கே. சுப்பிரமணியம், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [பயிற்சி]

ஸ்ரீ டி. என். சேஷன், ஐ.ஏ.எஸ்.,
துணைக் காரியதரிசி [திட்டம்]

ஸ்ரீ எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.,
பொதுஜனத் தொடர்பு அதிகாரி-ஆசிரியர்.

"கிராம நலம்" பத்திரிகையில் வெளியிட கதை, கட்டுரை, பாட்டு முதலியனவும் அவை சம்பந்தப்பட்ட கடிதங்கள் அனைத்தும் "ஆசிரியர், **"கிராம நலம்"**, கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

கிராம நலம்–சந்தா விவரம்

ஆண்டு சந்தா ரூ. 1·50 ந.பை.
ஆறுமாத சந்தா 0·75 ந.பை.
தனிப் பிரதி 0·13 ந.பை.

சந்தா, மற்றும் "கிராம நலம்" பத்திரிகை சம்பந்தப்பட்ட எல்லா கடிதப்போக்குவரத்துகளும் 'பொது ஜனத் தொடர்பு அதிகாரி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9" என்ற முகவரிக்கு எழுதப்படவேண்டும். ஸ்டாம்புகள் பெற்றுக்கொள்ளப்பட மாட்டா. வி. பி. பி. மூலம் பிரதிகள் அனுப்பப்படமாட்டாது.

"ஒற்றுமை உணர்வோடு ஊரை உயர்த்தப் பாடுபடுங்கள்"

[பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு முதலமைச்சரின் உருக்கமான வேண்டுகோள்]



"உங்களை யெல்லாம் இங்கே சந்திப்பதிலே, மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை இயற்றி, எல்லாக் கிராமங்களிலும் பஞ்சாயத்துக்களைச் சரியாக நடத்த வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். பஞ்சாயத்து ஆட்சி நன்றாக நடைபெற வேண்டுமென்பது நம் ஆசை.

முன்பு சுயராஜ்யத்திற்காகப் பாடுபட்டோம். இப்பொழுது பஞ்சாயத்து ராஜ்யத்தை உண்டாக்கப் பாடுபட்டு வருகிறோம். சுயராஜ்யத்திற்கும் பஞ்சாயத்து ராஜ்யத்திற்கும் என்ன சம்பந்தம்? இந்த இரண்டுக்கும் என்ன தொடர்பு? 'சுயராஜ்யம் வேண்டுமென்று எதற்காகக் கேட்டோம்? எதற்காக சுயராஜ்யத்திற்காக இவ்வளவு தூரம் கஷ்டப்பட்டோம்? சுயராஜ்யத்தின் உண்மையை நாம் அறிந்து கொண்டால், பின்பு பஞ்சாயத்து ராஜ்யத்தின் உண்மையை நாம் அறிந்து கொண்டு விடுவோம்.

சுயராஜ்யத்தின் உண்மையான தத்துவம்

சுயராஜ்யம் என்றால் என்ன? நம்முடைய சொந்த பொறுப்புகளை நாமே செய்து கொள்ளவேண்டும். நம் கடமையை-நம்முடைய பொறுப்பான வேலைகளை-நாமே செய்து கொள்வது தான் சுயராஜ்யம். நம் வேலையைச் செய்வதற்கு கூடவா பிறர் ஒருவரின் அனுமதி வேண்டும்? கூடாது. எங்களுடைய பொறுப்புகளை, எங்களுடைய சுய முயற்சியிலேயே செய்து கொள்கிறோம் என்று தான் சுயராஜ்யம் கேட்டோம். வெறும் விளையாட்டுக்கோ, சுகபோகத்திற்கோ, சுயராஜ்யம் வேண்டும் என்று போராடவில்லை. பொறுப்புகளை நாங்களே செய்து கொள்கிறோம் என்ற கடமை உணர்ச்சியுடன் தான் சுயராஜ்யத்திற்காகப் போராடினோம்.

பொறுப்புகளை நாமே செய்வதென்று ஏற்றுக்கொண்ட பிறகு, அவைகளை எப்படிச் செய்வது என்பது முதல் கேள்வி. அதற்காகத்தான் திட்டங்கள் போடுகிறோம். திட்டம் போட்டு, வேலை முறைகளை வரையறை செய்து 'பாடுபடவேண்டும். ஒவ்வொருக்கும் தேவைகள் உண்டு. ஒவ்வொரு கிராமத்திற்கும் தேவைகள் உண்டு. தேவை இல்லாத இடமே கிடையாது. அந்தத் தேவைகள் என்ன? ஒவ்வொரு கிராமமும் தன்னுடைய தேவைகள் என்னென்ன என்று புரிந்து கொள்ளவேண்டும். கிராம மக்கள் அனைவரும் கிராமத்துப் பிரச்னைகளை அலசிப் பார்த்து ஆவன செய்ய முன் வர வேண்டும். இந்த வகையில் பஞ்சாயத்துத் தலைவருக்கு விசேஷ பொறுப்பு இருக்கிறது. ஏனெனில் மக்களுடன் அன்றாடத் தொடர்பு கொள்கிறவர்கள் நீங்கள். நமக்கு என்ன வேண்டும்? நம் கிராமத்திற்கு என்னென்ன வசதிகள் வேண்டும்? நம்முடைய சக்தி என்ன? செயலாற்றும் வசதிகள் எவ்வளவு நம்மிடையே இருக்கின்றன? இப்படியெல்லாம் எண்ணிப் பார்த்து, நாமே நம் பொறுப்பை ஏற்றுக்கொண்டு செயல் புரிய வேண்டும். அதற்கான வழி வகைகள் என்ன? இவைகளை அடிப்படையாகக் கொண்டது தான் பஞ்சாயத்து. அதற்காகத் தான் பஞ்சாயத்து ராஜ்யம்.

கிராமத்திற்கு வேண்டிய வசதிகளை மட்டும் பெருக்கினால் போதுமா? போதாது. அத்துடன் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டிய வசதிகளும் வேண்டும். இதையெல்லாம் செய்ய வேண்டுமென்றால், வருமானத்தைப் பெருக்க வேண்டும். வருமானத்தைப் பெருக்கினால் தான், இதையெல்லாம் நாம் அடைய முடியும். வருமானத்தை எப்படிப் பெருக்குவது? எத்தனையோ தொழில்கள் இருந்தாலும், நம் கிராமங்களில், விவசாயம் தான் முக்கியமான தொழில். விவசாயத்தை வைத்துக் கொண்டு எத்தனையோ குடும்பங்கள் கிராமப் புறங்களில் வாழ்கின்றன. ஆகவே, விவசாயத்தைப் பெருக்க வேண்டும். விவசாயத் தொழில் பெருகினால், அதன் மூலம், கிராமங்களில் வாழும் ஜனங்களின் வருமானம் பெருகும்.

நாட்டின் வளம் பெருக....

இருக்கின்ற வசதிகளை வைத்துக்கொண்டு என்ன செய்ய வேண்டுமென்று திட்டம் போடுகிறோம். தேவைகள் மனிதனுக்கு எத்தனையோ இருக்கின்றன. அதுவும், இந்தக் காலத்தில் நம்முடைய தேவைகள் வளர்ந்து கொண்டே போகின்றன. எல்லாத் தேவைகளையும் ஒரே நாளில்

பூர்த்தி செய்து விட முடியுமா? முடியாது. எல்லாக் காரியத்தையும் ஒரே நாளில் செய்துவிட முடியாது. ஆகவே, எதை முதலில் செய்ய வேண்டும்? எதைப் பிறகு செய்யலாம் என்பது பற்றி ஒரு வித ஏற்பாடு செய்து கொள்வது அவசியமாகிறது. இந்த ஒழுங்கு முறையை நிர்ணயம் செய்யத்தான் திட்டங்கள் வகுக்கிறோம். நம்முடைய வசதிகள் என்ன? நம்மால் எவ்வளவு செய்ய முடியும் என்பதையெல்லாம் யோசனை செய்ய வேண்டும். இருக்கிறதை வைத்துக் கொண்டுதான் வேலை செய்ய வேண்டும். மூன்றாவது திட்டகாலத்தில் செல்வப்பெருக்கு ஏற்படச் செய்ய வேண்டும். இது மிகவும் முக்கியம். நாட்டின் வளம் பெருக வேண்டும். செல்வம் பெருக வேண்டும். கிராம வேலைகளோடு இதையும் செய்யவேண்டும். செல்வத்தைப் பெருக்காமல், திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதிகள் எங்கிருந்து வரும்? கோடிக்கணக்கில் பணம் போட்டு திட்டத்தை நிறைவேற்றப் பாடுபடுகிறோம். எல்லோரும் ஒருமனப்பட்டு உழைக்காவிட்டால் என்ன பலன்? "பஞ்சாயத்து சபை" என்பது தனியான ஒரு ஸ்தாபனம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது தவறு. பஞ்சாயத்து சபை, அரசாங்க உறுப்புகளில் ஒன்று என்ற எண்ணம் ஏற்பட வேண்டும். நம்மிடையே ஒற்றுமை உணர்ச்சி ஏற்பட வேண்டும். இது மிகவும் முக்கியம்.

கிராமங்களில் மாரியம்மன் திருவிழா, காளியம்மன் திருவிழா நடைபெறுவது உண்டு. அந்தக் சமயங்களில் "யார் பெரியவர்?" என்று தகராறு ஏற்பட்டுவிடும். அதன் விளைவாக மனத்தாங்கல்கள் அதிகமாகி, பல வருடங்கள் திருவிழாவே நடை பெருமல் போய் விடுவதுண்டு. இதெல்லாம் கிராமியச் சூழ் நிலையில் சர்வ சாதாரணம். இனிமேல் இத்தகைய தவறுகள் நடைபெறக்கூடாது. இந்த சில்லறைத் தகராறுகளால் பொதுக் காரியங்கள் கெட்டுப்போய் விடுகின்ற சூழ்நிலை இருக்கக்கூடாது. முக்கியமாக, மிகப் பெரிய காரியங்களான தேச முன்னேற்ற வேலைகள் தடைப்படாமல் நடைபெற நாம் எல்லோரும் வழி செய்ய வேண்டும். நம்முடைய பின் சந்ததியார்களின் நன்மைக்காகச் செய்யும் காரியங்கள் கெட்டுப் போய்விடக்கூடாது. இந்த நல்ல உணர்ச்சியை பொது நலத்தில் ஆர்வம் காட்டும் ஒற்றுமை உணர்ச்சியை மகாத்மா காந்தியடிகள் நமக்குக் கற்றுத் தந்தார். நம்முடைய ஐந்தாண்டுத் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பை, முக்கியமாக மூன்றாவது திட்டத்தை கிராமங்களில் நிறைவேற்றும் பொறுப்பை பஞ்சாயத்துத் தலைவர்களாகிய நீங்கள் மனப்பூர்வமாக ஒத்துக்கொள்ள வேண்டும். வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள், அதாவது, குடி தண்ணீர், விளக்கு வசதி, ஆஸ்பத்திரிகள், ரஸ்தாக்கள், வீட்டு வசதி, துணி, குழந்தைகளுக்கு கல்வி முதலியன கிராம மக்கள் பெற வழி செய்ய வேண்டும். திட்டங்களுக்கு ஒதுக்கிய பணம் போதுமா என்ற மலைப்பு பலரிடம் இருந்து கொண்டே இருக்கிறது. அதைப்பற்றி அதிகம் கவலைப்படக் கூடாது. இரண்டாவது திட்டத்திலிருந்து தான் மூன்றாவது திட்டத்திற்கான செல்வப் பெருக்கு கிடைக்கும்.

ஒற்றுமையுடன் பணியாற்ற வேண்டும்

நம்மிடையே ஒற்றுமை மிகவும் முக்கியம். கிராமத்தில் ஒற்றுமை நிலவ வேண்டும். சிறிய காரியங்களைச் செய்வதென்றாலே, ஒற்றுமை இல்லாமல் முடிவதில்லை. அப்படி இருக்கும் பொழுது, பெரிய பெரிய காரியங்களைச் செய்வதென்றால் ஒற்றுமை மிகவும் அவசியம் அல்லவா? கூட்டுறவு உணர்ச்சியும் ஒற்றுமையும் இருந்தால் தான் எடுத்த காரியத்தைச் செம்மையாகச் செய்து முடிக்க முடியும். ஒற்றுமையும் பொறுப்புணர்ச்சியும் மிகவும் அடிப்படையாக வேண்டியுள்ளன. நமக்கெல்லாம் கடமை உணர்வு இருக்கிறது. பொறுப்பு இருக்கிறது. இவற்றை மேலும் வளர்த்துக் கொள்வோமேயானால், எல்லாமே சரியாக நடந்து விடும்.

கடந்த ஐந்து வருடங்களாக, கிராமப் புறங்களில் நல்ல விழிப்பு ஏற்பட்டிருக்கிறது. பழைய மாதிரி ஒரு சுறுசுறுப்பற்ற மந்தமான நிலை இப்போது இல்லை. இப்போது ஒரு புது உணர்ச்சி உண்டாகியிருக்கிறது. நம் கிராமத்திற்கு நல்லது செய்ய வேண்டும் என்ற புது உணர்ச்சி எங்கும் ஏற்பட்டுள்ளது. இந்தப் புது உணர்ச்சியையும், விழிப்பையும், நல்ல முறையில் பயன் படுத்த வேண்டும். இதுதான் முக்கியம். நம்முடைய ஆர்வம் நல்ல முறையில் சமுதாய நலனுக்கான காரியங்களைச் செய்யப் பயன்பட வேண்டும்.

நம்முடைய ஆவேச உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். உணர்ச்சிப் பெருக்கை, காட்டாற்று வெள்ளம் போல் அடித்துக்கொண்டு போக விடக்கூடாது. அதனால் யாருக்கும் பயன் ஏற்படாது. ஆனால், அந்த உணர்ச்சியை நல்ல முறையில் கட்டுப்படுத்தி, சக்தியை சிதறாமல் தேக்கி வைக்க நாம் திட்டமிட்டு வருகிறோம். நியாய உணர்ச்சி பெருகி, சேவை மனப்பான்மை மூலம் நாடு செழிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறோம். அதை நீங்கள் நன்கு உணர்ந்து ஒத்துழைப்பீர்கள் என்று நம்புகிறேன்.

பஞ்சாயத்து ராஜ்யத்தைத் தமிழ் நாட்டில் நல்ல முறையில் நடத்த முடியும். ஏனென்றால் இங்கே, பொதுவாகவே மக்கள் நல்லவர்கள். நம்முடைய தமிழ் நாட்டு மக்கள் அவ்வளவு எளிதில் உணர்ச்சிக்கு ஆளாகிவிட மாட்டார்கள். ஆகவே, பஞ்சாயத்து ஆட்சியை இங்கே செம்மையான முறையில் நடத்த முடியும். எல்லோரும் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கொண்டு, காரியம் செய்தால், போதும். நம் லட்சியம் சுலபமாக நிறைவேறி விடும்.

(14-ம் பக்கம் பார்க்கவும்)

காந்தியடிகளும் கிராம வாழ்க்கையும்

வெ. சாமிநாத சர்மா.

[பாரத நாட்டின் பரம்பரையான நாகரீகம், கிராம வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டது. இந்த நாகரீகம் பழுதுருமல் மெருகோடு பிரகாசித்துக் கொண்டிருக்க வேண்டுமானல், கிராம வாழ்க்கை யானது எல்லா வகைகளிலும் நிறைவுடையதாயிருந்து வரவேண்டும். இதை காந்தியடிகள் அடிக்கடி வலியுறுத்தி வந்திருக்கிருர். அப்படி வலியுறுத்தி வருகையில், பிரதியொரு கிராமமும் எப்படித் தன்னுடைய தேவகளைத்தானே பூர்த்தி செய்து கொண்டும், தன்னுடைய விவகாரங்களைத் தானே கவனித்துக்கொண்டும் செயலாற்ற வேண்டியதற்கான வழி முறைகளை வகுத்துக் காட்டி யிருக்கிருர். தவிர, அரசாங்கத்தின் தன்மை, நோக்கம் முதலியன எவ்வாறிருக்கவேண்டும். மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் இருக்கவேண்டிய உறவு முறைகளென்ன ? இவைகளைப்பற்றியும் விளக்கம் தந்திருக்கிருர். இவைகளைப்பற்றித்தெரிந்து கொள்வதற்கு முன், காந்தியடிகள் இந்திய அரசியல் அரங்கத்தில் பிரவேசித்தபொழுது அமைந்திருந்த சூழ்நிலை யாது, இந்திய தேசிய இயக்கம் எப்படித்தோன்றி வளர்ந்து வந்தது, அந்த வளர்ச்சியின் எந்தத்தறுவாயில் காந்தியடிகள் பிரவேசித்து தமது பெயரால் ஒரு சகாப்தம் ஏற்படுவதற்குக் காரண புருஷரா யிருந்தார் என்பதுபற்றித் தெரிந்துகொள்வது அவசியம். பிறகு காந்தி அடிகளின் வாழ்க்கை வரலாறு, அவர் ஏன் மகாத்மாவாக கொண்டாடப்படுகிருர், அவர் சாதித்த சாதனைகளை எந்தக் கண்ணேட்டத்தில் வைத்துப் பார்க்கவேண்டும் முதலியைவபற்றியும் அறிதல் வேண்டும். அப் பொழுதுதான் காந்தியடிகளின் எண்ணத்திலே தோன்றி வளர்ந்த கிராம ராஜ்யத்தின் முழு உருவத்தை அறிய சாத்தியமாகும். இவை பற்றிய விளக்கம் இக்கட்டுரைத் தொடரில் வரிசைக் கிரமமாக இடம் பெறும்:
ஆசிரியர்,]

இந்திய தேசீய இயக்கத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

நாமிருக்கும் நாடு நம்முடையது ; நாமெல்லோரும் இந்நாட்டு மன்னர். இப்படி உரிமையோடும் பெருமை யோடும் சொல்லிக்கொள்ளக் கூடிய தகுதி இப்பொழுது நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனல் இந்தத் தகுதி எளி தில் ஏற்பட்டுவிடவில்லை. இதற்காக நாம் எத்தனையோ விதமான போராட்டங்களை நடத்த வேண்டியிருந்தது. எத்தனையோ பேர் சிறை சென்றனர். உயிரையும் பொரு ளையும் கொடுத்தவர் பலர்.

1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதி, நம் முடைய நாடு சுதந்திர நாடாயிற்று. அது வரையில் சுமார் முன்னூறு வருஷகாலம் பிரிட்டிஷார் நம்மை ஆண்டுவந்தனர். இவர்களை நாம் சர்வசாதாரணமாக வெள்ளைக்காரர்கள் என்று அழைப்பது வழக்கம். வெள் ளைக்கார ராஜ்யம் என்றுதானே சொல்லிவந்தோம். இங்கே நாம் பிரிட்டிஷார் என்றே சொல்லிக்கொண்டு போவோம்.

இந்த பிரிட்டிஷார், முதலில் வியாபாரம் செய்யவே வந்தார்கள். பிறகு மெதுமெதுவாக நம்மை ஆளும் அதிகாரிகளாகி விட்டார்கள். அதிகார பலத்தைக்கொண்டு தங்கள் வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதே இவர் களுடைய முக்கிய நோக்கமாயிருந்தது. இதற்காக, இவர் கள் கையாண்ட முறைகளினல், நமது நாட்டில் நீண்ட காலமாக நடைபெற்றுவந்த கைத்தொழில்கள் நசித்து வந்தன. நமது சமுதாயத்தின் கட்டுக்கோப்பு சீர்குலையத் தொடங்கியது. மற்றும், நம்முடைய கல்விமுறைகள் மதக்கோட்பாடுகள், பழக்கவழக்கங்கள் ஆகிய எல்லாவற் றிலும் இவர்களுடைய ஆதிக்கத்தின் சாயல்படிய ஆரம் பித்தது. சுருங்கக்கூறவேண்டுமானல், இவை பலவற்றின் விளைவாக நம்முடைய நாட்டின் தனித்துவம் போய் விட்டது. அதாவது, நம்முடைய நாடு, சுதந்திரமற்ற நாடாகியது ; பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஒரு பகுதி யாகி விட்டது.

பிரிட்டிஷார், இந்த நாட்டில் ஊன்றிக்கொள்ள முயன்ற காலத்திலிருந்தே, அவர்களுடைய ஆதிக்கம் பரவிவரு வதை எதிர்த்து ஆங்காங்கு சில முயற்சிகள் நடை பெற்றன. ஆனல் இவற்றில் பெரும்பாலானவை, உட னுக்குடன் அடங்கியும் அடக்கப்பட்டும் போயின. என்ரு லும், எதிர்ப்புக்காட்டும் முயற்சிகள் அடியோடு நின்று விடவில்லை ; ஆங்காங்குத் தலைகாட்டிக் கொண்டிருந்தன.

பத்தொன்பதாம் நூற்ருண்டின் முற்பகுதியிலிருந்தே இந்த எதிர்ப்பு முயற்சிகள், சில்லரைக் கிளர்ச்சிகளாகவும், சில இடங்களில் புரட்சிகளாகவும் உருக்கொண்டன. இந்தப்புரட்சிகளுள் ஒன்று, 1857-ம் வருஷம் நடை பெற்றது. இது, சிப்பாய் கலகம் என்ற பெயரால் அழைக் கப்படுகிறது. இப்படி அழைப்பது சரியல்ல. உண்மையில் இது, பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நடைபெற்ற புரட்சியேயாகும். இதனை ஆரம்பித்தவர்கள், ஒழுங்காக வும் ஒற்றுமையுடனும் செயலாற்றியிருப்பார்களானல், இந்தியாவின் சரித்திரப்போக்கு வேறு விதமாகத் திரும்பியிருக்கும்.

மற்றும், பத்தொன்பதாம் நூற்றுண்டின் இடைக் காலத்தில், பிரிட்டிஷ் ஆட்சியினல் மக்கள் அனுபவித்து வரும் துன்பங்களையும், அரசாங்க நிருவாகத்தில் காணப் பெறும் குறைகளையும் அவ்வப்போது எடுத்துக்காட்டி, அவைகளுக்குக் முடிந்தவரை பரிகாரம் காண, இந்தியா வின் முக்கியமான நகரங்களில், தனித்தனிச் சங்கங்கள் தோன்றின.

சென்னையில் தேசிய இயக்கத்தின் துவக்கம்

சென்னையைப்பொறுத்தமட்டில், 1853-ம் வருஷம் "மதராஸ் நேடிவ் அசோசியேஷன்" (சென்னை சுதேசி கள் சங்கம்) என்ற பெயரால் ஒரு சங்கம் ஆரம்பிக்கப் பட்டது. அப்பொழுதெல்லாம் இந்தியர்களைச் சுதேசி என்று பிரிட்டிஷார் அழைத்து வந்தனர். இப்படி அழைக்கப்படுவதற்கு இந்தியர் பலரும் உடன்பட்டிருந் தனர்! இந்தச் "சென்னை சுதேசிகள் சங்கத்தை" ஆரம்பித்தவர் காஜுலு லட்சுமிநரசு செட்டியார் என் பவர். சென்னை மாகாணத்தில் மக்களுக்கு அரசியல் உணர்ச்சியை முதன் முதலாக ஊட்டியவர் இவரே. இவர் தொடங்கிய மேற்படி "சென்னை சுதேசிகள் சங் கமே" பின்னர், அதாவது 1884-ம் வருஷம் "சென்னை மகாஜன சபை" யாக உருக்கொண்டது.

சுதேசிகள் சங்கத்தைத் தொடங்குவதற்குச் சுமார் பத்து வருஷங்களுக்கு முந்தியே, காஜுலு லட்சுமி நரசு செட்டியார் "கிரஸண்ட்" (Crescent=பிறை) என்ற பெயரால் ஓர் ஆங்கில வாரப்பத்திரிகையைத் தொடங்கினர். இதற்கு ஹார்லி என்ற ஓர் ஆங்கிலேயர் ஆசிரியராக அமர்த்தப்பட்டார்.

பொதுவாக, பத்தொன்பதாம் நூற்றுண்டின் பிற் பாதிக்காலத்தில் பிரிட்டிஷார் பலர் இந்தியர்களுடைய தேசிய விருப்பங்களுக்கு ஆதரவு காட்டி வந்தனர் என் பதை நாம் இங்கு நினைவு கொள்ளவேண்டும். இவருள் குறிப்பிடத்தக்கவர்கள், ஜான் நார்ட்டன், ஜார்ஜ் ப்ரூஸ் நார்ட்டன், ஜேம்ஸ் லாங், தளபதி ஆல்காட், பிராட்லா, ஹ்யூம்,வெட்டர் பான் முதலியோர். இருபதாம் நூற் றுண்டின் முற் பகுதியில், இவர்களுடைய அடிச்சுவடு களைப் பின்பற்றி, இந்தியர்களின் சுதந்திர முயற்சி களுக்கு ஆதரவு தந்தவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள், அன்னி பெசண்டம்மையார், பி. ஜி. ஹார்னிமான், சி.எப். ஆண்ட்ரூஸ், எச்.எஸ்.எல். போலக் முதலியோர்.

லட்சுமி நரசு செட்டியாரால் தொடங்கப்பட்ட "கிர ஸண்ட்" பத்திரிகை "ஹிந்துக்களைத் தாழ்ந்த நிலையி லிருந்து உயர்த்துவதே தனது நோக்கம்" என்ற முழக் கத்துடனேயே வெளிவந்தது. இந்தப் பத்திரிகையைத் தொடங்கி நடத்தி வந்ததன் விளைவாக, லட்சுமி நரசு செட்டியார், அநேக கஷ்ட நஷ்டங்களுக்கு ஆளானர். ஆனல் இவர் சளைக்கவில்லை. கிறிஸ்துவப்பாதிரிமார்களின் பிரசாரத்தையும், ஹிந்துக்களை மதம் மாற்றப்படுவதை யும் ஆட்சேபித்து ஒரு மகஜர் தயாரித்து, அதில் பன்னி ரண்டாயிரம் பேருடைய கையெழுத்தை வாங்கி பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்பினர். இதற்குப் பிறகு இவர், சென்னை சுதேசிகள் சங்கத்தைக் கொண்டு மற்றொரு மகஜர் தயாரிக்கச்செய்து அதை பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்பினர். அதில் ஒரு பகுதி வருமாறு :—

"ஜனங்கள் அதிகவரியினுல் கஷ்டப்படுகிறார்கள். வரி வசூல் விஷயத்திலும் அதிக தொந்திரவுகள் இருக் கின்றன. இது சம்பந்தமாக நடைபெறும் கோர்ட் நடவடிக்கைகளிலும் அதிக தாமதம் ஏற்படுகிறது. ஜனங் களுடைய முக்கிய தேவைகள் என்னவென்றால், பாதை கள், பாலங்கள், நீர்ப்பாசன வசதிகள், போதிய கல்வி வசதிகள் முதலியனவேயாம். தவிர அரசாங்க செலவில் சிக்கனம் செய்யவேண்டுமென்றும், ஜனங்களின் நன் மைக்குரிய ஆட்சி நடைபெற வேண்டுமென்றும் மனு தாரர்கள் கோருகிறார்கள்."

ஏறக்குறைய இதேமாதிரியான மகஜர்களை, கல்கத்தா விலும் பம்பாயிலும் முறையே நடைபெற்று வந்த சங்கங்கள், பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கு அனுப்பின.

ஆனல் இப்படித்தனித்தனியாக, அதாவது மாகாண வாரியாகக் குறைகளைத் தெரிவிப்பதனல் எதிர் பார்க்கும் பலன் கிட்டாதென்பதையும், இந்தியர்களனைவரையும் ஒன்று கூட்டுவிக்கின்ற அகில இந்திய ஸ்தாபனம் ஒன்று தேவையென்பதையும், மேற்படி மாகாண ஸ்தாபனங்களை நடத்தி வந்தவர்கள், காலக்கிரமத்தில் உணரத்தலைப் பட்டார்கள்.

1884-ம் வருஷம் டிசம்பர் மாதம் சென்னை அடை யாற்றில் பிரம்ம ஞான சங்கத்தின் வருஷாந்திர மகா நாடு நடைபெற்றது. இதையொட்டி வந்திருந்த முக்கிஸ் தர்களில் தேசீய மனப்பான்மை கொண்ட பதினேழுபேர், மேற்படி டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் சென்னை மயிலாப்பூர் மேலண்டை மாட வீதியிலுள்ள ஒரு பெரிய வீட்டில் ஒன்று கூடி, இந்தியா முழுமைக்கும் பொதுவான ஸ்தாபனம் ஒன்று அமைக்கவேண்டியதன் அவசியத்தைப் பற்றிப் பேசினர்கள். அப்படியே அமைப்பதென்று தீர்மானித்தார்கள். இந்தத் தீர்மானத் தின் விளைவாகவே இந்திய காங்கிரஸ் தோன்றியது.

முதல் காங்கிரஸ், 1885-ம் வருஷம் டிசம்பர் மாதக் கடைசி வாரம் பம்பாயில் கூடியது. இதற்கு கல்கத்தாவில் பிரபல வழக்கறிஞராக விளங்கிய உமேச சந்திர பானர்ஜி என்பவர் தலைமை வகித்தார். இது முதற்கொண்டு ஆண்டு தோறும் காங்கிரஸ் கூடி வருவதை அனைவரும் அறிவர்.

காங்கிரஸ் தோன்றிய காலத்திலும், அதற்கு சில ஆண்டுகள் முன்னரும், சென்னையைப் பொறுத்தமட்டில், பிரபல தலைவர்களாக விளங்கியவர்கள் ஹபீஸ் ஸதருல் இஸ்லாம் கான், எம். வெங்கடராயலு நாயுடு, ராஜ ரத்தின முதலியார், ரங்கைய்ய நாயுடு, ஜி. சுப்பிரமணிய ஐயர், வீர ராகவச்சாரியார், ஆர். ரகுநாத ராவ்,

[7-ம் பக்கம் பார்க்கவும்]

"ஊருக்கு நல்லது சொல்வேன்"

பாரதியார்

பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு

[ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்திக் கமிஷனர்.]

[கிராம அபிவிருத்திக் கமிஷனர் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு எழுதும் கடிதங்கள் என்ற வரிசை மறுபடியும் "கிராம நலத்" தில் தொடர்ந்து வெளிவரும் என்பதை முதலில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம் "கிராம நலம்" மூலமாக கிராம அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி இனிமேல் மாதந்தோறும் பஞ்சாயத்துத் தலைவர்களைச் சந்திப்பார்கள். இந்த வாய்ப்பு பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு கிடைத்துள்ள மிகப் பெரிய வாய்ப்பாகும். கிராம அபிவிருத்திக் கமிஷனரின் பேச்சுகள், எழுத்துக்கள் அத்தனையும் அனுபவத்தால் பண்பட்டவை. பஞ்சாயத்துத் தலைவர்களின் இதயத் துடிப்பை முழுதும் உணர்ந்துகொண்டு அவர் பேசுகிறார். எழுதுகிறார். இன்றைய நிலையில் மிகவும் அருமையானதும் அத்தியாவசியமானதுமான கருத்துக்களை பலவற்றை அவர் கடிதத் தொடரில் பஞ்சாயத்துத் தலைவர்கள் காணலாம். இந்த வாய்ப்பினை பஞ்சாயத்து சம்பந்தப்பட்ட அனைவருமே நன்கு பயன்படுத்திக்கொள்வார்களென நம்புகிறோம்.

—ஆசிரியர்.]

அன்புள்ள பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு,

வணக்கம். சில மாதங்களுக்கு முன்பு, "**கிராமநலம்**" பத்திரிகையில் "கடிதப் பேச்சு" என்ற தலைப்பில் சமுதாய அபிவிருத்தி ஊழியர்களுக்கு நான் சொல்லவேண்டிய விஷயங்களை இப்பத்திரிகையின் வாயிலாக எழுதி வந்தேன். அதைச் சமுதாய அபிவிருத்தி அலுவலர்கள் மட்டுமல்ல, பஞ்சாயத்துத் தலைவர்களும் படித்துப் பார்த்ததாகவும் அதன் மூலம் சில புதிய விஷயங்கள் தங்களுக்குத் தெரிய வந்ததாகவும், இம்மாதிரி மாதாந்திரக் கடிதம் மூலம் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு நான் சொல்ல வேண்டும் என்று நினைக்கின்ற விஷயங்களை மாதந்தோறும் "**கிராம நலம்**" வாயிலாக வெளியிடுவது நல்லது என்று பஞ்சாயத்துத் தலைவர்களில் சிலர் சில வாரங்களுக்கு முன்பு எனக்கு அறிவித்தார்கள். எனக்கு ஏற்பட்டிருந்த முக்கிய அலுவல்கள் காரணமாக, அன்பார்ந்த இந்த வேண்டுகோளை என்னால் இதுவரை பூர்த்தி செய்ய இயலவில்லை. பஞ்சாயத்து சம்பந்தமான மாநாடுகளிலும், விழாக்களிலும் நான் பேசியவைகளைக் "**கிராம நலம்**" ஆசிரியர் அன்புடன் இடையிடையே இப்பத்திரிகையில் வெளியிட்டு வருகிறார். எனவே என்னுடைய கருத்துக்கள் என்ன என்பதைக் "**கிராம நலம்**" வாசிக்கும் அன்பர்கள் அனைவரும் ஓரளவு அறிவீர்கள்.

பஞ்சாயத்துக்கள் நல்ல முறையில் நடைபெறுவதற்கு அடிப்படையாக அமைந்திருப்பவர்கள் பஞ்சாயத்துத் தலைவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது. பஞ்சாயத்துக்களைப் பற்றிப் தெரிந்துகொள்ள வேண்டிய எல்லா விவரங்களையும் தெரிந்து, பஞ்சாயத்து விஷயங்களில் ஊக்கமும், உற்சாகமும் கொண்டு உழைக்க முன் வருவார்களானால் மகாத்மா காந்தி முதலிய நம்முடைய தலைவர்கள் கிராமங்கள் எப்படியெப்படியெல்லாம் ஆக வேண்டுமென்று நினைத்தார்களோ, நினைக்கிறார்களோ அப்படியெல்லாம் ஆகுமென்பதில் எனக்கு ஐயம் எதுவுமில்லை. கிராமங்களிலுள்ள பஞ்சாயத்துக்களுக்குத் தலைவர்களாக இருப்பவர்களே பஞ்சாயத்து யூனியன் அங்கத்தினர்களாக இருப்பார்கள் என்று சர்க்கார் சமீபத்தில் செய்த ஏற்பாட்டின் மூலம் பஞ்சாயத்து தலைவர்களுடைய பொறுப்பும், அந்தஸ்தும் அதிகமாயிருக்கிறது. தங்களைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுத்த கிராமத்திற்குமட்டுமல்ல; அந்தக் கிராமம் எந்த வட்டாரத்தில் இருக்கிறதோ அந்த வட்டார யூனியன் கவுன்சில் நல்ல முறையில் நடைபெறுவதற்கும் இந்தப் பஞ்சாயத்துத் தலைவர்களே காரணமாவார்கள் என்று சொல்லலாம். எனவே, கிராமப் பஞ்சாயத்தும், பஞ்சாயத்து யூனியனும் திறமையாகவும், நல்ல முறையிலும் வேலைகளை மேற்கொண்டு திட்டங்களை நிறைவேற்றி வைப்பதற்குப் பஞ்சாயத்துத் தலைவர்கள் "அச்சாணி" போன்றவர்கள் என்று சொல்லலாம்.

எனவே இம்மாதம் முதல் தொடர்ந்து மாதந்தோறும் பஞ்சாயத்துகள் சம்பந்தமாக என்னுடைய கருத்துக்களை "**கிராமநலம்**" மூலம் உங்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பது என்னுடைய விருப்பம்.

நான் சொல்லும் விஷயங்களை வாசித்து அதில் உங்களுக்கு ஏதாவது சந்தேகம் தோன்றுமாகில் அதை இப்

கிராம சேவை

(ஆர். கோவிந்தராஜன், வல்லம்.)

அனைவருமே கிராமசேவை செய்திட வேண்டும்.
ஆகையினுல் கிராமநலம் பெருகிட வேண்டும்.
இயன்றவரை கிராமத்தை விரும்பிட வேண்டும்.
ஈடில்லை எண்ணும்படி தங்கிட வேண்டும்.
உழவோர்க்குத் தோழர்களாய் வாழ்ந்திட வேண்டும்.
ஊருக்கு உழைப்போர்கள் பெருகிட வேண்டும்.
என்னுளும் குடிசைத் தொழில் செழித்திட வேண்டும்.
ஏர் பிடிப்போர் வாழ்வுதனை ஊக்கிட வேண்டும்.
ஐயமிட்டு பல்லுயிரைக் காத்திட வேண்டும்.
ஒற்றுமையாய் நாம் எல்லாம் இருந்திட வேண்டும்.
ஓயாத வறுமைமிடி ஒழிந்திட வேண்டும்.
ஔவையாரின் வாக்கு என்றும் நிலைத்திட வேண்டும்.
அஃதேதான் என்ஆசை நடந்திட வேண்டும்.

பத்திரிகை ஆசிரியர் மூலம் எனக்கு அறிவித்தால் அதற்கு அவசியமான பதில்களையும், அவ்வப்போது இப்பத்திரிகை வாயிலாகத் தெரிவித்து வர எண்ணியிருக்கிறேன். இந்தக் கடிதம் மூலம் இன்று உங்களை வேண்டிக்கொள்ளும் முதல் விஷயம் என்னவென்றுல், உங்களுக்கு அலுவல்கள் எவ்வளவு அதிகமாக இருந்தபோதிலும் மாதந்தோறும் "**கிராம நலம்**" உங்கள் கைக்குக் கிடைத்தவுடன் அதை முழுவதும் கவனத்துடன் வாசிக்கவேண்டும் என்பதே. "**கிராம நலத்**" தில் நீங்கள் வாசிப்பதற்கு அவசியம் இல்லாததும், பொருத்தமில்லாததுமான விஷயங்கள் ஏதாவது பிரசுரிக்கப்படுமாகில் அதையும் சொல்லி விடுங்கள்.

"**கிராம நலம்**" உங்களுடைய பத்திரிகை. உங்களுக்காக வேண்டிய விஷயங்களைச் சொல்வதற்காகவே வெளிவரும் வெளியீடு. இதில் வரும் விஷயங்கள் உங்களுக்குப் பயனில்லையென்றுல் இந்தப் பத்திரிகை வெளிவந்தும் பயனில்லை என்றும் சொல்லலாம். எனவே தயவு செய்து இப்பத்திரிகையில் வரும் விஷயங்களைப் படித்துப் பார்த்து எம்மாதிரி விஷயங்கள் இப்பத்திரிகை மூலம் வெளிவந்தால் இதைவிட இன்னும் நல்லதென்று தாங்கள் நினைத்தால் அதையும் தயவு செய்து அறிவியுங்கள். அடுத்த மாதம் முதல் பஞ்சாயத்து சம்பந்தமாக நீங்களும் நானும் சேர்ந்து கவனிக்க வேண்டிய விஷயங்களைப்பற்றி "**கிராம நலம்**" மூலம், உங்களுடன் பேசுவதற்கு முடியும் என்று நம்புகிறேன்.

தங்கள் அன்புள்ள,
கோ. வேங்கடாசலபதி.

[5-ம் பக்கத் தொடாச்சி]

ஸர். எஸ். சுப்பிரமணிய ஐயர், சேலம் ராமசாமி முதலியார், சேலம் விஜயராகவாச்சாரியார், பி. அனந்தாச்சார்லு, பட்டு கேசவப் பிள்ளை முதலியோர். இவர்களையும் இந்திய தேசீய உணர்ச்சிக்கு மதிப்புக் கொடுத்த மேற்சொன்ன ஆங்கிலேயர்களையும் நாம் என்றும் மறக்கலாகாது.

மிதவாத கொள்கையின் ஆதிக்கம்

காங்கிரஸ் தோன்றுவதற்கு முன்னரும் அதன் ஆரம்ப தசையிலும், அரசாங்க நிருவாகத்திலும் சமூக வாழ்விலும் சீர்திருத்தங்கள் ஏற்படவேண்டுமென்ற கோரிக்கைகளே கிளத்தப்பட்டு வந்தன. சமூகத்திலும் அரசியலிலும் செல்வாக்குப்பெற்றிருந்தவர்களில் பெரும்பாலோரிடையே சீர்திருத்தமனப்பான்மையே நிலவி வந்தது. இவர்கள், இந்தியாவையும் இங்கிலாந்தையும் ஏதோ ஒரு தெய்வ சக்தி பிணைத்து வைத்திருக்கிறதென்றும், அந்தப் பிணைப்பு, இந்திய மக்களின் நன்மைக்கே ஏற்பட்டிருக்கிறதென்றும் பேசி வந்தார்கள். இதை இன்னும் பட்டவர்த்தனமாக சொல்ல வேண்டுமானுல், ஆங்கிலேயர்கள் அதாவது பிரிட்டிஷார் நம்மை ஆளப்பிறந்தவர்கள், அவர்களுக்கு நாம் ஆட்பட்டிருப்பதே நலம், சுதந்திர நாட்டினராக நம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள இன்னும் வெகு காலம் பிடிக்கும் என்பன போன்ற கருத்துக்களே இவர்களுடைய பேச்சிலும் எழுத்திலும் விரவியிருந்தன.

இந்தக் காலத்தில் ஆங்கில மொழி மீது ஒரு வித மோகமும், ஆங்கில மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருந்தவர்களுடைய நாகரிகத்தில் ஒரு வித பிரமையும் பொதுவாக இந்திய இளைஞர்களிடையே நிலவியிருந்தன. அரசாங்கமும் இவற்றை நாசுக்காகப் பரப்பி வந்தது. கல்வி முறையில் ஆங்கில மொழிக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பெற்றது. இப்படி முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதற்கு அடிப்படைக் காரணமும் ஒன்றுண்டு. அரசாங்கத்திற்கும் பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கும், அவர்களுடைய பல துறை அலுவல்களில் அவர்களுக்கு உதவி செய்யவும் ஊழியம் புரியவும் ஆங்கிலம் படித்தவர்கள் தேவைப்பட்டனர். குமாஸ்தா பட்டாளங்களைப்படைத்துக் கொடுப்பதே அப்போதைய பள்ளிக்கூடங்களின் முக்கிய தொழிலாயிருந்தது என்று பிரிட்டிஷ் சரித்திராசிரியர் பலர் ஒப்புக் கொண்டிருக்கின்றனர். படித்தவர்கள் என்று சொன்னுல், ஆங்கில மொழி பயின்றவர்களென்றே கொள்ளப்பட்டது. ஆங்கிலம் பயிலாதவர்கள் பாமரர்களென்று அழைக்கப்பட்டார்கள். இதனுல் படித்த வகுப்பாரென்றும் படிக்காத வகுப்பாரென்றும், சமுதாயத்தில் லேசான இரண்டு பிரிவினைகள் உண்டாயின.

படித்த வகுப்பாரே, சமுதாயத்திலும் அரசியலிலும் செல்வாக்குப் பெறலாயினர். இவர்களில் வயதிலும் அனுபவத்திலும் ஓரளவு முதிர்ச்சியடைந்தவர்களும், தேவைக்குச் சிறிது அதிகமான வாழ்க்கை வசதிகளைப் பெற்றவர்களும், சீர்திருத்த மனப்பான்மை கொண்டவர்களாகவும் எதிலும் நிதானப்போக்குடையவர்களாகவும் இருந்தனர். இவர்கள், அரசியல் விவகார பாஷையில், மிதவாதிகள் என்று அழைக்கப்பட்டார்கள். பொதுவாக நாட்டின் அரசியலில், சிறப்பாக காங்கிரஸில் இவர்களுடைய செல்வாக்கு 1905-ம் வருஷம் வரையில், அதாவது காங்கிரஸ் தோன்றியதிலிருந்து சுமார் 20 வருஷ காலம் ஓங்கியிருந்தது.

(தொடரும்)







1—4. குடியரசு தினத்தை ஒட்டி, உயர் நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் மாணவ மாணவிகள் விளையாட்டுப் பந்தயங்கள் ஜனவரி 19, 21 தேதிகளில் மாநிலக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

5—6. சென்னைக்கு விஜயம் செய்திருந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் கிண்டி தொழில் பேட்டையைக் கண்டு மகிழ்ந்தனர்.

திட்டத்தின் சாதனை—விவசாயம்

(ஸ்ரீ டி. என். சேஷன், ஐ. ஏ. எஸ். துணைக் காரியதரிசி, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை.)

வேளாண்மைத் தொழில் இந்த நாட்டில் மிக முக்கிய மான தொழில். இந்தியக் குடியானவன் மிகவும் பழம்பெருமை வாய்ந்தவன். வேதங்களிலும், பழந் தமிழ் இலக்கியங்களிலும் விவசாயத்தைப் புகழ்ந்து பல கருத்துரைகள் காணப்படுகின்றன. இன்றைக்கும் விவசாயம்தான் நமது நாட்டின் "பிரதானமான தொழில்" என்று சொன்னால் அதில் தவறு ஒன்று மில்லை. நம் நாட்டு மக்களில் 75 சதவிகிதம் பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். இந்த நாட்டில், லட்சோப லட்சக்கணக்கான குடும்பங்கள், விவசாயத்தையே நம்பி வாழ்கின்றனர். நாட்டிற்கு உணவளிக்கும் விவ சாயி, சமூகத்தின் தலையாய தொண்டன் ஆவான். வரப் புயர வாழ்வு உயரும். நம் நாட்டைப் பொறுத்த வரை யில், விவசாயத் துறையின் வளர்ச்சி ஜீவாதாரமானது. விவசாயத் துறையில் வளர்ச்சி காணாமல் மற்ற எந்த விதமான வளர்ச்சியினாலும் முழுப்பயனை நாம் அடைந்து விட முடியாது.

கடந்த பதினைந்து ஆண்டுகளாக நம்முடைய உணவுப் பிரச்னை மிக முக்கியமானதொரு பிரச்னையாக மாறி விட்டிருக்கிறது. உணவு விஷயத்தில் தன்னிறைவு பெறுதல் என்பது ஒரு லட்சியமாக, ஒரு சுலோகமாகவே மாறிவிட்டது எனலாம். ஆனால் இந்தப் பிரச்னையை நாம் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். இந்தப் பிரச்னையின் அடிப்படையில் காணப்படும் முக்கிய அம்சங் கள் என்னென்ன என்பதை நாம் மனத்தில் கொள்ள வேண்டும்.

உணவு விஷயத்தில் தன்னிறைவு பெற....

உணவு விஷயத்தில் தன்னிறைவு என்றால் அது இந்த நாடு முழுமைக்கும்தான். ஒரு மாநிலத்திற்கோ, ஒரு மாவட்டத்திற்கோ மட்டுமல்ல. நாம் உண்ணும் உணவு வகைகள் மற்றொரு முக்கியமான அம்சமாகும். உணவு உற்பத்தி அவ்வப்பொழுது மாறும் தன்மையுடையது. அத்துடன் உணவை உபயோகப்படுத்துவதின் அளவு மெள்ள மெள்ள அதிகமாகிக்கொண்டு வருகிறது. ஆண்டு தோறும் அதிகமாகிக்கொண்டு வரும் ஜனப்பெருக்கம் இதற்குக் காரணம். நாம் உணவுப் பிரச்னையை தீர்க்கப் பாடுபடும்போழுது இந்த அம்சங்களையெல்லாம் மனத்தில் கொள்ளவேண்டும்.

உணவு விஷயத்தில் தன்னிறைவு பெற அரசாங்கம் முழுமூச்சுடன் வேலை செய்து வருகிறது. உணவு உற்பத் தியைப் பெருக்க வேண்டியதின் அவசியத்தை யாவரும் உணர்ந்திருப்பது சுபிட்சமான எதிர்காலத்திற்கான நல்ல தொரு அறிகுறியாகும். உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பது. திடீரென்று செய்து விடுகின்ற காரி யம் இல்லை. "மந்திரத்தில் மாங்காய் விழுந்து விடாது." கடுமையான உழைப்பு, செம்மையான முறையில் திட்டங் கள் தீட்டி வேலை செய்தல், காலத்திற்குத் தகுந்த நவீன வேளாண்மை முறைகளைக் கையாளுதல், எல்லாவற்றிற்கும் மேலாக, நம்பிக்கை உணர்வுடனும் ஒத்துழைப்பு மனப் பான்மையுடனும் பாடுபடுதல், இவை அத்தனையும், இத் துறையில் வெற்றி பெற மிகவும் முக்கியமானதாகும்.

மூன்றாவது ஐந்தாண்டுத்திட்டத்தின் கீழ் பலவித துறைகளுக்காக அபிவிருத்தித் திட்டங்கள் உருவாகி யுள்ளன. அவற்றில் விவசாய உற்பத்தித் திட்டம்தான் மிகவும் முதன்மையானது. திட்டமிட்ட முறையில் இந்த உணவு உற்பத்திப் பெருக்க வேலை நடைபெறவேண்டும். இதுவரையில் இப்படித் திட்டமிட்டு வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லாமல் இருந்தது. இப்பொழுதுள்ள நிலை யில் இந்த மாதிரி திட்டமிட்ட முறையில் வேலை செய்ய வேண்டியது அவசியமாகிறது. வருடாவருடம் மக்கள் தொகை பெருகிக் கொண்டே போகிறது அதிகரித்துக் கொண்டே போகும் இந்த மக்கள் அத்தனை பேருக்கும் உணவு அளித்தாக வேண்டும்.

நம் நாட்டைப்பொறுத்தவரையில் உணவு உற்பத்தியைப் பெருகுதல் என்பது முக்கியமாக ஒரு நிர்வாகப் பிரச்னையே யாகும். இந்தத் துறையில் புதிய விஞ்ஞான முறைகளை கண்டுபிடிக்க வேண்டும் என்பது தற்போது உடனடிப் பிரச்னை அல்ல நமது விவசாயிகள் உற்பத்திப் பெருக் கத்திற்காக புதிகாக எந்த விஞ்ஞான முறையையும் கண்டுபிடிக்க வேண்டுவதில்லை. சென்ற பத்தாண்டுக் காலமாக வேளாண்மை அபிவிருத்திக்குச் சொல்லப்பட்டு வரும் யோசனைகளை காரியாம்சத்தில் அனுசரிக்கச் செய்ய வேண்டும். அதுவே இன்றைய உடனடித் தேவையாகும். பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் அனைவருமே இந்தப் புதுமுறைகளை அனுசரிக்கும்படி செய்ய வேண்டும். அந்த வகையில், இது முக்கியமான நிர்வாகப் பிரச்னை யாகும்.

மேல் நாடுகளிலும், இதர அபிவிருத்தி அடைந்த நாடுகளிலும் புதிய முறைகளை அனுசரித்து உணவு உற் பத்தியைப் பெருக்குகிறார்கள். புதிய முறையைக் கண்டு பிடிப்பதற்கும், அதைப் பெரும்பாலான விவசாயிகள் நடைமுறையில் அனுசரிப்பதற்கும் இடையே உள்ள கால அவகாசம், அந்த முன்னேற்றமடைந்த நாடுகளில் மிகவும் குறைவு. அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்தக் கால அவகாசம் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள்தான். ஆனால், இந்தியாவில் இந்த இடைவெளிக்காலம் மிகவும் அதிகம். புதிய முறைகளைக்கண்டுபிடிப்பதற்கும், அதைக் காரியத்தில் அமுலாக்குவதற்கும் இடையே உள்ள கால

நீட்டத்தைக் கணிசமாகக் குறைக்க வேண்டும். பெரும்பாலான குடியானவர்கள் இந்தப் புதிய முறைகளை அனுசரிக்க ஆரம்பித்துவிட்டால், அவர்கள் மேலும் புது விஞ்ஞான வசதிகளைக் கோருவது இயற்கை. வருங்காலத்தில், நமது ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு இத்தகைய நிலைமை ஏற்படலாம்.

ஏற்கனவே உள்ள முறைகளைக் கொண்டே நமது நாட்டில் உணவு உற்பத்தியைக் கணிசமாக அதிகரிக்க வாய்ப்பு இருக்கிறது. ஏற்கனவே சிபார்சு செய்யப்பட்டுள்ள திருந்திய சாகுபடி முறைகளை எத்தனை விவசாயிகள் பின்பற்றுவார்கள் என்பதை யூகிப்பது கஷ்டம். வருங்காலத்திற்குத் திட்டமிடுவதில் நமக்கு இது ஒரு பிரச்னையாக இருக்கிறது.

உணவு உற்பத்தித் திட்டங்கள்

உணவு உற்பத்தித் திட்டங்களை இரண்டு பெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள், நில மீட்பு, இறைவைப் பாசனம், மண்வளப் பாதுகாப்பு ஆகிய பணிகள் ஒரு பிரிவில் சேரும். இந்த வேலைகள் பெரும்பாலும் இலாகா மூலமே செய்யப்பட்டு வருகின்றன. சென்ற சில வருடங்களின் அனுபவத்தைக் கொண்டு, வருங்காலத்தில் எந்த அளவுக்கு இந்த வேலையை நிறைவேற்ற முடியும் என்பதை நாம் கணித்து சொல்லிவிடலாம்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதில், இரண்டாவது பிரிவு முக்கியமாக வேளாண்மைச் சாகுபடி முறைகள் சம்பந்தப்பட்டவையாகும். இது முக்கியமாக குடியானவர்களே செய்ய வேண்டிய வேலை. பொறுக்கு விதை, கலவை எரு உற்பத்தியை அதிகரித்தல், ஜப்பானிய சாகுபடி முறை முதலியவைகளை மேற்கொள்ளுவதா வேண்டாமா என்பதைப்பற்றியெல்லாம் தீர்மானம் செய்ய வேண்டியவர் தனிப்பட்ட விவசாயியே ஆவார். முந்திய அனுபவங்களை அனுசரித்து, விவசாயிகள் எந்த அளவுக்கு இவைகளை மேற்கொள்வார்கள் என்பதை நாம் மதிப்பிடவேண்டும்.

தற்பொழுது சென்னை மாநிலமாக அமைந்துள்ள பகுதிகளில் 1949–50-ல் உணவு உற்பத்தி சுமார் 30 லட்சம் டன்களாக இருந்தது. 1955–56-ல் இந்த உற்பத்தி 44 லட்சம் டன்களாக அதிகரித்தது. அதாவது சுமார் 14 லட்சம் டன் அதிகமாக உணவு உற்பத்தி பெருகியது. உணவு உற்பத்தியைப் பெருக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், பருவமழை நிலைமை இவை இரண்டும் இதற்கு முக்கியமான காரணங்களாகும்.

இரண்டாவது திட்டக் காலத்தில் இந்த உற்பத்தியை சுமார் 16 சதவிகிதம் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டது. பிற்பாடு இந்த இலக்கின் அளவு சிறிது உயர்த்தப்பட்டது. பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள், சிறிய நீர்ப்பாசன வசதிகள், ரசாயன உரம், இதர எரு வகைகள், பொறுக்கு விதைகள், நில மீட்பு, மண்வளப் பாதுகாப்பு, திருந்திய விவசாய முறைகள் ஆகியவை மூலம் உணவு உற்பத்தியை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென திட்டமிடப்பட்டது.

சிறிய நீர்ப்பாசன வசதிகளின் கீழ், உணவு உற்பத்தி இலாகாவானது ரூ. 3.42 கோடி ஒதுக்கியது. அதே சமயத்தில் இந்த வேலைகளுக்காக சமுதாய நல வளர்ச்சித் திட்ட நிதியிலிருந்து ரூ. 2 கோடி ஒதுக்கப்பட்டது. சிறிய பாசன வேலை இவ்வாறு இரண்டு துறைகளிலிருந்தும் ஆதரிக்கப்படுகிறது.

இரண்டாவது திட்டத் துவக்கத்தில் அம்மோனியம் சல்பேட் உபயோக அளவு 85,000 டன்களாக இருந்தது. ஆனால், இரண்டாவது திட்டக் காலத்தில் இதன் உபயோக அளவு பலமடங்காகஅதிகரிக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டது. முதலாவது திட்ட ஆரம்பத்தில் நெல் விளையும் பரப்பில் சுமார் 50 சதவிகிதத்தில் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப்பட்டன. இரண்டாவது திட்ட முடிவில், சுமார் 80 சதவிகிதத்திற்கு மேல் மேற்பட்ட பகுதிகளில் பொறுக்கு விதைகள் பயன்படுத்தப்படுகின்றன.

திருந்திய சாகுபடி முறைகள் விஷயத்தில் குடியானவர்களிடையே இப்பொழுது நல்ல விழிப்பு ஏற்பட்டுள்ளது. பூச்சி பொட்டுகளைத்தடுப்பதற்காகக் மருந்து தெளிக்கும் பயிர்ப் பாதுகாப்பு முறைகள் இப்பொழுது பரவலாக அனுசரிக்கப்படுன்றன. இதன் மூலம் உணவு உற்பத்தி கணிசமான அளவு அதிகரிக்க வசதி ஏற்பட்டுள்ளது. மாநிலத்தில் தற்போது கணிசமான பகுதி தேசிய நலப் பாரப்பு பணியின் அனுகூலங்களை அடைந்து வருகிறது. இந்தப் பணியினால் விவசாயிகள் அடையும் அனுகூலம் குறிப்பிடத்தக்காதாகும். கிராமச் சேவக்குகளும், விவசாய உதவிப்பணியாளர்களும் கிராமவாசிகளிடம் தொடர்பு கொண்டு, கலவை எருவைத்தயாரித்தல், தழை உரம், பொறுக்கு விதை விநியோகம் ஆகிய துறைகளில் உதவி புரிகிறார்கள். உணவு உற்பத்திப் பெருக்கத்தில் தனிப்பட்ட விவசாயிகளுக்குப் பரிசுகள் அளிக்கும் திட்டமும், குடியானவர்களின் கவனத்தைக் கவர்ந்திருக்கிறது. இப்பொழுது தஞ்சை மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டிருக்கும் தீவிர உணவுப் பெருக்கத் திட்டம், மாநிலத்தில் விவசாயத் துறையில் ஒரு புதிய திருப்பு முனையை ஏற்படுத்துமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், விவசாயிகளுக்கு எல்லாவித உதவிகளும் அளிக்கப்படுகின்றன.

மூன்றாவது திட்டக் காலத்தில், நாம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற வேண்டுமென்றால், உணவு உற்பத்தி 60 லட்சம் டன்னாக இருக்க வேண்டுமெனக் கணக்கிடப்பட்டுள்ளது. பருவ மழை சரியாகப் பெய்யும் வருடத்தில் உணவு தானிய உற்பத்தி 10 லட்சம் டன் கூடும். மழை குறைந்தால் 10 லட்சம் டன் குறையும். எனவே, தன்னிறைவுக்கான 70 லட்சம் டன் உணவை உற்பத்தி செய்வது நமது குறிக்கோளாக இருக்க

வேண்டும். நாம் அதிகமாக உற்பத்திச் செய்ய வேண்டியது சுமார் 17 லட்சம் டன் என்று இதிலிருந்து கணக்கிட்டுக் கொள்ளலாம். அதாவது, உணவு உற்பத்தியை நாம் கிட்டத்தட்ட 33 சதவிகிதம் அதிகரிக்க வேண்டும். இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் நாடு பெற்றுள்ள அனுபவத்தைக் கொண்டு, மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் விவசாயத்தை மேலும் தீவிரமாக செயல் படுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. உணவு தானியங்களின் உற்பத்தியை மேலும் 33 சதவிகிதம் பெருக்க வேண்டியது மிகவும் அவசியம். ரசாயன உரங்களை உபயோகித்தல், தழை உரம், கலவை எரு முதலிய உள்ளூர் உரங்களைத் தயாரித்து உபயோகித்தல் ஆகியவற்றின் மூலம் இந்த அதிகப்படியான உணவு உற்பத்தியை அடையலாம். மேலும் நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதின் மூலமும், மண் வளப் பாதுகாப்புக்கான நடவடிக்கைகளை எடுப்பதின் மூலமும் இந்த இலக்கை அடைய முடியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

"கல்யாணகுப்பம் காட்டும் வழி"

விவசாயத் துறையில் வெறும் புள்ளிவிவரங்களினுல் ஒரு பலனும் இல்லை. சிறந்த முறையில் பாடுபட்டு நல்ல முறையில் பலன் காணுவதற்கான வழிவகைகளை அமைக்க வேண்டியது அவசியம். அரசாங்கம் இத்துறையில் பெற்றுள்ள அநுபவத்தையும் சேவையையும், தன்னுடைய அதிகாரிகள் மூலம் பொதுமக்களுக்கு அளிக்க எப்பொழுதும் தயாராக உள்ளது. என்னதான் அரசாங்கம் இத்துறையில் பாடுபட்டாலும், கிராம மக்களின் ஒத்துழைப்பு இன்றேல் ஒரு பயனும் இருக்காது. கிராம மக்கள் பொறுப்பை உணர்ந்து, அரசாங்கத்தின் செயல்களைப் புரிந்துகொண்டு, திட்டம் போட்டு விவசாயத் துறையில் வேலை செய்ய முன் வரவேண்டும். கிராம மக்கள் தங்களுடைய கிராமத்திற்கென்று ஒரு வேளாண்மைத் திட்டத்தை உருவாக்க வேண்டியது மிகவும் அவசியம். திட்ட வேலைகளில் மக்களின் ஈடுபாடும், நேரடித் தொடர்பும் இல்லாவிட்டால் முழுப்பயனை அடைய முடியாது. செங்கல்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் வட்டாரத்தில் உள்ள கல்யாண குப்பம் கிராமத்தில் சென்ற ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் அமைதியானதொரு புரட்சி நடந்தேறியது. அந்தக் கிராம மக்கள் ஒன்று கூடி தங்கள் கிராமத்திற்கென்று ஒரு விவசாயத் திட்டம் ஒன்றைத்தாங்களே உருவாக்கினுர்கள். இரண்டே தினங்களில் திட்ட வேலை முடிந்துவிட்டது. மாநில அபிவிருத்திக்கமிஷனர் முன்னிலையில் அந்தக் கிராம மக்கள் ஒன்று கூடி திட்டம் தீட்டினர். சென்னை மாநில ஆட்சியின் வரலாற்றில் கல்யாண குப்பம் கிராமச் சம்பவம் ஒரு நல்ல திருப்பு மையம். சீரிய பணியைச் செயலாற்றுகின்ற துறையில் முன்னேடியாக திகழ்கிறது அக்கிராமம் என்ருல் மிகையாகாது. "கல்யாண குப்பம் காட்டும் வழி" யை மாநிலத்தில் உள்ள மற்ற கிராமங்களும் கடைப்பிடிக்கவேண்டும் என அரசாங்கம் விரும்புகிறது ஒவ்வொரு கிராமமும் தனக்கென்று ஒரு உணவு உற்பத்தித் திட்டத்தைத் தாங்களே உருவாக்கிச் செயலாற்ற வேண்டியது மிகவும் அவசியம் என அரசாங்கம் கருதுகிறது.

உயர்தரச் சாகுபடி மூலம் 12·5 சத விகிதமும், மேற்கொண்டும் அதிக அளவில் ரசாயன உரங்களைப் பயன்படுத்துவது மூலமாக 12·5 சத விகிதமும், நீர்பாசன வசதிகளைப் பெருக்குவதின் மூலமாக 8·00 சத விகிதமும், ஆக மொத்தம் 33 சத விகித அளவில் மேற்கொண்டு வேளாண்மை உற்பத்தியைப் பெருக்க முடியும்.

இவ்வாறு உற்பத்தியை அதிகரிப்பதற்கான மூன்று வழிகளில் உயர்தரச் சாகுபடி முதன்மையானதும், மிக முக்கியமானதுமாகும். இந்தச் சாகுபடி சம்பந்தமாகச் செய்யவேண்டிய ஆரம்ப வேலைகளைப் பஞ்சாயத்து நிர்வாகம் கவனித்து வர ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

நீர்ப்பாசன வசதிகளைப் பெருக்குவதில் பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு பொறுப்பு உண்டு. இந்த ஸ்தாபனங்களின் பராமரிப்பில் விடப்பட்டிருக்கும் சிறிய நீர்ப்பாசன வேலைகளில் சிறிய சிறிய அபிவிருத்திகளைச் செய்யவும், அவைகளால் பராமரிப்புக்கு என்று எடுத்துக்கொள்ளப் பட்ட குடி மராமத்து சம்பந்தமான வேலைகளைப்பற்றியும் அவைகள் வேண்டுவன செய்யவும் அவைகளுக்கு அதிகாரமுண்டு.

வேளாண்மை உற்பத்தி வளர்ச்சித் திட்டப்பணிகளை நிறைவேற்ற போதிய நிதி வசதிகளை அவைகளுக்கு அரசாங்கம் மானியமாக அளிக்கும். ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திற்கும் ரூ. 2 லட்சம் வேளாண்மை மானியமாகக் கிடைக்கும்.

பஞ்சாயத்து ஸ்தாபனங்கள், அரசாங்கம் அளிக்கும் மானியம், சேவை, ஆகியவற்றைப் பெற்று, தங்களுடைய வேளாண்மைத் திட்டங்களைத் தயாரித்து, வெற்றிகரமாக நிறைவேற்றினுல், மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயே உணவு நிலையில் நாம் மிகவும் முன்னேற்றமடைந்து விடுவோம் என்பது உறுதி.

(17-1-61-ல் சென்னை வானெலி நிலயத்திலிருந்து நிகழ்த்திய பேசசு)

—:—:—

பஞ்சாயத்துத் தலைவர்களின் சென்னை விஜயம்

அறிவொளி பரப்பும் பயிற்சித் திட்டம்

அகில இந்திய கதர் கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி சென்னை தேனாம்பேட்டையிலே 1960-ம் ஆண்டு டிசம்பர் 24உயில் தொடங்கி, தொடர்ந்து ஆறு வாரங்கள் நடைபெற்றது. இவ்வாண்டு நடைபெற்ற இப்பொருட்காட்சி மிகவும் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டிய தாகும். வெறும் பொழுது போக்குக் கண்காட்சியாக இராமல், அறிவுக்கும் சிந்தனைக்கும் சீரியதொரு விருந்தாக இப் பொருட்காட்சி அமைந்திருந்தது எனலாம்.

வேளாண்மைத் துறை, கால்நடைப் பராமரிப்புத் துறை, வன வளப் பாதுகாப்புத் துறை, சிறு கைத் தொழில்கள் பிரிவு, ஹரிஜன நலத் துறை, கல்வித் துறை, மாதர் நலத் துறை, புள்ளி விவரத் துறை, மற்றும் கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை ஆகிய அரசாங்க இலாகாக்கள் அத்தனையும் இப் பொருட்காட்சியில் பங்கெடுத்துக் கொண்டன. காந்திய நெறியில், இப் பொருட் காட்சி அமைவதற்கு, மிகவும் உழைத்த அனைவர்க்கும் சிறப்பாக, அதன் செயலாளர்கள் ஸ்ரீ கே. பி. வி. கிரி, ஸ்ரீ சந்திரசேகர முதலியார் ஆகியோர் பாராட்டுதலுக்கு உரியவராவர்.

1958-ம் ஆண்டு சென்னைப் பஞ்சாயத்துக்கள் சட்டத்தின் அம்சங்களை விளக்கிக் காட்டும் வகையிலும் இந்த மாநிலத்தில் பஞ்சாயத்து நிர்வாகத்தின் விசேஷமாகக் குறிப்பிடத்தக்க அம்சங்கள் அத்தனையும் விளக்கிக் காட்டும் வகையிலும், கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையினர் ஏற்பாடு செய்திருந்தனர். புதிய பஞ்சாயத்து ஆட்சி பற்றி அறிவொளி பரப்பும் திட்டத்தின் ஒரு பகுதியாக இந்த ஏற்பாடுகள் விளங்கின என்று சொல்லலாம். கிராம அபிவிருத்தி சம்பந்தப்பட்ட மட்டில் என்னென்ன சாதனைகள் இது வரையில் செய்யப்பட்டிருக்கின்றன, அடைந்துள்ள பயன்கள் யாவை, இன்னும் செய்யப்பட வேண்டிய வேலைகள் என்னென்ன என்பது பற்றியும், முதல் இரண்டு ஐந்தாண்டுத் திட்டக் காலங்களிலும் செய்யப்பட்டுள்ள சாதனைகள் பற்றியும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் அடிப்படை நோக்கங்களை விளக்கிக்கூறும் வகையிலும், இப் பொருட்காட்சி விளங்கியது எனலாம்.

விஜயத்தின் நோக்கம்

மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டத்தின் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த மாநிலத்தில் செய்யப்பட்டுள்ள சாதனைகளையும், சர்வோதயக் கொள்கையின் தத்துவங்களை விளக்கிக் காட்டும் வகையிலும் அமைக்கப்பட்டிருந்த இப் பொருட்காட்சியை இந்த மாநிலத்திலுள்ள பஞ்சாயத்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் கண்டால், அவர்கள் இத் துறைகளில் ஏற்பட்டுள்ள அபிவிருத்திகளை நேரில் கண்டறியும் வாய்ப்பும், அன்றாட பஞ்சாயத்து வேலைகளை நிறைவேற்றுவதில் அவர்களுக்குப் பயிற்சியும் கிடைக்கும் என்று அரசாங்கம் கருதியது. அத்துடன் நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கின்ற பஞ்சாயத்துக்களின் தலைவர்கள், இப்படிப்பட்ட பொருட்காட்சியைக் கண்டு களிப்பதோடு, மாநிலத்திலே தொழில் துறையிலே ஏற்பட்டுள்ள மகத்தான வளர்ச்சியைப் படம் பிடித்துக் காட்டும் வகையில் விளங்கும் பெரிய பெரிய தொழில் நிறுவனங்களையும், இப் பஞ்சாயத்துத் தலைவர்கள், நேரில் காண ஒரு வாய்ப்பு அளித்தால், அதனால் விளையும் பலன் மகத்தானதாக இருக்கும் அல்லவா ?

இதை யெல்லாம் அரசாங்கம் கவனத்துடன் ஆராய்ந்து பார்த்தது. மாநிலத்திலுள்ள எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு, பயன் பெறுதல் அவசியம் என அரசாங்கம் கருதி, எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களும் இந்தப் பொருட் காட்சியை வந்து பார்க்கும்படியும், மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள பெரிய பெரிய தொழில் ஸ்தாபனங்களைக் கண்டு இந்த மாநிலத்தில் ஏற்பட்டுள்ள மகத்தான வளர்ச்சியைப்பற்றி நேரில் தெரிந்து கொள்ளும் படியும், சென்னைக்கு வருமாறு பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு வசதி செய்து தரப்பட்டது.

ஜனவரி மாதத்தில், கன்யாகுமாரி, நீலகிரி, மதுரை, திருநெல்வேலி, கோயமுத்தூர், ராமநாதபுரம், தஞ்சாவூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் பெருவாரியான அளவில் அவரவர்களுக்குக் குறிப்பிட்ட தேதிகளில், சென்னைக்கு விஜயம் செய்தனர். அவர்கள் மாவட்ட வாரியாக சென்னைக்கு வந்து, தங்கியிருந்த சில தினங்கள், மிகவும் முக்கியமானதாகும். அவர்களுடைய விஜயம், பலவகைகளிலும் மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. அவர்களுக்கு தேனாம்பேட்டை பொருட்காட்சி மைதானத்தில் தங்குவதற்கு போதிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. குறுகிய காலத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டியிருந்ததால், சௌகரியங்களை யெல்லாம் விரிவாகச் செய்ய இயலவில்லை. ஆயினும், பெரும்பாலான பஞ்சாயத்துத் தலைவர்கள், அசௌகரியங்களைப் பொருட்படுத்தாமல், ஒற்றுமையோடும், திருப்தியோடும் ஒன்றாகத் தங்கியிருந்து, பயிற்சித் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியது, பாராட்டத் தக்க செய்தியாகும்.

அகில இந்திய கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சி, அதன் பெயருக்கேற்ப, எல்லா வகைகளிலும் கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சியாகவே விளங்கியது என்று கூறலாம். மகாத்மா காந்தியின் நிர்மாணத் திட்டங்களைத் தெளிவாக விளக்கிக் காட்டும் வகையில், கண்காட்சி அமைந்திருந்தது. சர்வோதயக் கொள்கைகளை விளக்கிக் காட்டும் காட்சிப் பொருள்கள், அறிவுக்கு விருந்தாகவும், மனத்திற்கு சாந்தியை அளிப்பதாகவும் விளங்கின. மகாத்மா காந்தியடிகள் கண்ட கனவு,

கிராம ராஜ்யம் அமைக்க வேண்டுமென்று அவருடைய லட்சியம், எந்த அளவுக்கு நனவாகிக் கொண்டு வருகிறது என்பதை தெள்ளத்தெளிய இப் பொருட்காட்சியில் விளக்கிக் காட்டியிருந்தனர்.

பொருட்காட்சி மைதானத்தின் நடுவில் மகாத்மாவின் சேவா கிராம குடில் போன்ற 'மாதிரிக் குடில்' ஒன்றை, அமைத்துக் காட்டியிருந்தார்கள். இந்த மாதிரிக் குடி லின் தோற்றம் எல்லோருடைய கவனத்தையும் கவர்ந்து நின்றது. அன்பையும் அமைதியையும், அஹிம்சையும் தாராக மந்திரமாகக் கொண்டு, மகாத்மா அவர்கள், எந்த ஒரு லட்சியத்தை மனத்தில் கொண்டு அல்லும் பகலும் பாடுபட்டாரோ, அந்த லட்சியத்தின் சின்ன மாகவே விளங்கியது, சேவா கிராம குடில். எளிமைக்கும் அமைதிக்கும் இருப்பிடமான சேவா கிராமம் மாதிரி அமைப்புக் குடில், இந்தப் பொருட்காட்சியில் அமைக்கப் பட்டிருந்தது சாலப் பொருத்தமுடையதாகும்.

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையின் அரங்கு

கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறையாரின் பிரிவு, பஞ்சாயத்துக்கள்பற்றிய அறிவொளி பரப்பும் பகுதியாக விளங்கியது. கிராமப் பஞ்சாயத்து என்றால் என்ன? பஞ்சாயத்துக் கிராமம் எவ்வாறு செயல்பட வேண்டும்? புதிய பஞ்சாயத்து ஆட்சி முறையால், ஏற்பட்டுள்ள குறிப்பிடத்தக்க மாற்றங்கள் என்னென்ன? மாதிரி கிராமம் எவ்வாறு அமையவேண்டும்? தொடக்கக் கல்வி விஷயத்தில் பஞ்சாயத்து ஸ்தாபனங்களின் பொறுப்புகள், என்னென்ன? இந்த எல்லா அம்சங் களையும், நல்ல முறையில் விளக்கிக் கூறும் வகையில் கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறையின் அரங்கு அமைந்திருந்தது.

கதரின் அவசியத்தை வலியுறுத்தும் வகையிலும் கதர் எவ்வாறு ஏழைகளின் வறுமையைப் போக்க உதவுகிறது என்பதை விளக்கியும் காட்டும் வகையில் கண்காட்சி விளங்கியது. நமது மாநிலத்தில் நடை பெறும் விவசாய அபிவிருத்தி வேலைகள், தீவிர சாகு படித் திட்டத்தை நடத்தும் முறை, திருந்திய விவசாயக் கருவிகளின் அவசியம், வேளாண்மைத்துறையில் ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சி, விவசாய அபிவிருத்தி பஞ்சாயத்துக்களின் தலையாய கடமை முதலியவற்றைக் காட்டும் வகையில் கண்காட்சி விளங்கியது.

வந்திருந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் அத்தனை பேரும் இந்தப் பொருட்காட்சியைக் கண்ணுற்று பெருமகிழ்ச்சி அடைந்தனர். பஞ்சாயத்துத் தலைவர்களின் சென்னை விஜயம், முழுப் பயனை அளிக்கும் வகையில், சென்னையை சுற்றியுள்ள பெரிய தொழிற்சாலைகளையும் பஞ்சாயத்துத் தலைவர்கள் கண்டு களித்தனர். இந்த மாநிலத்தில் தொழில் துறையில் அடைந்திருக்கும் மகத்தான வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் தொழிற்சாலைகளை மாநிலத் தின் பல்லாயிரக்கணக்கான கிராமங்களின் பிரதிநிதி களாக வந்திருந்த பஞ்சாயத்துத் தலைவர்கள் கண்டால் அதனால் விளையும் பயன் மிகப் பெரிது அல்லவா? நாட்டின் தொழில் வளர்ச்சி கிராமங்களில் நன்கு தெரிய, இதைவிட அரிய வாய்ப்பு வேறு இல்லை அல்லவா?

பெரம்பூர் ரயில் பெட்டித் தொழிற்சாலை

பெரம்பூரில் உள்ள ரயில் பெட்டிகள் கட்டும் தொழிற் சாலையை, பஞ்சாயத்துத் தலைவர்கள் பார்வையிட்டனர். 1955-ம் ஆண்டு, அக்டோபர் மாதம் 2-ம் தேதி, இந்தியப் பிரதமர் நேரு அவர்கள் இந்தத் தொழிற்சாலையைத் தொடங்கி வைத்தார். உலகிலுள்ள பெரிய ரயில்பெட்டி தொழிற்சாலைகளில் இதுவும் ஒன்றாகும். இதற்காக முதல் திட்டக் காலத்தில் ரூ. 5.12 கோடி முதலீடு செய்யப்பட்டது. ரூ. 7.35 கோடி மொத்தச் செலவில் நமது நாட்டு ரயில் பெட்டிகளின் தேவையை நிறை வேற்றுவதற்காக இந்தத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. 8,48,000 சதுர அடி பரப்புள்ள இடத்தில் அடைந்துள்ள இத் தொழிற்சாலையில் 10 பிரிவுகள் இருக்கின்றன. தற்போது இந்தியாவில் செய்யப்படும் கருவிகளைக் கொண்டே, மாதம் 50 பெட்டிகள் வீதம் செய்யப்படு கின்றன. இந்தியாவில், குறிப்பாகச் சென்னையிலும், சுற்றுப்புறங்களிலும் அநேக நடுத்தரத் தொழில்களிலும், சிறுதொழில்களிலும் வளர இந்தத் தொழிற்சாலை வகை செய்கிறது. நம் சர்க்காரின் மகத்தான சாதனைகளில் ஒன்றான பெரம்பூரில் ரயில் பெட்டிகள் கட்டும் தொழிற் சாலையை சென்னைக்கு விஜயம் செய்த பஞ்சாயத்துத் தலைவர்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

கிண்டியில் உள்ள தொழிற்பேட்டையும் பஞ்சாயத்துத் தலைவர்களின் கவனத்தைக் கவர்ந்தது. இந்தியா வெங்கும் புகழ் பெற்று விளங்குவதும், முதல் ஸ்தானம் பெற்று விளங்குவதுமானது கிண்டியில் உள்ள தொழிற் பேட்டையே. சிறு தொழில் அபிவிருத்தியில் இந்தத் தொழிற் பண்ணை மகத்தான சேவையைச் செய்திருக் கிறது. 100 ஏக்கர் நிலப்பரப்பில் 97 தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான முயற்சி 1957-ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் மேற்கொள்ளப்பட்டது. சிறு தொழில் வளர்ச்சியை தெளிவாக விளக்கிக் காட்டும் வகையில் அமைந்துள்ள கிண்டி தொழிற்பேட்டை, நம் நாட்டு தொழில் வளர்ச்சியில், ஒரு மைல் கல்லாகும். தலை நகருக்கு விஜயம் செய்த பஞ்சாயத்துத் தலைவர்கள், கிண்டித் தொழிற்பேட்டையைப் பார்வையிட்டபொழுது, அவர்கள் காட்டிய ஊக்கமும், ஆர்வமும் விசேஷமாக குறிப்பிடப்படவேண்டியவையாகும். மற்றும் எண்ணூரில் உள்ள மோட்டார் தொழிற்சாலை, வண்டலூரிலுள்ள மோட்டார் தொழிற்சாலை, அம்பத்தூரில் உள்ள சைக்கில் தொழிற்சாலை ஆகியவற்றையும் பஞ்சாயத்துத் தலைவர் கள் பார்த்து மகிழ்ந்தனர். அவர்கள் தங்கள் தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் சென்று, நம் நாட்டின் தொழில் வளர்ச்சியைப் பற்றித் தாம் கண்டதை, மற்ற வர்களோடு கலந்து மகிழ்வார்கள் என்பது உறுதி.

G.N.—4

பஞ்சாயத்துத் தலைவர்களின் சென்னை விஜயம், வெறும் சுற்றுப்பயணம் மட்டும் அல்ல. அது விசேஷமாக, பஞ்சாயத்து பற்றிய அறிவொளி பரப்பும் திட்டத்தில் முக்கியமான பகுதியாகும். பொருட்காட்சிகள், தொழிற்சாலைகளைப் பார்வையிடுதல் ஆகியவற்றோடு, பஞ்சாயத்து தலைவர்களின் விஜயம் முடிந்து விடவில்லை. நம் சென்னை மாநிலக் கவர்னர், அமைச்சர்கள், முக்கிய அதிகாரிகள் ஆகியோரை பஞ்சாயத்துத் தலைவர்கள் கண்டு அளவளாவும் வாய்ப்புக் ஏற்பட்டது. அமைச்சர்களும், பஞ்சாயத்துத் தலைவர்களிடம் கலந்து பேசி கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

பஞ்சாயத்துத் தலைவர்கள்—அதிகாரிகள் நெருங்கிய தொடர்பு

மாநிலக் கவர்னர் ஸ்ரீ விஷ்ணுராம் மேதி பஞ்சாயத்து தலைவர்களுக்கு தனிச் சிறப்பளித்து தேனீர் விருந்தளித்து, பஞ்சாயத்து ஆட்சியின் வெற்றியில் எல்லோரும் எவ்வாறு பயன்படும் வகையில் பணியாற்றவேண்டும் என்பதை, மிக அழகாக எடுத்து விளக்கினார். முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் பஞ்சாயத்துத் தலைவர்களிடம்மனம் விட்டுப் பேசினார் (பக்கம் 2 பார்க்க). புதிய பஞ்சாயத்துச் சட்டத்தினால் ஏற்பட்டுள்ள முற்போக்கான மாற்றங்கள்பற்றி அவர் குறிப்பிட்டதுடன். பஞ்சாயத்துக்களில் அரசியல் கட்சி பூசல்களுக்கு இடமில்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு உருக்கமான வேண்டுகோள் விடுத்தார். மற்ற அமைச்சர்களும் வேண்டிய அறிவுரைகள் வழங்கினார்கள். பஞ்சாயத்து பற்றிய கருத்தரங்கு நடைபெறுவது போல் தினந்தோறும் பொருட்காட்சி மைதானத்தில் பிரார்த்தனையும் கூட்டங்களும் நடைபெற்றன.

புதிய நிர்வாகத்தை ஏற்றுக் கொள்ளத் தயாராய் இருக்கும் எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களையும், பிரதமக் காரியதரிசி ஸ்ரீ ஆர். ஏ. கோபால்சாமி, ஐ.ஸி.எஸ்., கிராம அபிவிருத்திக் கமிஷனர் ஸ்ரீ கோ. வேங்கடாசலபதி, கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறையின் துணைக் காரியதரிசிகளும் நேரில் சந்தித்து பிரச்னைகளை விவாதித்து கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர். பஞ்சாயத்துத் தலைவர்களின் அனுபவங்களை அரசாங்கத்தின் உயர் அதிகாரிகள் நேரில் தெரிந்து கொண்டதில் பெரும் உண்மையும் பயனும் அடங்கியிருக்கிறது எனலாம்.

பஞ்சாயத்துத் தலைவர்களின் தலைநகர் விஜயம் ஒரு புதிய உணர்ச்சியை அவர்களிடையே ஊட்டி விட்டதென்றால் மிகையாகாது. எல்லாப் பஞ்சாயத்துத் தலைவர்களின் இப்புனித யாத்திரை, அமைச்சர்களின் கருத்துரைகள், சர்க்கார் அதிகாரிகள் பஞ்சாயத்து சட்ட நுணுக்கங்களைப் பற்றி தந்த அருமையான விளக்கங்கள், இவையெல்லாம் புதிய பஞ்சாயத்து ஆட்சியை ஏற்றுக் கொண்டிருக்கும் கிராமத் தலைவர்களுக்கு ஒரு வழி காட்டியாகவும் சிறந்த பயிற்சியாகவும் அமைந்தது என்று கூறலாம்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல், கட்சிப் பூசல்கள் கூடாது

பஞ்சாயத்துக்களில், அரசியல் குழப்பமே கூடாது. கட்சி வேறுபாடுகளுக்கோ, கட்சிப் பூசல்களுக்கோ, பஞ்சாயத்தில் இடம் இருக்கக்கூடாது. பஞ்சாயத்து ஒரு பொதுப்பணி. ஊரை உயர்த்தும் திருப்பணி. இந்த நல்ல காரியத்தில் குழப்பம் கூடாது. குழப்பத்தால், கெட்டுப் போவதற்குத் தான் வழி ஏற்படும். பஞ்சாயத்து ராஜ்யம் ஏற்பட்டு, நல்ல முறையில் நடக்கும்படியான சூழ்நிலை, நம்நாட்டில் ஏற்பட்டுள்ளது. இதற்கு முன்பெல்லாம், இவ்வளவு ஆர்வமும் உற்சாகமும் இருந்தது கிடையாது. இப்பொழுது, கிராம ஜனங்களிடையே நல்ல உற்சாகம் உண்டாகியிருக்கிறது.

புதிய பஞ்சாயத்துச் சட்டத்தை உருவாக்கி அமுல் நடத்தி வருகிறோம். இந்தச் சட்டம் ஒரு அமைப்பு முறைதான். அதில் உள்ள குறைபாடுகளைத் தெரிந்து கொண்டு, அவைகளைக் காலப் போக்கில் நீக்க முயலலாம். சிரமங்கள் என்ன, கஷ்டங்கள் என்ன, என்பதை உணர்ந்து சட்டத்தைத் திருத்திக் கொள்ளலாம். எந்தச் சட்டமும் திருத்தக்கூடியது தான். ஆனால், அதற்காக அடிக்கடி திருத்திக்கொண்டேயிருக்கக் கூடாது. நல்ல முறையில் அதை நடத்தப் பார்க்கும் பொறுமை நமக்கு வேண்டும்.

முன்பெல்லாம் பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அவ்வளவு மதிப்பு கிடையாது. இப்பொழுது மதிப்பு ஏற்பட்டிருக்கிறது. இது சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். அதற்கு நாம் என்ன செய்ய முடியும் ? பஞ்சாயத்துத் தலைவர்களாக இருப்பவர்கள், இதையெல்லாம் அனுசரித்துக் காரியங்களைச் செய்ய வேண்டும். யார் யார் கொஞ்சம் மனஸ்தாபப்பட்டுக் கொண்டு விலகி விலகியிருக்கிறார்களோ, அவர்களையும் கூப்பிட்டு எல்லாக் காரியங்களிலும் அவர்களையும் கலந்து கொண்டு, ஒற்றுமையோடு வேலை செய்ய வேண்டும். அப்படிச் செய்தால் அவர்களும் மனம் மாறி, நம்மோடு நிச்சயம் ஒத்துழைப்பார்கள். இதைச் சுலபமாகச் செய்து விடலாம். யாருக்குப் பிடிக்க வில்லையோ, அவர்களையும் அழைத்து யோசனை கேட்டால் என்ன ? நல்லது தானே !

ஊருக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். அதற்கு ஒற்றுமை தேவை. எல்லோரும் ஒற்றுமையாக இருந்து, நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மற்றபடி, உங்கள் குறைபாடுகளை அதிகாரிகளிடம் சொல்லுங்கள். வேண்டியதைச் செய்வார்கள்."

(தேனாம்பேட்டை மைதானத்தில் கிழக்கு ராமநாதபுரம் மாவட்டப் பஞ்சாயத்துத் தலைவர்களிடையே முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சுருக்கம்).

சோழ நாட்டு கிராமியப் பாடல்கள்

(புலவர் மணவை தங்கவேலன்)

தமிழகம் எத்தனையோ இலக்கியங்களைத் தன்னகத்தே கொண்டு பெருமை பெற்றிருக்கிறது. அவைகளில் பாமர இலக்கியமும் ஒன்று. பாமர இலக்கியம் ஏட்டில் எழுதப்படவில்லையே தவிர, எவர் உள்ளத்தினின்றும் அழிந்துபடவில்லை.

கிராமியப் பாடல்களை இக்காலத்தார் கிராமிய இலக்கியம் என்று வழங்குகின்றார்கள். நாட்டுப் புறத்திலே வாழும் தமிழ் மக்களிடம் வேரூன்றிவிட்ட இலக்கியம். இக்கிராமியப் பாடல்கள், குறிப்பாக திருச்சி மாவட்டத்திலுள்ள மணப்பாறை, சேர்வைக்காரன்பட்டி (சேர்வைநகர்) முதலிய பகுதிகளில் இன்றைக்கும் அதிகமாகத் தவழ்ந்து விளையாடுகிறது. இப்பகுதி மக்கள், கவிஞர்கள் பாடி வைத்ததை தாங்கள் பாடுவதில்லை. தங்களுடைய சுய கற்பனையில் எழும் எண்ணங்களை இலக்கண வரம்பிற்கு இலக்காகாமல் தங்களுக்குரிய இசையில் பாடி மகிழ்கிறார்கள். அவை இனிமையும் எளிமையும் வாய்ந்தவை. ஆறறிவு படைத்த மனிதனேயன்றி ஐயறிவுடைய மற்ற உயிர்களும் இவ்விசைக்கு மயங்கி நிற்கும் தன்மையை நாட்டுப் புறத்தில் நாம் காண முடியும்.

பழந்தமிழ் இலக்கியத்திலே நாட்டுப் பாடல்கள்

தீந்தமிழின் தொன்மையுடைய நூலாகிய தொல்காப்பியத்திலே நாட்டுப் பாடல்களின் இலக்கணம் கூறப்பட்டிருக்கிறது. ஆனைக் கதை போல அமைந்திருக்கும் கதைகளைப் "பொருளொடு புணராப் பொய் மொழி" என்றும், நகை விளைவிக்கும் கதைகளைப் "பொருளொடு புணர்ந்த நகைமொழி" என்றும், விடுகதைகளைப் "பிசி" என்றும், நாடோடிப் பாடல்களைப் "பண்ணத்தி" என்றும், பெயரிட்டுத் தொல்காப்பிய காலத்தில் வழங்கியதாகத் தெரிகிறது. "தலைமகளை வற்புறுத்தும் செவிலியர் உரைத்து நகுவித்து பொழுது போக்குதற்குறிய" என்று இளம்பூரணர் குறிப்பிடுகிறார்.

இங்ஙனம் தொல்காப்பியர் வகுத்த "பண்ணத்தி" இலக்கணத்திற்கு இலக்கியங்கள் தமிழ்நாட்டில் முறையாக இல்லையெனினும் ஆங்காங்கே பாடப்படும் கிராமியப் பாடல்களைக் கொள்ளலாம். புதுமைக் கவிஞர் பாரதியாரின் பாடல்களில் பெரும் பகுதி இப் பண்ணத்தி இலக்கணத்தைச் சார்ந்ததாகவே இருக்கிறது. ஏனெனில் அவை நாடோடிப் பாடல்கள் போல அமைந்திருப்பதால். தற்காலக் கவிஞர்கள் சிலரின் பாடல்களும் இவ்வகையில் வைத்து எண்ணத்தக்கனவே!

இவ்வகைப் பாடல்களில் தம் நெஞ்சைப் பறிகொடுத்தவர்கள் பலர். கொஞ்சு தமிழிலே நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் நெய்த இளங்கோவடிகள், கவியரசன் கம்பன், சைவ சமயப் பெரியார்கள், வைணவ ஆழ்வார்கள் முதலியோர் தாம் பாடிய பாடல்களில் இவ்வகை இசையினை நுழைத்துப் பாடியுள்ளார்கள். இவ்விசையினை இப் பெரியார்கள் நாட்டுப் புற மக்களிடமிருந்து திருடிக்கொண்டனர் எனல் கொளல் வேண்டும்.

செந்தமிழ்ச் செல்வன் இளங்கோவடிகள் முதல் தற்காலக் கவிஞர்கள் வரை போற்றிக் கேட்டு இன்பம் அனுபவித்த பாட்டுகளை நாமும் கேட்டு மகிழ்வோம். இவண் விரிவாகும் இக்கட்டுரை, இன்ப வாழ்வுச்சோலையிலே உலவத் துடி துடிக்கும்ஒரு இளங் காதலர்களின் காதல் காட்சியை நினைவூட்டுவதாகும்...

அன்ன நடை—மின்னல் இடை—பின்னல் சடை—செந்நெல் வண்ணம் ஆகிய வர்ணனைகளுக்குச் சொந்தமான "அவள்" எழிலோவியம் உயிர்பெற்று எழுந்து வந்து விட்டதோ என்னும்படி நடந்து வருகிறாள். முகிற் காட்டின் மேலே முழுமதி மிதப்பது போல், அவள் கூந்தற் காட்டின் மேலே கஞ்சிக் கலயம் மின்னிச் சிரிக்கிறது. செம்பஞ்சு ஊட்டிய கால்களில் சிரித்து விளையாடும் சிலம்போ, "கலீர், கலீர்" என ஓசை எழுப்புகிறது. அல்ல! அல்ல!—"மார்பின் சுமையால் இடை ஒடியப் போகிறது! நடையை ஒழி! நடையை ஒழி" என்று அபயக்குரல் எழுப்பிப் புலம்புகிறது சிலம்பு!

நடந்துவரும் அவள் அருகே தொடர்ந்து வரும் ஆணழகன்—கருத்தைக் கொள்ளை கொண்டு கழுத்தில் மாலை சூட்டத் துடித்துக்கொண்டிருக்கும் காதலன், கதிரவன் கண்ட கமலப் பூவானான். அதுகாறும் தூங்கிக் கிடந்த அவனது நெஞ்சம் துணிவு பெறுகிறது. அவளை நோக்கிப் பாட ஆரம்பிக்கிறான்.

" நண்டுச்சாறு காய்ச்சிக்கிட்டு
நடுவரப்பில் போற தங்கம்—உன்
கெண்டைக்கால் அழகைக் கண்டு
கெஞ்சுறண்டி நெஞ்சுலர !"

அவள் திரும்பியும் பார்க்கவில்லை. சற்று வேகமாகவே நடை போட்டாள். அவனுக்கோ கோபம் பீறிட்டெழுகிறது. நேரடியாகவே அவளுக்குச் " சவால் " விடுகிறன்.

அவளது முந்தானையைப் பற்றி இழுக்கிறன். அப்பொழுதுதான் அவள் மணிவாய் திறந்து மழலை மொழியால் "விடுங்கள் ! விடுங்கள் !" என்கிறள். ஆடையைத் தான் தொட்டு இழுத்தானே, அவளுக்குப் பிடித்தமில்லையென்றால் அவனை விட்டுவிட்டுப் போவதுதானே முறை ! " விடுங்கள் ! விடுங்கள் !" என்று சொல்லிக் கொண்டே அவன் அருகில் நின்றுகொண்டே இருக்கிறள். " விடுங்கள் " என்ற சொல்லுக்கு அப்போது " தொடுங்கள் " என்பதுதானே உட்பொருள் ! ஆணழகனுக்கு அது புரிந்துகொள்ள வெகு நேரம் பிடிக்கவில்லை ! பிறகு .... ?

குறும்பாகக் கோபம் கொள்கிறள் அவள் ! அவனிடம் ஏதாவது வம்பிழுக்க வேண்டுமென்பது அவளது உள்ளூர ஆசை ! ஆகவே, விழிகளைத் தீக்குழம்பாக்கி அவன்மீது கோபப் பார்வையொன்றை பதிக்கிறள். தன் சொந்த மாமன் மகளாகிய அவள், தன்னை விரும்பவில்லை யென்பதாகத் தப்புக் கணக்குப் போட்டு விடுகிறன். உடனே அவன்,

" உள்ளூருப் பெண்மயிலே !
உல்லாசத் தங்கமே ! நீ
வேற்றுமுகம் பாத்தியின்ன
விலங்கெடுத்து மாட்டிடுவேன் !"

என்கிறன். " ஆண்களே அவசர புத்திக்காரர்கள் " என்பது நூற்றுக்கு நூறு உண்மை என எண்ணி மனதிற்குள்ளேயே சிரிக்கிறள். அவள் அவனுடன் அன்று முழுவதும் பேசித் தீர்க்க வேண்டுமென்று எண்ணமிட்டவளாய்ச், சுவையாகப் பேச்சைத் தொடருகிறள் ;

" வேற்றுமுகம் பார்த்திட, நீ
விலங்கெடுத்து மாட்டினலும்
ஊர்க்குருவி வேடங்கொண்டு—நான்
உயரப் பறந்திடுவேன் !"

உடன் அவன் பாட ஆரம்பிக்கிறன் :—

" ஊர்க்குருவி வேடங்கொண்டு—நீ
உயரப் பறந்தியின்ன
செம்பருந்து வேடங்கொண்டு—உன்னைச்
செந்தூக்காத் தூக்கிடுவேன் !"

அவள் :—

" செம்பருந்து வேடங்கொண்டு—நீ
செந்தூக்காத் தூக்கினலும்
பூமிக்குள்ளே நான்நுழைந்து
புல்லாய் முளைத்திடுவேன் !"

அவன் :—

" பூமிக்குள்ளே நீநுழைந்து
புல்லாய் முளைத்தாலும்
காராம்பசு வேடங்கொண்டு
கரண்டிடுவேன் அந்தப்புல்லை !"

அவள்:—

" காராம்பசு வேடங்கொண்டு
கரண்டிட்டால் அந்தப்புல்லை,
பூந்தோட்டத் துள்ளேபோய்—நான்
பூவாய் மலர்ந்திடுவேன் !"

அவன் :—

" பூந்தோட்டத்துள்ளேபோய்—நீ
பூவாய் மலர்ந்தாலும்
பூவெடுக்கும் ஆண்டிபோல—நான்
புகுந்து அதைப் பிடுங்கிடுவேன் !"

அவள் :—

" பூவெடுக்கும் ஆண்டிபோல
புகுந்துஅதைப் பறித்தாலும்
மான்வேடங் கொண்டுநான்
மறைந்திடுவேன் அக்காட்டில் !"

அவ்வளவுதான் ! அவன் ஒன்றுமே பேசவில்லை ! இல்லை, இல்லை, பேசவே முடியவில்லை ! அவன்மட்டுமென்ன ? அவளுக்கும் அதே நிலைதான் ! பார்த்த விழி பார்த்தபடியே இருந்தனர் இருவரும் ! எதுவரை அப்படியே சிற்பி செதுக்காத பொற்சிலையாய் ஆடாமல் அசையாமல் இருந்தார்கள் என்பதைச் சொல்ல இயலாது. ஆனல் அவன்தான் முதலில் உணர்ச்சி பெற்றன் என்பது மட்டும் உண்மை !

அவள் முகத்தை ஏறிட்டு நோக்குகிறன். அவள்மட்டுமென்ன ? இருவர் தம் விழிகளும் உறவாடி இன்பக் கதைகள் பேசுகின்றன ! ஆம். " அண்ணலும் நோக்கினன் ! அவளும் நோக்கினள் !" எண்ணத்தைச் சொல்லாக்குகிறது அவனது எழில்வாய் !

" நீலக் கருங்குயிலே !
நிற்கட்டுமா ? போகட்டுமா ?
கோலக் குயில்குரலால்
கூறிடடீ ஓர்வார்த்தை !"

அவளை வெட்கம் பிய்த்துத் தின்கிறது. குறிப்பாகத் தன் உள்ளத்தைத் திறந்து காட்டுகிறள் :—

" போகச் சொன்ன பொல்லாங்கு
நிற்கச்சொன்ன நெட்டூரம் !
நான் ஒருத்தி பெண்பிள்ளை
நான் என்ன சொல்லப்போறேன் !"

தனது சம்மதத்தை மறைமுகமாகச் சொல்லாமல் சொல்லி விடுகிறள், அவள் ! அவனுக்கோ, அவள் வெளிப்படையாக வாய்திறந்து கூற வேண்டு

[31-ம் பக்கம் பார்க்க]







சர்வோதய தினம்

30—1—61 அன்று சர்வோதய தினமாக அனுஷ்டிக்கப்பட்டது. பிரார்த்தனை, நூல் நூற்றல் நடைபெற்றன. முதல் அமைச்சர் ஸ்ரீ காமராஜ் கலந்து கொண்டார். செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் இரண்டு நிமிட மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.





பஞ்சாயத்துத் தலைவர்கள் சென்னை விஜயம்

ஜனவரி-பிப்ரவரி மாதங்களில் பல்வேறு மாவட்டங்களிலிருந்தும் பஞ்சாயத்துத் தலைவர்கள் சென்னைக்கு விஜயம் செய்தனர்.

அவ்வமயம் மாநிலக் கவர்னர் அமைச்சர்கள்,
அரசாங்க அதிகாரிகள் ஆகியோர்
அவர்களுக்குரிய கருத்துரைகள்
வழங்கினர்.

(12-ம் பக்கம் பார்க்கவும்)



24—1—61 முதல் 30—1—61 வரை
சென்னையில் ஹரிஜன வார விழா
கொண்டாடப்பட்டது.

குடும்பக் கட்டுப்பாடு—ஓரங்க நாடகம் :

மூன்று குழந்தைகள் போதும்

(பொ. திருகூடசுந்தரம், எம். ஏ., பி. எல்.]

கமலம்.—என்னங்க இவ்வளவு நேரம், ஏதேனும் கூட்டத்துக்குப் போனீர்களோ, எங்கே என்ன கூட்டம், இராத்திரி பத்து மணிக்கு மேலாச்சே.

சுந்தரம்.—ஆமாம், கமலம், கூட்டத்துக்குத்தான் போய் வந்தேன். பத்திரிகை படிக்க வாசகசாலைக்குப் போனேன். அங்கே கூட்டம் என்று சொன்னார்கள், போனேன்.

கமலம். —கூட்டம் எங்கே, யார் பேசினார்கள் ?

சுந்தரம்.—பஞ்சாயத்து ஆபீசுப் பக்கத்தில் பாரதி மைதானம் இருக்கிறதல்லவா, அங்குதான் கூட்டம், சென்னையிலிருந்து ஒரு பெரியவர் வந்து பேசினார்.

கமலம்.—என்ன பேசினார், காங்கிரசைப் பற்றியா அல்லது காங்கிரசுக்கு விரோதமாகவா, எப்போதும் இந்த இரண்டு பேச்சுத்தானே.

சுந்தரம்.—ஆமாம், இரண்டு விஷயங்கள்தான். ஆனால் இன்று அவர் காங்கிரசைப் பற்றியும் பேசவில்லை காங்கிரசுக்கு விரோதமாகவும் பேசவில்லை.

கமலம்.—பின் வேறு எதுபற்றிப் பேசினார்.

சுந்தரம்.—அவரே சொன்னார். அவைகளைப் பற்றிப் பேச வரவில்லை, எல்லோர்க்கும் பொதுவான—எல்லோரும் கட்டாயமாக அறிந்து கொள்ள வேண்டிய ஒரு விஷயம் பற்றியே பேசப் போகிறேன் என்று சொன்னார்.

கமலம்.—அது என்ன, கட்டாயமாக அறிய வேண்டிய விஷயம் ? விளங்கவில்லையே.

சுந்தரம்.—ஒவ்வொரு குடும்பத்தாரும் தாங்களும் தங்கள் குழந்தைகளும் சுகமாக சந்தோஷமாக வாழ வேண்டும். குழந்தைகளை நல்லவிதமாக வளர்க்க வேண்டும், நன்றாகப் படிக்க வைக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.

கமலம்.—ஆமாம். அப்படித்தான் ஆசைப்படுகிறோம். அதற்காக அவர் என்ன சொன்னார் ?

சுந்தரம்.—ஆசைப்படுவதில் குற்றமில்லை. அவ்விதம் தான் ஆசைப்பட வேண்டும். ஆனால் அதற்காக என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி மட்டும் சிந்தித்துப் பார்ப்பதேயில்லை.

கமலம்.—என் சிந்திப்பதில்லை ? சிந்தித்துத் தானே ஒவ்வொருவரும் பணம் சம்பாதிக்கப் பாடுபடுகிறார்கள். பணம் இருந்தால் தானே சந்தோஷமாக வாழ, நல்லவிதமாகக் குழந்தைகளை வளர்க்கவும் படிப்பிக்கவும் முடியும்.

சுந்தரம்.—ஆமாம், கமலம், அதையே தான் அந்தப் பெரியவரும் கூறினார். பணம் இல்லாமல் எதையும் செய்ய முடியாது. ஆனால் ஒவ்வொருவரும் ஏராளமாகச் சம்பாதித்துவிட முடியாது. அவரவர் சக்திக்குத் தக்கபடிதான் சம்பாதிக்க முடியும்.

கமலம்.—அது என்னவோ உண்மைதான். பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் படிக்கிறார்கள், ஆனால் எல்லாப் பிள்ளைகளும் ஒரே மாதிரியாக மார்க்கு வாங்கிவிடுவதில்லை.

சுந்தரம்.— அதனால் அந்தப் பெரியவர் என்ன சொல்லுகிறார் தெரியுமா ? ஒவ்வொருவரும் தாம் எவ்வளவு சம்பாதிக்க முடியும் என்று முதலில் யோசிக்க வேண்டும். பிறகு தாம் சம்பாதிப்பதைக் கொண்டு எத்தனை குழந்தைகளைப் நல்ல விதமாக வளர்க்க முடியும் என்று யோசிக்க வேண்டும் என்று கூறினார்.

கமலம்.—ஆமாம், அது உண்மைதான், அதிக வருமானமில்லாவிட்டால் அதிகக் குழந்தைகளை வளர்க்க முடியாதுதான். எதிர்த்த வீட்டு அண்ணாவுக்கு வருமானம் குறைவு. ஆனால் ஆறு குழந்தைகளை வைத்துக் கொண்டு அவர் படுகிற பாடு கடவுளுக்குத் தான் தெரியும்.

சுந்தரம்.—அந்தக் குழந்தைகளைப் பார்த்தால் எவ்வளவு பரிதாபமாயிருக்கிறது. நல்ல உணவில்லை, நல்ல உடையில்லை. எலும்பும் தோலுமாக இருக்கின்றன. எப்போது பார்த்தாலும் ஒன்று மாறி ஒன்று நோய். டாக்டர் ஆஸ்பத்திரியில் இல்லாத மருந்து ஏதாவது எழுதிக் கொடுத்தால் அதை வாங்கிக் கொடுக்க முடியவில்லை.

கமலம்.—ஆமாம், ஆனால் அடுத்த வீட்டு அண்ணாவுக்கும் அதே வருமானம்தான். ஆனால் மூன்று குழந்தைகளே இருப்பதால் அவைகள் நன்றாக இருக்கின்றன. அழகான சட்டை, அழகான பாவாடை வாங்கிக் கொடுக்கிறார்கள். குழந்தைகள் செழிப்பாக கொழு கொழு என்று இருக்கின்றன. அவைகளை வாரி எடுத்து முத்தனும் போல் இருக்கிறது. நீங்கள் இல்லாத வேளையில் அவைகளை கூட்டி வைத்துத் தான் விளையாடிக் கொண்டிருக்கிறேன்.

சுந்தரம்.—இதைத்தான் அந்தப்பெரியவர் பலவிதமாக எடுத்து விளக்கினார். நீ வரவில்லையே என்று தோன்றிற்று.

கமலம்.—அப்படியானால் அதிக வருமானம் உடையவர்களே அதிகக் குழந்தைகள் பெறலாம். ஏழைகளோ ஒன்றிரண்டுதான் பெறலாம் என்று தோன்றுகிறது.

சுந்தரம்.—அப்படியில்லை கமலம். விரலுக்குத் தக்க வீக்கம் என்று சொல்வதில்லையா ? ஏழை வீட்டுக் குழந்தை பள்ளிக் கூடத்துக்கு நடந்து போகும். பணக்கார வீட்டுக் குழந்தை வண்டியில் போகும். அதனால் அவரவர் அந்தஸ்துக்குத் தக்கபடி செலவு செய்ய வேண்டும்.

கமலம்.—அப்படியானால் பணக்காரர்கள்கூட அதிகக் குழந்தைகள் பெறக்கூடாது என்று சொல்லுகிறாரோ?

சுந்தரம்.—ஆமாம் கமலம் ! அப்படித்தான் சொல்லுகிறார். ஏழையோ பணக்காரரோ மூன்று குழந்தைகள் போதும் என்கிறார். அப்படியானால்தான் குழந்தைகளை நல்லவிதமாக வளர்க்க முடியும் என்று சொல்லுகிறார்.

கமலம்.—நானும் அப்படித்தான் எண்ணுகிறேன். ஆனால் மூன்று குழந்தைகள் பெற்றபின் எல்லோரும் சன்னியாசியாகிவிட வேண்டும் என்றால் அது எப்படியும், யாரும் சம்மதிக்கமாட்டார்கள்.

சுந்தரம்.—நீ சொல்லுவது சரிதான். சன்னியாசியாகச் சொன்னால் சம்மதிக்கமாட்டார்கள். ஆனால் அந்தப் பெரியவர் யாரையும் சன்னியாசியாகச் சொல்லவில்லை.

கமலம்.—எனக்கு நீங்கள் சொல்லுவது விளங்கவில்லை. சன்னியாசி போல் இருக்காமல் எப்படிக் குழந்தை பெறாமல் இருக்க முடியும் என்று தெரியவில்லை.

சுந்தரம்.—அந்தப் பெரியவர் சொல்லுகிறார். மூன்று குழந்தைகள் பெற்ற பிறகு சன்னியாசியாகாமல் கணவனும் மனைவியும் எப்போதும் காதலராக வாழ்ந்து கொண்டு குழந்தை பெறாமலிருக்கக்க முடியும். அதற்காக டாக்டர்கள் ஒரு ஆப்பரேஷன் கண்டுபிடித்திருக்கிறார்களாம். கணவனாவது மனைவியாவது செய்து கொண்டால் பிறகு குழந்தை உண்டாகாதாம். குழந்தைதான் உண்டாகாதே தவிர, வேறு எந்த வித்தியாசமும் ஏற்படாதாம். கணவனும் மனைவியும் முன்போலவே சந்தோஷமாக வாழுவார்களாம்.

கமலம்.—ஆனால் ஆப்பரேஷன் என்கிறீர்களே ? ஆப்பரேஷன் என்றால் அறுப்பதல்லவா ? அதை யார் செய்யமுடியும். வேறு வழியில்லையா ? வேறு வழி சொன்னால்தான் யாரும் கேட்பார்கள்.

சுந்தரம்.—கமலம் ! உன் மாமாவுக்குப் பல் சொத்தையாகி நோயாயிருந்ததே ஞாபகமிருக்கிறதா ?

கமலம்.—ஆம், அதற்கு மாமா டாக்டரிடம் கொண்டு காட்டினார். டாக்டர் பல்லுக்குப் பக்கத்திலே ஏதோ கொஞ்சம் மருந்து குத்தினாராம். அப்போதுமட்டும் சுருக்கென்று இருந்ததாம். பிறகு பல்லைப் பிடுங்கிய போது நோவேயில்லையாம். அதற்கும் நீங்கள் சொல்லும் ஆப்பரேஷனுக்கும் என்ன சம்பந்தம் ?

சுந்தரம்.—சம்பந்தமா ? குழந்தை பெறாமலிருப்பதற்காக டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கும் ஆப்பரேஷனும் அதைப்போல எளிதாம். அறுக்கும் போதும் பிறகும் நோவாதாம். கால் மணி நேரத்தில் முடிந்துவிடுமாம். ஆணுக்குச் செய்தால் அவர் ஆஸ்பத்திரியிலும் படுத்திருக்க வேண்டாம், வீட்டுக்கு வந்து வீட்டிலும் படுத்திருக்க வேண்டாம். ஏழெட்டு நாள் ஓய்வாக இருந்தால் போதும்.

கமலம்.—அப்படியானால் பெண்ணுக்குச் செய்யும் ஆப்பரேஷன் கஷ்டமானதோ ?

சுந்தரம்.—இல்லை. அதுவும் எளிதானதுதான். ஆனால் ஆணுக்கு எந்த நேரமும் செய்யலாம். பெண்ணுக்கு என்றால் அவள் குழந்தை பிரசவிக்கும் பொழுதுதான் செய்வார்கள். அப்போது அவளுக்குக் கொஞ்சமும் நோவில்லாமலே செய்து விடுவார்கள்.

கமலம்.—அது சரி, அப்படியானால் அதற்காக அவள் எத்தனை நாள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டும் ?

சுந்தரம்.—குழந்தை பெற்றவள் ஏழெட்டு நாள் படுத்திருப்பாள் அல்லவா ? அதுபோல் படுத்திருந்தால் போதும், ஆப்பரேஷன் செய்ததற்காக அதிக நாள் ஆஸ்பத்திரியில் இருக்க வேண்டியதில்லை.

கமலம்.—இந்த ஆப்பரேஷன்கள் இவ்வளவு எளிதாக இருக்கும்போது ஏன் எல்லோரும் செய்யாமல் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை.

சுந்தரம்.—இப்படி ஒருவர் எளிதாக விளக்கிச் சொன்னால் தானே தெரியும், அதோடு நீ ஆப்பரேஷன் என்றவுடன் பயப்பட்ட மாதிரி மற்றவர்களும் விஷயம் அறியாமல் பயப்படுவார்கள் அல்லவா ?

கமலம்.—ஆனால் இப்போது நமக்கு விஷயம் விளங்கி விட்டதால் நாம் இந்த யோசனைப்படியே நடப்போம். அடுத்த பிரசவ சமயத்தில் ஆப்பரேஷன் நான் செய்து கொள்கிறேன்.

சுந்தரம்.—அது வேண்டாம் கமலம். உனக்கு குழந்தை உண்டானவுடனே நானே போய்ச் செய்து கொண்டு வருகிறேன். ஆண்கள் ஏன் பெண்களைக் கஷ்டப் படுத்தவேண்டும் என்று அந்தப் பெரியவர் கூறினார். அவர் கூறுவது சரிதானே.

கமலம்.—சரி உங்கள் விருப்பம்போல் செய்யுங்கள். கடைசியாக அந்தப் பெரியவர் என்ன சொல்லி முடித்தார்?

சுந்தரம்.—அவர் மூன்று விஷயங்கள் கூறி அவற்றை எல்லோரும் மறக்காமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கமலம்.—அந்த விஷயங்கள் என்ன ?

சுந்தரம்.—முதலாவதாக ஒவ்வொருவரும் மூன்று குழந்தைகளுக்கு அதிகமாகப் பெறுவதில்லை என்று முடிவு செய்து கொள்ள வேண்டும். முடிவு செய்து கொண்டு அந்த முடிவுப்படியே நடப்பேன் என்று நாள் தோறும் மனத்தில் உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று சொன்னார்.

கமலம்.—ஆமாம். அப்படித்தான் செய்து கொள்ள வேண்டும். அது மிகவும் முக்கியம் என்று இப்போது விளங்குகிறது. அவர் அடுத்த விஷயம் என்ன சொன்னார் ?

சுந்தரம்.—அடுத்த விஷயமா ? ஏற்கனவே இரண்டு குழந்தைகள் இருந்தால் மனைவி அடுத்த பிரசவத்துக்கு ஆஸ்பத்திரிக்குப் போய்விட வேண்டும். போனதும் டாக்டரிடம் எனக்கு இனிமேல் குழந்தை வேண்டாம், ஆப்பரேஷன் செய்துவிடுங்கள் என்று கூறவேண்டும். அவர் டாக்டர் குழந்தை பிறந்த மறுநாள் அல்லது அதற்கு மறுநாள் ஆப்பரேஷனை எவ்விதக் கஷ்டமுமில்லாமல் செய்துவிடுவார்.

கமலம்.—அதைத் தான் நானும் சொன்னேன். நமக்கு சொர்ணமும், பொன்னியும் இருக்கிறார்கள். போதும். மூன்றும் பிரசவத்துக்கு ஆஸ்பத்திரிக்குப் போய் ஆப்பரேஷன் செய்து கொள்வேன். ஆனால் நீங்கள் செய்து கொள்வதாகச் சொல்கிறீர்களே. அதுவும் சரிதான்.

சுந்தரம்.—அந்தப் பெரியவர் மூன்றுவது விஷயம் என்ன கூறினார் தெரியுமா ? ஏற்கனவே மூன்று குழந்தைகளிருந்தால் கணவன் உடனே நானேயே ஆஸ்பத்திரிக்குப் போய் ஆப்பரேஷன் செய்து கொள்ள வேண்டும். ஒரு நாள்கூட காலதாமதம் செய்யக் கூடாது, மெத்தனமாய் இருந்துவிடலாகாது என்று கூறினார்.

கமலம்.—ஆமாம், அவர் கூறுவது சரிதான். என்றைக்கு குழந்தை உண்டாகும், என்றைக்கு உண்டாகாது என்று எவராலும் கூற முடியாது அல்லாவா ?

சுந்தரம்.—இந்த மூன்று விஷயங்களையும் எல்லோரும் ஞாபகத்தில் வைத்து நடந்தால் நாட்டுக்கு நன்மை உண்டாகும் என்று சொல்லித் தம்முடைய உரையை முடித்தார்.

கமலம்.—அவர் கூறுவது முழுவதும் உண்மை ; **அதில்** சந்தேகமே யில்லை.

குடும்பக் கட்டுப்பாடு

எச். ஏ. கான்.

நாடுநிலை உயர்வடைய
கட்டுப்பாடு வேண்டும்—குடும்பக்
கட்டுப்பாடு வேண்டும்

வீடுதோறும் அக்கணமே
தட்டுப்பாடு போகும்—எல்லாத்
தட்டுப்பாடு போகும்

(2)

சுலபமான ரண சிகிச்சை
க்ஷ்ட மொன்று மில்லை—அதில்
கஷ்ட மொன்று மில்லை

கலவரமோ பயங்கொள்ளவோ
காரணமே இல்லை—ஒரு
காரணமே இல்லை

(3)

ஆண்களுக்கு அறுவை முறை
"வாசெக்டமி"யாகும்—பெயர்
"வாசெக்டமி"யாகும்.

மூன்றுக்குமேல் குழந்தையுள்ளோர்
செய்துக் கொள்ளலாகும்—இதைச்
செய்துக் கொள்ளலாகும்.

(4)

படுக்கையிலே படுத்திருக்க
அவசியமே இல்லை—இதில்
அவசியமே இல்லை.

அடுத்தபடி வீடு செல்ல
தடைகள் ஏதுமில்லை—எந்தத்
தடைகள் ஏதுமில்லை.

கேள்வியும் - பதிலும்

[சென்ற ஏப்ரல் இதழில் "கேள்வியும் பதிலும்" என்ற பகுதியில் பஞ்சாயத்து சம்பந்தமான சில கேள்விகளுக்கு பதில்கள் அளித்திருந்தோம். இந்த இதழிலிருந்து இந்தக் "கேள்வி பதில்" பகுதியை தொடர்ந்து வெளியிடலாமென உத்தேசித்துள்ளோம். இந்த இதழில் பஞ்சாயத்து சம்பந்தமாக மூன்று கேள்விகளுக்கு பதில்கள் அளிக்கப்பட்டுள்ளன. வாசக நண்பர்கள் பஞ்சாயத்து சம்பந்தமான கேள்விகளை அனுப்பி வைத்தால் "கிராம நலத்" தில் அவ்வப்போது பதில்கள் அளிக்கப்படும். ஆனால் கேட்கப்படும் கேள்விகள் பஞ்சாயத்து சம்பந்தமான பொதுப்படையான அம்சங்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் மிகவும் அவசியம். உள்ளூர்ப் பிரச்னைகளோ, தனிப்பட்ட சில அம்சங்களைக் கருத்தில் கொண்டு கேட்கப்படும் கேள்விகளைக் கேட்கவேண்டாம்.

— ஆசிரியர்.]

கேள்வி :—பஞ்சாயத்துகளுக்கு வேண்டிய நமூனுக்களும் பதிவுப்புத்தகங்களும் (Forms and Registers) உரிய காலத்தில் கிடைப்பது மிகவும் சிரமமாக இருக்கிறது. இதைத் தவிர்க்க என்ன ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன ?

பதில் :—இதுவரை, காலதாமதம் ஆனதற்கு முக்கிய காரணம் என்னவெனில், ஒவ்வொரு பஞ்சாயத்தும், தனித்தனியே தனக்கு வேண்டிய நமூனுக்களையும் பதிவுப் புத்தகங்களையும் கணக்கிட்டு, அச்சிடுவதற்கு நேரிடையாகத் தன் தேவையைத் தெரிவிக்க வேண்டியிருந்தது. மொத்தம் நமூனுக்கள் எவ்வளவு தேவை என்பது தெரியாத காரணத்தால், அச்சிடுபவர், உடனுக்குடன் அவற்றை அச்சிட்டு அனுப்பிவைக்க முடியவில்லை.

ஆனால், இனிமேல் அத்தகைய காலதாமதம் ஏற்படாமல், நமூனுக்களும் பதிவுப்புத்தகங்களும், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் உரிய காலத்தில் கிடைக்க, சமீப காலத்தில் பின்கண்டுள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

1950-ம் ஆண்டு பஞ்சாயத்துச் சட்டத்தின்படி, இந்த நமூனுக்கள், பதிவுப் புத்தகங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை, சுமார் 100 ஆக இருந்தது. ஆனால் இப்பொழுது, அனுபவத்தையொட்டி, இவற்றில் சுமார் 43 எடுபட்டுவிட்டன. அதிகாரிகளும், அனுபவம் வாய்ந்த பஞ்சாயத்துத் தலைவர்களும் இதைப்பற்றி ஆலோசனை நடத்தியதன் விளைவாகவே, இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இது தவிர, தேவையான இந்த நமூனுக்களையும் பதிவுப் புத்தகங்களையும் மொத்தமாகக் கணக்கிட்டு, அச்சடிக்க ஏற்பாடு செய்து, அவற்றை எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் சேர்ப்பிக்க வேண்டிய பொறுப்பு, அந்தந்த டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இரண்டு முக்கிய உத்திரவுகள் (1) 1960 அக்டோபர் 12-ம் தேதி வெளியான 756-ம் எண் அரசாங்க ஆணை (2) 1961-ம் வருஷம் ஜனவரி மாதம் 4-ம் தேதி வெளியான 3-ம் எண் அரசாங்க ஆணை) கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறையில், அரசாங்கம் பிறப்பித்துள்ளது.

இவற்றின்படி, 1961–62-ம் ஆண்டுக்குத் தேவையான நமூனுக்களையும் பதிவுப் புத்தகங்களையும் மொத்தமாகக் கணக்கிட்டு, 1961-ம் வருஷம் மார்ச் மாதம் 31-ம் தேதிக்குள், எல்லாப் பஞ்சாயத்துக்களுக்கும் கிடைக்குமாறு செய்யவேண்டிய பொறுப்பும், அதற்கான நடவடிக்கை எடுப்பதற்குள்ள அதிகாரமும், நிதி வசதி ஏற்பாடுகளும், டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. எனவே, புதிய பஞ்சாயத்துகளும் பழைய பஞ்சாயத்துகளும், தம்முடைய தேவைகளை, டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகளுக்குத் தெரிவித்து, உரிய காலத்தில் காலதாமதமில்லாமல் பெற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறோம்.

கேள்வி :—பஞ்சாயத்து யூனியன் தலைவர் வட்டார ஜீப்பை உபயோகிப்பது சம்பந்தமாக, திட்டவட்டமான அரசாங்க உத்தரவுகள் ஏதாவது உண்டா ?

பதில் :—இதைப்பற்றி சமீபத்தில் அரசாங்கம் உத்தரவு (1961-ம் வருஷம் பிப்ரவரி 9-ம் தேதியிட்ட அரசாங்க ஆணை—கிராம அபிவிருத்தி தல நிர்வாகத் துறை எண் 380) பிறப்பித்துள்ளது. அதன்படி, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தன்னுடைய அதிகார வரம்புக்குட்பட்ட வேலைகளுக்காக, வட்டார "ஜீப்பை" உபயோகிக்கலாம் என்று அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது.

இதுவரை ஒவ்வொரு வட்டாரத்திற்கும் "ஜீப்"புக்கு உபயோகப்படுத்தப்படும் பெட்ரோலின் அளவு ஒரு மாதத்திற்கு 275 லிட்டர்களுக்கு மேல் போகக்கூடாது என்றிருந்தது. இப்பொழுது, பஞ்சாயத்து ஸ்தாபனங்களுக்கு அதிகப்படியான பொறுப்புகள் ஏற்பட்டுள்ள படியாலும், அதிலும் குறிப்பாக, தொடக்கக் கல்வி விஷயத்தில் அவை அதிக பொறுப்புகளை ஏற்று நடத்த வேண்டியிருப்பதனாலும், உபயோகிக்கும் பெட்ரோலின் அளவை உயர்த்தவேண்டி ஏற்பட்டது. இப்பொழுது இந்த அளவை 325 லிட்டர்களாக உயர்த்தி, அரசாங்கம் ஆணை பிறப்பித்துள்ளது.

மழை பொழிந்ததனுல்..

"அழகனுர்"

ஏரிகுளம் நிறைந்தனவே
இனியநிலம் குளிர்ந்ததுவே
மாரிவந்து நாள்தோறும்
மனமுவந்து பொழிந்ததனுல் !

மாடுகன்று துள்ளினவே
மகிழ்ச்சிகரை புரண்டதுவே
காடுவயல் நிலங்களிலே
கனிந்துமழை பொழிந்ததனுல் !

வாடும்பயிர் மறைந்தனவே
வளர்கொடிகள் நிறைந்தனவே
மேடுகுழி மேவநதி
மேன்மைமழை பொழிந்ததனுல் !

ஏழைமனம் மகிழ்ந்ததுவே
இனியபயிர் சிரித்தனவே
காளையரின் கரம்நிலத்தில்
காணமழை பொழிந்ததனுல்!

ஆறுவிரை வடைந்ததுவே
அழகுநிலம் விரிந்ததுவே
மாரிவந்து நாள்தோறும்
மாநிலத்தில் பொழிந்ததனுல் !

கேள்வி .—உற்பத்திப் பெருக்கத் திட்டத்தில், பஞ்சாயத்துகள் என்ன செய்ய முடியும் ? இதற்கு வேண்டிய அதிகாரமும், வழிமுறைகளும் உண்டா ?

பதில் :—புதிய பஞ்சாயத்துச் சட்டத்தின் பீடிகையிலேயே இந்த முக்கியப் பொறுப்பு வரையறுக்கப்பட்டுள்ளது. "கிராம நலம்" கருத்தரங்கு மலரில் (1960-ம் ஆண்டு ஆகஸ்டு மாத இதழ்) இதைப்பற்றி விரிவாக, ஸ்ரீ ஆர். எ. கோபாலசாமி, ஐ.ஸி.எஸ். அவர்கள் விளக்கியுள்ளார்.

இது தவிர, "கிராம உணவு உற்பத்தித் திட்டம்" என்ற விசேஷ வெளியீடு ஒன்றை, கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத்துறை, வெளியிட்டுள்ளது. 24 பக்கங்கள் கொண்ட இந்தச் சிறிய புத்தகம், ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் (டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிகள் மூலம்) கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த புத்தகத்தில் ஒவ்வொரு பஞ்சாயத்தும் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளலாம் என்ற விவரங்களும், அரசாங்க இலாகாக்கள், முக்கியமாக, விவசாய இலாகா, எந்தெந்த வகையில் உதவி புரியும் என்றும், அரசாங்கம் அளிக்கும் நிதி வசதிகள் என்ன என்றும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. சென்னை, தேனும்பேட்டையில் நடைபெற்ற கதர், கிராமக் கைத்தொழில் பொருட்காட்சிக்கு பல்வேறு மாவட்டங்களிலிருந்து விஜயம் செய்த பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு இந்த விசேஷ வெளியீடு நேரில் அளிக்கப்பட்டது.

எலும்பு உரத்தின் உபயோகம்

(இரா. சங்கரசுப்பு, கிராம வழிகாட்டி,
நீரேத்தான், வாடிப்பட்டி வட்டாரம்)

ஜுலை (1960) மாதத்திய **கிராம நல** வெளியீட்டில் 'எலும்பு உரம் விவசாயிகளுக்கோர் வரம்' என்ற தலைப்பில் கண்ட கட்டுரையை யொட்டி எழுந்த என் அனுபவ உரையாகும் இது.

வாடிப்பட்டி வட்டாரத்தில் நீரேத்தான் கிராமம், பெரியாறு வழங்கும் நீர்வளம் பெருக்குடைப் பகுதியாகும். மக்கள் அனைவரும் விவசாயத்தில் ஈடுபாடுடையவர்கள். உணவு உற்பத்திப் பெருக்கத்திற்குத் திருந்திய முறைகளைக் கையாளும் நாட்டமுடையவர்கள். வட்டார வளர்ச்சித் திட்டத்தின் அலுவலர்களில் அவ்வப்போதைய ஆலோசனைகளை ஏற்றுச் செயல்களை உருவாக்கி வருகின்றனர். இந்த ரீதியில் எலும்புத்தூளை உபயோகிப்பதால் அதிக விளைச்சலைக் காண்பதோடு, குறிப்பாக நிலவளம் பாதுகாக்கப்படுகிறது. என்பதை அனுபவத்தில் உணருகின்றனர். இப்பொழுது, நம் நிலங்களின் நிலவளம் அதாவது மண் சத்து குறைந்துகொண்டே வருகிறது என்று கூறப்பட்டு வருகிறது. இதன் நீக்கம் தேவை என்பதும் புலனுகிறது. இதைத் தெரிந்துதான் நீரேத்தான் பகுதி விவசாயிகளில் சிலர் எலும்புத்தூளை உபயோகித்து வந்தனர். எங்கள் வட்டாரத்தின் பொறுப்பில் இருந்த தோல் உரிப்பு நிலையத்தில் (flaying centre) இருந்து எலும்புத் தூள் கிடைத்து வந்தது. நாளடைவில், இதை உபயோகிப்பதால் கிடைக்கும் பெரும் பயனை மற்ற விவசாயிகளும் உணர்ந்து, எலும்பு உரத்தை உபயோகிக்க முன் வந்தனர். தேவை வளர்ந்தது. எனவே, கல்லுப்பட்டி வட்டாரத்திலிருந்தும், எலும்புத்தூள் இப்பொழுது கொண்டுவந்து வினியோகித்தோம். இதுவரை சென்ற 3 மாதங்களில் மட்டும் 18,000 பவுண்டு வரை நீரேத்தான் பகுதியில்மட்டும் வினியோகிக்கப்பட்டுள்ளது. அண்மையில், நெற்பயிர் தவிர, கரும்புக்கும் எலும்புத்தூள் இட்டு வருகின்றனர். எங்கள் வட்டாரத்தில் எலும்பு உரம் தேவை நாளுக்கு நாள் பெருகி வருவதால், எலும்பு உரம் தயாரிக்கும் நிலையம் [Bone crushing Unit] ஒன்றை வாடிப்பட்டி வட்டாரத்திலேயே நிறுவ யோசிக்கப்பட்டுவருகிறது. சென்ற **கிராம நலத்**தில் குறிப்பிட்டிருந்தபடி ஏராளமாக எலும்புகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் ஏற்படும் அதிக விலை தடுக்கப்படவேண்டும். பிற பகுதி விவசாயிகளும் அதிக அளவில் எலும்பு உரம் உபயோகிக்க வேண்டும். அதனுல் குறைந்த விலை சாத்தியமாகும். விவசாயிகளும் உரிய பலனைப் பெற முடியும். ஆகவே, விவசாயப் பெருமக்கள் அனைவரும் எலும்பு உரம் உபயோகித்து, விவசாயத்தில் நல்ல பலனைப் பெற்றுப் பெருவாழ்வு **வாழ்வோமாக.**

மூன்றாவது திட்டத்தில் விவசாய அபிவிருத்தி நடவடிக்கைகள்

உணவுத்தானியங்கள் விஷயத்தில் தன்னிறைவு நிலையை அடையவேண்டும் என்ற குறிக்கோளை லட்சியமாகக் கொண்டு மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் விவசாயத் துறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவடையும்போது இந்நாட்டின் மக்கள் தொகை 48 கோடிக்கு அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. நபருக்கு நாள் ஒன்றுக்கு 18 அவுன்ஸ் வீதம் உணவுத் தானியங்கள் கிடைக்கக்கூடியபடி உணவுத் தானியங்களின் உற்பத்தியைப் பெருக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

துணை உணவுப்பொருள்கள் உற்பத்திக்கான குறியளவுகள் கணிசமாக உயர்த்தப்பட்டிருப்பது தவிர, மூன்றாவது திட்ட காலத்தில் உணவுத் தானியங்களின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு சுமார் 10 கோடி டன்னிலிருந்து 10.5 கோடி டன் வரை உயர்த்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரண்டாவது திட்ட இறுதியில் உற்பத்தி 7.5 கோடி டன்னாக இருக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும் முதலீடு

விவசாயத்துறை அபிவிருத்திக்கு அதிகத்தொகை இப்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது திட்டத்தில் ரூ. 320 கோடி ஒதுக்கப்பட்டிருந்தது. மூன்றாவது திட்ட காலத்திலோ ரூ. 625 கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. இது தவிர, பாசனம், ரசாயன உரங்கள் உற்பத்தி, சமுதாய நல அபிவிருத்தி ஆகிய திட்டங்களுக்கும் ஏராளமான தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

சமுதாய நல அபிவிருத்திக்கு ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 400 கோடியில் சுமார் மூன்றில் ஒரு பங்குத் தொகை விவசாயத்துறை உற்பத்தியைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தபடும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்கு ரூ.650 கோடி ஒதுக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில் விவசாயத் துறை அபிவிருத்தியில் முக்கிய பங்கு வகிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிற சிறு பாசனத் திட்டங்களுக்கு ரூ. 200 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ரசாயன உர உற்பத்தியைப் பெருமளவில் அதிகப்படுத்துவதற்காக ரூ. 240 கோடி செலவழிக்கப்படும்.

கடன் வசதிகள்

கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலமாக விவசாயிகளுக்குச் சுலபமாகவும் தக்க சமயத்திலும் கடன் வசதிகள் கிடைக்கச் செய்வதற்காகவும் ஏராளமான தொகைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. அடுத்த ஐந்து ஆண்டுகளில் குறுகிய காலக் கடன்களாக ரூ. 400 கோடியும், நடுத்தரக் காலக் கடன்களாக ரூ. 160 கோடியும், நீண்ட காலம் கடன்களாக ரூ. 115 கோடியும் கொடுக்கப்பட வேண்டும் என்று தாற்காலிகமாய் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரும்பத் திரும்ப வற்புறுத்தப்பட்டு வந்திருப்பதுபோல், போதிய நிதி வசதி இல்லை என்ற காரணத்தால் எந்த ஒரு விவசாயத் திட்டமும் பாதிக்கப்படுவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. விவசாயிகளுக்குத் தேவையான பல்வேறு வகையான சேவைகளை அளிப்பதிலும், பல்வேறு குறியளவுகளையும் எய்துவதில் கிராம மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதிலும், கிராம மக்கள் அனைவரையும் ஒன்று திரட்டுவதிலும் பெரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டியதுதான் நம்முடைய இப்போதையத் தேவையாகும்.

பாசன வசதி, ரசாயன உரங்கள், பிறவகை உரங்கள், திருந்திய ரகக் கலப்பைகள், விவசாய சாதனங்கள் ஆகிய வற்றின் சப்ளை, நிலவளப் பாதுகாப்பு, புஞ்சைப் பயிர் சாகுபடி, நில மீட்சி ஆகியவற்றில் கணிசமான அளவு முன்னேற்றம் ஏற்படுவதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன. பாசன வசதி பெற்ற பிரதேசத்தின் விஸ்தீரணம், இரண்டாவது திட்டக்கடைசியில் 7 கோடி எக்கராவிலிருந்து மூன்றாவது திட்டக் கடைசியில் சுமார் 9 கோடி எக்கராவுக்கு அதிகரிக்கும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. அதிகப்படியாகப் பாசன வசதி பெறும் பிரதேசத்தில் சுமார் அரை பாகம் சிறு பாசனம் திட்டங்கள் மூலம் பாசன வசதி பெறும் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இதற்கும் பொது மக்களின் முயற்சி பெருமளவில் தேவைப்படும்.

கிராமங்களிலுள்ள மனித பலத்தை நன்கு ஒன்று திரட்டினால் 2 கோடி எக்கரா குறியளவைக் கூடத் தாண்டிவிட முடியும். இதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுவருகின்றன.

சிறந்த விதைகள்

அதிகப்படியாக 15.0 கோடி எக்கரா நிலப்பரப்பில் திருந்திய ரக விதைகளை உபயோகிக்க உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. கிராமங்களில் திருந்திய ரக விதைகளைப் பெருக்குவதற்கான வசதிகளுடன்கூடிய பல விதைப் பண்ணைகளை நாடெங்கிலும் ஏற்படுத்துவதற்கான விரிவான தொரு திட்டம் ஏற்கனவே அமுல் நடத்தப்பட்டுவருகிறது. இரண்டாவது திட்டம் முடிவடையும்போது மொத்தம் 4,000 விதைப்பண்ணைகள் இருக்கும்.

மூன்றாவது திட்ட காலத்தில், திருந்திய ரக விதை சாகுபடிப்பிரதேசத்தின் குறியளவாகிய 15.0 கோடி ஏக்கராவை எய்தக்கூடியபடி, விதைப்பண்ணைகளின் எண்ணிக்கை மேற்கொண்டும் அதிகரிக்கப்படும்.

நைட்ரஜன் ரக ரசாயன உரங்களின் உற்பத்தி ஆண்டொன்றுக்கு 10 லட்சம் டன்னுக்கு உயர்த்தப்படவிருக்கிறது. தற்போது ஆண்டொன்றுக்கு 3.6 லட்சம் டன் நைட்ரஜன் ரக ரசாயன உரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. பாஸ்போர்ட் ரக ரசாயன உரங்களின் உற்பத்தி சுமார் எட்டு மடங்கு பெருக்கப்பட்டு வருகிறது. அதிகப்படியாக 5 கோடி ஏக்கரா நிலத்தில் பசுந்தாள் உரம் போடப்படும்.

மூன்றுவது திட்ட காலத்தில் 130 லட்சம் ஏக்கரா விஸ்தீர்ணமுள்ள சாகுபடி நிலங்களில் வரப்பு கட்டும் வேலை மேற்கொள்ளப்படும். இது மக்கள் பெருமளவில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டியுள்ள மற்றொரு பெரிய திட்டமாகும். திருந்திய புஞ்சை சாகுபடி முறைகள் 400 லட்சம் ஏக்கராவுக்கு விஸ்தரிக்கப்படும், சுமார் 64 லட்சம் ஏக்கரா நிலம் விவசாயத்துக்கு மீட்கப்படும். அல்லது வெள்ளச் சேதத்திலிருந்து பாதுகாக்கப்படும்.

திருந்திய ரக விவசாயக் கருவிகளையும் உபகரணங்களையும் உபயோகிப்பதில் ஒரு பெரிய மாறுதல் ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான நிதர்சனக் காட்சிகள் தொகுதி ஸ்தானங்களில் நடத்தப்படும். இந்த உபகரணங்களை பழுது பார்க்கும் வேலையிலும் தயாரிப்பு வேலையிலும் கிராமக் கருமார்களுக்கும் தச்சர்களுக்கும் தகுந்த பயிற்சியளிக்கப்படும். விவசாயிகள் கடன் வசதிகளில் இந்த உபகரணங்களை வாங்கி உபயோகித்துக் கொள்ளும்படி செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப்படும், இதற்கான மூலப்பொருள்கள் ஒழுங்காக சப்ளையாகும்படி பார்த்துக்கொள்ளப்படும்.

தீவிர அபிவிருத்தி

"பாக்கேஜ் புரோகிராம்" என்று சொல்லப்படுகிற தீவிர சாகுபடித் திட்டத்துக்கு விவசாயத் திட்டங்களில் ஒரு முக்கிய ஸ்தானம் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் குறிப்பிட்ட சில ஜில்லாக்களில் விசேஷ உற்பத்தி இயக்கம் மேற்கொள்ளப்படும். உற்பத்தியை அதிகப்படுத்துவதற்குத் தேவையான எல்லாவித உத்திகளும் முறைகளும் அங்கே கையாளப்படும். இத்திட்டம் ஏற்கெனவே ஏழு ஜில்லாக்களில் அமுல் நடத்தப்பட்டு வருகிறது.

மக்களின் பங்கு

விவசாயத் திட்டங்களை நிறைவேற்றிவைப்பதிலும் உற்பத்திக் குறியளவுகளை எய்துவதிலும் பஞ்சாயத்துகள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், தொகுதி சமிதிகள் ஆகியவை போன்ற மக்கள் ஸ்தாபனங்களின் பங்கு பற்றி வரவர அதிகமாக வற்புறுத்தப்பட்டு வருகிறது. கிராம சமுதாயத்தினர் பெருமளவில் பங்கெடுத்துக்கொள்வதன் மூலமே திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிவைக்கமுடியும்.

காந்தியப் பாதையின் வேர்

திரு பொ. சௌரிராசன், பி. ஏ. ஆனர்ஸ்

கதர் ஒரு துண்டுநீர் வாங்குங்க—அது
காய்ந்த வயிற்று(க்கு)ச் சோறுங்க
பதரெனத் தாழ்ந்துவீண் போகாமே—மனிதப்
பண்பை வளர்க்கும் மருந்துங்க.

ஆயிரம் ஆயிரம் வீடுங்க—கதர்
அருளினை நம்பியே வாழுங்க
கரடு முருடெனத் தோன்றினும்—கதர்
கண்ணிய மக்களின் வாழ்வுங்க.

அன்பில் மிளர்வ தழகுங்க—அதை
ஆக்கி வளர்க்குங் கதருங்க
கண்ணைத் திறந்துநீர் பாருங்க—ஏழை
கண்ணீர் கலங்குதல் காணுங்க.

ஆலைகள் செய்வன யாவையும்—கண்ணுக்
கழகென நாள்தொறும் மின்னினும்
வேலை யிழந்தவர் கோடியே—அவர்
வேதனை எத்தனை கோடியோ!

குருதியில் தீட்டிய சித்திரம்—பல
கோடி அழகுடன் மின்னினும்
பார்த்து மகிழ்ந்து களிப்பமோ—அன்றிப்
பதறித் துடித்து வெறுப்பமோ!

கதர்ஒரு புதுநெறி காட்டுது—வையக்
கலைக்கெலாம் அருள்நெறி ஊட்டுது
காந்தியப் பாதையின் வேரது—இதைக்
கண்டு கொண்டநிலம் வாழுது.

ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு உற்பத்தித் திட்டம் இருக்கவேண்டும் என்று யோசனை கூறப்பட்டிருக்கிறது. இத்திட்டம் அவ்வளவு விரிவானதாக இருக்க வேண்டியதில்லை. இருக்கிற பாசன வசதிகள் தகுந்த முறையில் உபயோகிக்கப்படுகின்றனவா என்பதையும் பராமரிக்கப்படுகின்றனவா என்பதையும், பசுந்தாள் உர அபிவிருத்தி திருந்திய ரக விதைப் பெருக்கும் ஆகியவற்றில் கிராம மக்கள் பங்கெடுத்துக்கொண்டு விஸ்தரிப்பு வசதிகளைப் பயன்படுத்திக்கொள்கிறார்களா என்பதையும் கவனித்துக் கொள்வதற்கு வசதியாக சுலபமானதொரு திட்டம் தயாரித்துக்கொள்ளப்படவேண்டும்.

1961-ல் இந்தியா

ஆயிரத்தித் தொள்ளாயிரத்து அறுபத்தியொன்றும் ஆண்டில் இரண்டாவது திட்ட காலம் முடிவடைந்து மூன்ருவது திட்டம் தொடங்கும்; சுயபலம் பொருந்திய தொழில்கள் நிறைந்த பொருளாதார நிலையை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்தப்படும்; இந்த வருடம் பல துறைகளிலும் சுறுசுறுப்பாக வேலை நடைபெறும்.

இவ்வருடம் ரூர்க்கேலா, பலாய், துர்க்காபூர் ஆகிய உருக்கு ஆலைகளிலுள்ள எல்லா ஊது உலைகளும், தகடு அரைக்கும் ஆலைகளும் வேலை செய்யத் தொடங்கும். நெய் வேலியில் பழுப்பு நிலக்கரி உற்பத்தி தொடங்கி விடும். நெய்வேலி பழுப்பு நிலக்கரியை பயன் படுத்த 250,000 கிலோவாட் உற்பத்தி செய்யும் முதல் யூனிட் மின்சார நிலையமும் வேலை செய்யத் தொடங்கும்.

அஸ்ஸாமிலிருந்து, பீஹார் எண்ணெய் சுத்திகரிப்புச் சாலைக்கு குரூட் எண்ணெய் கொண்டுவருவதற்கான 720 மைல் நீள குழாய் கட்டுமான வேலையும் பூர்த்தியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கமிட்டித் தயாரிப்பு யந்திரங்கள், காகிதத் தயாரிப்பு யந்திரங்கள் ஆகிய உற்பத்தி ஆலைகள் உற்பத்தி செய்யத் தொடங்கும்.

இந்திய விமானப் படை தயாரித்துவரும் ஆவ்ரோ-748 விமானம் வெள்ளோட்டத்துக்குத் தயாராகிவிடும்.

ஆயிரத்தித் தொள்ளாயிரத்து அறுபத்தியொரும் ஆண்டில் ஒரிஸ்ஸா, ராஜஸ்தான், மத்திய பிரதேசம், ஹிராகுட், மைசூர் ஆகிய ராஜ்யங்களில் ஹிராகுட், சம்பல், கட்டபிரபா வேலைத் திட்டங்கள் பூர்த்தியாகும். மேற்கு வங்காளம், ஆந்திரப் பிரதேசம், கேரளா ஆகிய ராஜ்ஜியங்களில் மேலும் நான்கு பாசனத் திட்டங்கள் முன்னேறும். வேறு இடங்களில் ஒன்பது வேலைத் திட்ட வேலைகள் ஆரம்பமாகும்.

பாக்ரா இடது கரை மின்சார நிலையத்தில் மேலும் மூன்று யூனிட்டுகள் ஏற்படுத்தப்படும்.

நங்கல் ரசாயன உரத் தொழிற்சாலையில் வருடமொன்றுக்கு 80,000 டன் உற்பத்தி சக்தியுடன் உற்பத்தித் தொடங்கும்.

உத்திரப் பிரதேசம், பஞ்சாப், மத்தியப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில் தீவிர விவசாயத் திட்டம் ஆரம்பமாகும். சென்னை, ஆந்திரப் பிரதேசம், ராஜஸ்தான், பீஹார் ஆகிய ராஜ்யங்களில் ஏற்கனவே இத்திட்டம் வெகுவாக முன்னேறி வருகிறது.

சப்ளைகள் விஷயத்தில் பிராந்திய விலை வேறுபாடுகளைக் குறைப்பதற்காகவும் அவை ஒரே சீராக வினியோகிக்கப்படுவதற்காகவும், உணவுப் பொருள் நடமாட்டம் தாராளமாக்கப்படும்.

ஏப்ரல் மாதத்தில் 70 முன்னேட்ட கூட்டுறவு விவசாய சங்கங்கள் ஏற்படுத்தப்படும். ஒரிஸ்ஸா, பஞ்சாப், உத்திரப் பிரதேசம் ஆகிய ராஜ்யங்களில், கிராம அளவில் பஞ்சாயத்துக்களும், அபிவிருத்தித் தொகுதி அளவில் பஞ்சாயத்து சமிதிகளும் ஜில்லா அளவில் ஜில்லா பரிஷத்துக்களும் அடங்கிய மூன்றடுக்கு முறை ஏற்படுத்தப்படும்.

கைக்கடிகாரங்கள், சிறு கடிகாரங்கள், மலிவு விலை ரேடியோ ஆகிய உபயோகிக்கும் பொருள்கள் உற்பத்தி தொடங்கும்; தொழில் பண்ணைகள் ஏராளமாக நிறுவப்படும்.

கலாசாரத் துறையில் இவ்வருஷம் கவி தாகூரின் நூற்றுண்டு விழா கொண்டாடப்படும்.

ஜனக் கணிதை பிப்ரவரி 10-ம் தேதி தொடங்கி பிப்ரவரி 28-ம் தேதி இரவு பூர்த்தியாகும். இதுவரையில் மேற்கொள்ளப்பட்டதெல்லாவற்றையும் விட மிகப் பெரியதாக இருக்கும் இந்த ஜனக் கணிதையின் விளைவாக நாட்டில் நடைபெறும் முயற்சிகள், ஆகார வசதிகள், தேவைகள், திறமைகள் முதலியவற்றின் பல்வேறு அம்சங்கள் பற்றித் தெரியவரும்.

புது வருடத்தில் குழந்தைகள், இளைஞர்கள், மாதர்கள் ஆகியோரின் நலனுக்காகப் புதிய திட்டங்கள் உருவாகும்.

ஆறு வயதுக்கும் பதினெரு வயதுக்கும் உட்பட்ட லட்சக்கணக்கான பெண்களும், பையன்களும் கட்டாய ஆரம்பக் கல்வித் திட்டத்தின் கீழ் பள்ளிக்குச் செல்வார்கள்.

தேசிய ஒழுங்குக் கட்டுப்பாட்டுத் திட்டம் சுமார் 1,500 பள்ளிகளில் 7 லட்சத்துக்கும் அதிகமான குழந்தைகளிடையே விஸ்தரிக்கப்படும். மாதர் கல்விக்கான முதலாவது தேசிய நிலையம் ஏற்படுத்தப்படும். தேசிய ஆட்டத்துறை நிலையம் பாட்டியாலாவில் துவக்கப்பட்டு, பல்வேறு விளையாட்டுத் துறையில் பலருக்குப் பயிற்சியளிக்கும்.

இப்புது வருடத்தில் பல் வேறு நாடுகளிலிருந்து பிரமுகர்கள் இந்தியாவுக்கு விஜயம் செய்வார்கள். அவர்களில் எலிஸபெத் ராணியும், எடின்பரோ கோமகனும் குறிப்பிடத்தக்கவர்கள்.

இங்குப் பல் வேறு சர்வதேச மகா நாடுகள் நடைபெறும். உலக சுகாதார பொதுச் சபைக் கூட்டம் இந்தியாவில் நடைபெறும்.







18—1—61-ல் குந்தா இரண்டாவது மின்சா
நிலையத்தையும், குந்தா திட்ட மூன்றுவது கட்
வேலைகளையும் கனடாவின் முன்னாள் ராணுவ
விவகார மந்திரி ஸ்ரீ கார்டன் சர்ச்சில் ஆரம்பித்து
வைத்தார்.

உணவும் மக்கள் தொகையும்

மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டக் காலம் முடிவடையும் போது, உணவு விஷயத்தில் இந்தியா தன்னிறைவு நிலையை அடைந்திருக்கவேண்டும் என்று குறியளவு நிர்ணயிக்கப்பட்டு, அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

பெருகிவரும் மக்களின் தேவைகளைச் சமாளிப்பதற்கு, இந்நாட்டில் உணவு உற்பத்தியை 1965–66 கடைசிவாக்கில் சுமார் 10 கோடி டன்னுக்கு அதிகப்படுத்தவேண்டியிருக்கிறது என்பதாக, அண்மையில் மத்திய புள்ளி விவர சேகரிப்பு ஸ்தாபனத்தினுல் நடத்தப்பட்ட தேசிய மாதிரி சர்வே ஒன்றிலிருந்து தெரிய வந்திருக்கிறது. அதாவது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் கடைசியில் இருக்கக்கூடிய உற்பத்தி அளவைவிடச் சுமார் 33 $\frac{1}{3}$ சத விகிதம் அதிகமாக உற்பத்தியாகவேண்டும்.

இரண்டாவது திட்டத்தில், 1960–61 வாக்கில் 8·05 கோடி டன் உணவு உற்பத்தி செய்தாகவேண்டும் என்றும் குறியளவு நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதாவது, 1955–56-ல் இருந்த உற்பத்தியளவாகிய 6·58 கோடி டன்னைவிட 23 சத விகிதம் அதிகரிப்பு ஏற்படவேண்டும்; பிரஸ்தாப காலத்தில் மக்கள் தொகை சுமார் 9 சத விகிதம் அதிகரிக்கும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அக்குறியளவு எய்தப் பட்டுவிட்டால் தற்போதைய வாழ்க்கைத் தரம் பெருமளவு அபிவிருத்தியடைந்துவிடும். ஆனுல், 1958–59-ல் இருந்த உற்பத்தியளவை (7·35 கோடி டன்) கவனிக்கும்போது 1955–56-ல் இருந்த உற்பத்தியைவிட 13 சத விகிதமே அதிகரிப்பு ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், 1960–61-ல் குறியளவாகிய 23 சத விகித அதிகரிப்பை அடைந்துவிட முடியுமா என்பது சந்தேகமாகவே இருக்கிறது. தற்போதைய நிலவரங்களின்படி பார்த்தால், அதிகப்படியாக உற்பத்தியாகும் உணவை, அதிகரித்துவரும் மக்களுக்கு உணவளிப்பதற்கே பயன்படுத்த வேண்டியிருக்கும்; நபர் விகித உபயோக அளவை அவ்வளவாகப் பெருக்குவது சாத்தியப்படாது.

துணை உணவுகள்

பெருகிவரும் உணவுத் தேவையைச் சமாளிப்பதற்கு, துணை உணவுகள், காப்பு உணவுகள் ஆகியவற்றின் உபயோகத்தைப் பெருக்குவது அத்தியாவசியமாகும். இந்த வகை உணவுப் பொருள்கள் உணவுத் தானியங்களைவிடத் தாராளமாகவும், எப்போதும் தட்டுப்பாடின்றியும் கிடைத்து வருகின்றன. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் சர்க்கரை, வெல்லம் ஆகியவற்றின் உற்பத்தி 50 சத விகிதமும், தாவர எண்ணெய்களின் உற்பத்தி 15·5 சத விகிதமும், பால் உற்பத்தி 33.3 சத விகிதமும் அதிகரித்துள்ளன. பரிசீலனைக் காலத்தில், மக்கள் தொகையில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு 8·2 சதவிகிதமாகும் தேசீய வருமானம் 18·4 சத விகிதம் அதிகரித்திருக்கிறது. சென்ற பத்து வருஷ காலத்தில் இந்த வகை உணவுப் பொருள்களின் உற்பத்தி ஓரளவு அதிகரித்துள்ள போதிலும், பெரும்பாலான துணை உணவுப் பொருள்கள், காப்பு உணவுப் பொருள்கள் ஆகியவற்றின் சராசரி உபயோக அளவு, இந்திய வைத்திய ஆராய்ச்சிக் கௌன்சிலின் சத்துணவு ஆலோசனைக் கமிட்டி வகுத்துள்ள சம உணவின் தேவைகளைவிட மிகவும் குறைவாகவே இருக்கிறது.

சத்துணவுத் தேவைகளுக்கும் வாஸ்தவமாகக் கிடைக்கிற உணவுக்கும் இடையே இன்னும் பெருமளவு இடைவெளி இருந்துகொண்டுதான் இருக்கிறது. நமது தற்போதைய சராசரி உணவின் மொத்த "கலோரி" மதிப்பு 2,380 யூனிட்டுகள் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனுல், நமக்கு 3,000 யூனிட்டுகளுக்குமேல் தேவைப்படுகிறது. பால், இறைச்சி, மீன், பழ வகைகள், காய்கறிகள் ஆகியவைபோன்ற சத்துணவுகள் நமது அன்றாட சராசரி சாப்பாட்டில் போதிய அளவு சேர்கிறதில்லை. தற்போதைய மக்கள் பெருக்க விகிதம் கணிசமாகக் குறைந்து நமது உணவுப் பழக்க வழக்கங்களில் தகுந்த மாறுதல்கள் ஏற்பட்டாலொழிய, தற்போதைய நிலைமைக்குத் தீர்வு காணுவது சமீப காலத்துக்குள் சாத்தியமாகக் கூடியதல்ல.

மூன்றுவது திட்ட லட்சியம்

நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு சுமார் 18 அவுன்ஸ் அல்லது வயது வந்த நபர் ஒருவருக்கு 20·9 அவுன்ஸ் வீதம் உணவுத் தானியங்கள் உபயோகத்துக்குக் கிடைக்கக்கூடியபடி, மூன்றுவது ஐந்தாண்டுத் திட்டத்தில் உணவுத் தானிய உற்பத்தியளவை எய்தவேண்டும் என்பது நமது லட்சியமாகும். சாகுபடி நடவடிக்கைகளை தீவிரப்படுத்துவதின் மூலமும் ஏக்கரா விகித மகசூலைப் பெருக்குவதன் மூலமும் உணவுத் தானிய உற்பத்தியைப் பெருக்குவதற்கு ஒருமுகப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. உபரிக் கையிருப்பை வைத்துக் கொள்வதற்காக உணவுத் தானியங்கள் வெளிநாடுகளிலிருந்தும் இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது.

உணவுத் தானிய உற்பத்திக் குறியீட்டெண் 1949–50-ல் 100 ஆக இருந்தது; முதலாவது திட்டக் கடைசியில் (1955–56) 115·3 ஆகவும், 1958–59-ல் 128·2 ஆகவும் உயர்ந்தது. அதாவது முதலாவது திட்ட காலத்தில் 15·3 சதவிகிதம் அதிகரிப்பு ஏற்பட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டத்தில் முதல் மூன்று வருஷங்களில் மேலும் 11 சத விகிதம் உயர்ந்தது. ஆனுல், மக்கள் தொகைEா

முதலாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் 9·7 சத விகிதமும், இரண்டாவது திட்டத்தின் முதல் மூன்று வருஷங்களில் மேலும் 6 சத விகிதமும் அதிகரித்தது.

உணவுத் தானியங்கள் இறக்குமதி

பாதகமான சீதோஷ்ண நிலைமைகள் காரணமாகவும் வெள்ளச் சேதங்கள் காரணமாகவும் 1959–60-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி குறைந்துவிட்டது. எனவே வெளிநாடுகளிலிருந்து இந்தியா உணவுத் தானியங்களை, இறக்குமதி செய்தாகவேண்டியிருக்கிறது.

உணவுத் தானியங்களின் சப்ளையானது வாஸ்தவமான தேவையைவிடக் குறைவாக இருக்கிறது. முதலாவது திட்ட ஆரம்பத்துக்கு முன்பிருந்த நிலைமையோடு ஒப்பிடும்போது, தற்போது, மக்களின் வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதின் பலனாக உணவுத் தானியங்களின் நபர் விகிதத் தேவைகள் அதிகரித்திருப்பதே இந்த நிலைமைக்குப் பிரதான காரணமாகும். வாங்கும் சக்தி அதிகரித்திருப்பதினாலும் கிராமங்கள் படிப்படியாக நகரங்களாக வளர்ச்சியடைந்து வருவதனாலும், நமது மக்கள் கம்பு, சோளம், ராகி முதலிய மட்ட ரகத் தானியங்களை விட்டு விட்டு, கோதுமை, அரிசி ஆகிய உயர் ரகத் தானியங்களையே மென்மேலும் அதிகமாக உபயோகிக்க ஆரம்பித்து விட்டனர். இதன் காரணமாக கோதுமைக்கும் அரிசிக்கும் கிராக்கி மிகவும் அதிகரித்திருக்கிறது.

இறக்குமதிகளின் ஏற்ற இறக்கங்கள்

உணவுத் தானியங்களின் இறக்குமதி அளவு, நாட்டின் தேவைகளையும், ஒவ்வொரு வருஷத்திய உற்பத்தியையும் பொறுத்து, 1948-லிருந்து ஏறிக்கொண்டும் இறங்கிக் கொண்டும் வந்திருக்கிறது.

இந்தியாவில் 1953–54-ல் உணவுத் தானியங்களின் உற்பத்தி உச்ச அளவை எட்டியபோது இறக்குமதிகள் மிகவும் குறைத்துக்கொள்ளப்பட்டன. 1954-ல் 8·1 லட்சம் டன்னும், 1955-ல் 7 லட்சம் டன்னும் இறக்குமதி செய்யப்பட்டிருக்க, 1951-ல் இறக்குமதி 47.25 லட்சம் டன்னை எட்டிவிட்டது.

வருஷம்.	தானிய இறக்குமதி (1000 டன் கணக்கில்).	மதிப்பு (லட்ச ரூபாய்க் கணக்கில்).
1948	2,841	12,972
1949	3,706	14,460
1950	2,125	9,060
1951	4,725	21,679
1952	3,864	20,907
1953	2,003	8,595
1954	808	4,702
1955	700	3,311
1956	1,420	5,634
1957	,5	16,218
1958	173	12,052
1959	3,807	14,141

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் மக்கள் தொகை அதிகரிப்பின் காரணமாகவும், தேசீய வருமான அதிகரிப்பின் பலனாக மக்களின் வாங்கும் சக்தி உயர்ந்திருப்பதின் காரணமாகவும், பெருவாரியான அபிவிருத்திச் செலவுகள் காரணமாகவும் உணவுத் தானியங்களுக்குக் கிராக்கி அதிகரித்துவிடும். எனவே, இன்னும் சில வருஷங்களுக்கு உணவுத் தானியங்களைத் தொடர்ந்து இறக்குமதி செய்யவேண்டிய அவசியம் ஏற்படக்கூடும்.

நமது உணவுப்பிரச்னைக்குத் தீர்வுகாணுவதற்கு, உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கான தீவிர முயற்சிகளை மேற்கொண்டால் மட்டும் போதாது ; துரிதமாக உயர்ந்துவரும் மக்கள் தொகை அதிகரிப்பு விகிதத்தைத் தடுத்து நிறுத்தியாகவேண்டும். இந்த லட்சியத்தை அடைவதற்குக் குடும்பக் கட்டுப்பாடு இயக்கம் நாடெங்கிலும் தொடர்ந்து மேற்கொள்ளப்படவேண்டும். உணவுத் தானியங்கள் விஷயத்தில் தன்னிறைவு நிலையை அடைவதற்கு, சமூக ஊழியர்கள், வைத்தியத்துறை சிப்பந்திகள், விஞ்ஞானிகள், நிர்வாகஸ்தர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் முயற்சிகளும் சக்திகளும் பெருமளவில் தேவைப்படுகின்றன.

[16-ம் பக்கத் தொடர்ச்சி]

மென்பது கரைகாண முடியாத ஆசை! அவன் பாடுகிறான் ;

“ வாழையடி, உன்கூந்தல்
வைரமடீ பற்காவி,
ஏழையடீ நான் உனக்கு
இரங்கிலையோ உன்மனசு ”

அவளுக்கோ, மகிழ்ச்சி தாங்க முடியவில்லை “ மச்சான் ! இதுவரை உங்களிடம் வேண்டுமென்றேதான் விவாதம் செய்தேன் ! உங்களைத் தவிர வேறு யாரைப் போய் திருமணம் செய்து கொள்ளப் போகிறேன் ? அவசரப்படாதீர்கள் ! இதோ, வாழைப்பழம் கொஞ்சம் சாப்பிடுங்கள் !”—ஆசை அலைமோத செங்காந்தள் விரல்களால் தருகிறாள்.

“ இட்டேரிக் கள்ளிப்பழம்
இந்தா, மச்சான் வாழைப்பழம் ”.

அவனுக்கும் மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. அந் நேரம், அவள் தனது செம்பவள வாய்திறந்து சின்னஞ்சிறு புன்னகை யொன்றைச் சிந்தி அன்பும் ஆதரவும் ததும்ப “ மச்சான் !” என்று அழைத்ததே பெரும்பேறு என எண்ணி மகிழ்கிறது அவனது இளமை நெஞ்சம் !

“ கண்ணே ! பொன்னே ! கரும்பே ! அரும்பே ! மயிலே ! குயிலே ! கயல்விழியே !
என மகிழ்ச்சிக் கூத்தாடுகிறான்.

“ சோலையிளம் மாமயிலே !
சுடர்விளக்கே ! கயல்விழியே !
வாழைப்பழம் வேண்டாமடீ !—உன்
வாயுறவே போதுமடீ !”

அவ்வளவுதான் ! பின் கேட்கவும் வேண்டுமோ ?

கிராமங்களுக்கு மின்சார வசதி

குறைந்த பட்ச உத்தரவாதத் தொகைக் குறைப்புக் கமிட்டி சிபார்சுகள் மீது அரசாங்கத்தின் முடிவுகள்

மின்சார சப்ளை விஷயத்தில் விசேஷ உத்தரவாத நிபந்தனையைப் பூர்த்தி செய்வது தங்களுக்கு மிகவும் கஷ்டமளிப்பதாக விவசாயிகள் தெரிவித்துக் கொண்டிருந்தனர். இந்த முறையின் விளைவாக, மாநிலத்தில் பின்னடைந்த பிரதேசங்களில் விவசாயத்துக்கு மின்சார சப்ளை விஸ்தரிப்பு வேலையின் முன்னேற்றம் தடைப்பட்டிருப்பதாகவும் அவர்கள் எடுத்துக்காட்டினர். இதையொட்டி இப்பிரச்னையை ஆராய்வதற்கு அரசாங்கம் 1959 வருஷம் மே மாதத்தில் ஒரு கமிட்டியை நிறுவியது. அரசாங்க மராமத்து இலாகா காரியதரிசி, அரசாங்க உணவு விவசாய இலாகா காரியதரிசி, அரசாங்க நிதி இலாகா காரியதரிசி, ரெவின்யூ போர்டு காரியதரிசி, சென்னை மின்சார போர்டு பிரதம இஞ்சினீயர் ஆகியவர்கள் கமிட்டியில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டனர். தொழில் வளர்ச்சியின் தேவைகளுக்கு குந்தகம் ஏற்படாமல், வருஷாவருஷம் எந்தெந்த கிராம மின்சார விஸ்தரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பதையும், விவசாயிகளுக்கு விசேஷ உத்தரவாதத் தொகையைக் குறைப்பதற்காக, உதவித் தொகை ஏதாவது தரப்பட வேண்டுமா என்பதை ஆராயவும் இக்கமிட்டி நிறுவப்பட்டது.

1959 டிசம்பரில் கமிட்டி தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. சென்னை மாநில மின்சார போர்டுடன் கலந்து கொண்டு அந்த அறிக்கை பரிசீலனை செய்யப்பட்டது. விவசாயத் தேவைக்கும் தொழில் துறை தேவைக்கும் இடையே ஒதுக்கீடுகளை நிர்ணயிப்பது அவசியமில்லை என்று கமிட்டி அபிப்பிராயப்பட்டது. இந்த இரு பிரிவுகளிலும் லோடுகள் அதிகரித்து வருமாறு விடலாம் என்றும், கமிட்டி அபிப்பிராயப்பட்டது.

எது முன்னடைந்த பிரதேசம் எது பின்னடைந்த பிரதேசம் என்று திட்டமாக எல்லை குறிப்பிடுவது சாத்தியமல்ல என்றும் கமிட்டி அபிப்பிராயப்பட்டது. எனவே சில குறிப்பிட்ட தாலுக்காக்களை குறிப்பிட்டு, பின்னடைந்த தாலுக்காக்கள் என்று பட்டியல் தயாரித்துள்ளது. கிராமங்களுக்கு மின்சார வசதி விஷயத்தில் முதலிட வரிசைக் கிரமம் அமைத்துக் கொள்ள இவ்வாறு செய்யப்பட்டிருக்கிறது. குறைந்த பட்ச உத்தரவாதத் தொகை விஷயத்தில் முன்னேற்றமடைந்த பகுதிகளுக்கு தொகையை ரூ. 50 லிருந்து 45-க்கு குறைக்கலாம் என்றும், பின்னடைந்த பகுதிகளுக்கு ரூ. 35 ஆகக் குறைக்கலாம் என்றும் கமிட்டி சிபார்சு செய்தது. கிராமங்கள், கிராமப் பகுதி அல்லாதவைகளின் லோடுகள் மூலமாக வருமானத்தைக் கணக்கிட்டதில், ரெவின்யூ கணக்கில் நஷ்டமேற்பட்டிருந்தால், போர்டுக்கு உதவித் தொகையாக அளிக்க வேண்டும், என்று கமிட்டி சிபார்சு செய்திருக்கிறது. போர்டின் ரெவின்யூ கணக்கில் காணப்படும் நஷ்டம், அல்லது கமிட்டியின் சிபார்சுப்படி குறைக்கப்படும் குறைந்தபட்ச விகிதக் கணக்கு இந்த இரண்டில் எது குறைவாக இருக்கிறதோ அதை உதவித் தொகையாக அளிக்க வேண்டும்.

கமிட்டியின் சிபார்சை ஒரு நிபந்தனையுடன் மின்சார போர்டு ஏற்றுக் கொண்டுள்ளது. மின்சார சப்ளைச் சட்டப்படி அரசாங்கம் உத்திரவு பிறப்பிப்பதினால், அதன்படி நடந்து நஷ்டம் ஏதாவது ஏற்படுமானால், அத்தகைய விஷயத்தில் இதை முன் மாதிரியாகக் கொள்ளலாகாது என்பதே அந்த நிபந்தனையாகும். விவசாய அபிவிருத்தியில் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவும் அறிகுறியாகவே தற்போதைய இந்த உடன்பாட்டுக்கு வந்திருக்கிறோம் என்றும் போர்டு குறிப்பிட்டுள்ளது.

அரசாங்கம் கமிட்டியின் சிபார்சை ஏற்றுக்கொண்டு பின்வருமாறு உத்திரவிட்டுள்ளது.—1960 ஏப்ரல் 1 முதல் விசேஷ குறைந்தபட்ச உத்தரவாதமானது, முன்னேற்றமடைந்த பிரதேசங்களில் ஒரு குதிரை சக்திக்கு ரூ. 50 லிருந்து ரூ. 45 ஆகக் குறைக்கப்படும். பின்னடைந்த பகுதிகளில் 35 ரூபாயாகக் குறைக்கப்படும். முன்னேற்றமடைந்த பகுதி எது, பின்னடைந்த பகுதி எது என்பதை தீர்மானிக்கும் பொறுப்பு மின்சார போர்டின் முடிவுக்கு விடப்படும்.

கிராமப் பகுதிகள், கிராமமல்லாத பகுதிகள் ஆகியவற்றின் லோடுகளைக் கணக்கில் கொண்டதில், விசேஷ உத்தரவாதத் தொகைக் குறைப்புக் காரணமாக மின்சார போர்டின் ரெவின்யூ கணக்கில் நஷ்டம் ஏற்படுவதாகத் தெரியவந்தால், மின்சார போர்டுக்கு அரசாங்கம் உதவித் தொகை அளிக்கும். போர்டின் ரெவின்யூ கணக்கில் கண்டுள்ள நஷ்டம் அல்லது உத்தரவாதத் தொகை முன்னேற்றப் பகுதிகளில் ரூ. 45 ஆகவும், பின்னடைந்த பகுதிகளில் ரூ. 35 ஆகவும் குறைக்கப்படுவதினால் எந்த அளவு நஷ்டம் ஏற்படுகிறதோ அந்த நஷ்டம் இந்த இரண்டில் எது குறைவோ, அந்த அளவுக்கு உதவித் தொகை வழங்கப்படும்.

மாநிலத்தில் பின்னடைந்த தாலுக்காக்கள் என்று கமிட்டி குறிப்பிட்டுள்ள தாலுக்காக்களின் விவரமாவது :—

ராமனதபுரம் மாவட்டத்தில் ஸ்ரீ வில்லிப்புத்தூர் நீங்கலாக மற்ற தாலுக்காக்கள் ;

தென் ஆர்க்காடு மாவட்டத்தில் சிதம்பரம், திருக்கோயிலூர் நீங்கலாக மற்ற தாலுக்காக்கள் ;

திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குனேரி, திருச்செந்தூர், கோயில்பட்டி, சங்கரன் கோயில் தாலுக்காக்கள் ;

சேலம் மாவட்டத்தில் ஹொசூர், ஹரூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி தாலுக்காக்கள் ;

மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல், பழனி திருமங்கலம் தாலுக்காக்கள் ;

வட ஆர்க்காடு மாவட்டத்தில் செங்கம், வந்தவாசி தாலுக்காக்கள் ;

புதுக்கோட்டைப் பிரதேசத்தின் மூன்று தாலுக்காக்களும் ;

திருச்சி மாவட்டத்தில் உடையார்பாளையம் தாலுக்கா.

கோவை மாவட்டத்தில் பல்லடம், தாராபுரம் தாலுக்காக்கள் ;

தஞ்சை மாவட்டத்தில் அறந்தாங்கி, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி, ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, தஞ்சாவூர் (மடிகை வள்ளம், செங்கிப்பட்டி பிர்க்காக்கள்).

தஞ்சை தாலுக்கா விஷயத்தில் மேடான பகுதி, மற்ற பகுதியைவிட மிகவும் மாறுபட்டது. ஆகையால் தாலுக்காப் பகுதி அங்கு கணக்கில் கொள்ளப்பட்டது.

செங்கற்பட்டு, கன்னியாகுமரி, நீலகிரி மாவட்டங்களில் அநேகமாக எல்லா கிராமங்களுமே மின்சார வசதி பெற்றுவிட்டன. எனவே, கிராம மின்சார வசதியைப் பொறுத்த வரையில் அவை பின்னடைந்த பகுதிகளாகக் கருதப் படவில்லை.

—(::)—

எழுத்தாளர்களின் கவனத்திற்கு

பிறர் எழுதிய கதைகளையும், நாடகங்களையும், கட்டுரைகளையும் தழுவாமலும், மொழிபெயர்க்காமலும் சொந்த கற்பனை அல்லது அனுபவத்தையொட்டி, எழுதியனுப்பப்படும் சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள், கிராம நலம் பற்றிய கட்டுரைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து **கிராம நலத்தில்** வெளியிடுவதற்காக ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. **கிராம நலத்தில்** பிரசுரிக்கப்பட்ட பிறகு, அவைகளில், **சிறந்தவற்றிற்கு** ஒவ்வொரு மாதமும் கீழ்க்கண்டவாறு சன்மானம் வழங்கப்படும் :—

சிறு கதை.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இது 5 பக்கங்களுக்குட்பட்டு இருக்கவேண்டும்)—ரூ. 25,

ஓரங்க நாடகம்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், 6 பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 25.

பாடல்கள்.—("கிராம நலத்தில்" வெளியிட்டால், இவை ஒரு பக்கத்துக்குள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு.)

கிராம வளம், காந்திய நிர்மாணத் திட்டங்கள் பற்றிய கட்டுரைகள்.—(இவை "கிராம நலத்தில்" வெளியிட்டால், இரண்டு பக்கங்களுள் அடங்கவேண்டும்)—ரூ. 10-லிருந்து 20 வரை (தரத்திற்கேற்றவாறு)

முக்கிய குறிப்பு—சிறு கதைகள், ஓரங்க நாடகங்கள், நாட்டுப் பாடல்கள் முதலியவை **பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன், சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், காந்திய தத்துவம்** முதலியவற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப் படுவதுடன், விவசாயம் பற்றியோ சமுதாய நலத் திட்ட வட்டாரங்களில் தமக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்களை யொட்டியோ எழுதப்பட்டவையாக இருத்தல் வேண்டும். சிறந்த கதைகளுக்கும், நாடகங்களுக்கும், நாட்டுப் பாடல்களுக்கும், கட்டுரைகளுக்கும் சன்மானமளிப்பது பற்றி ஆசிரியர் செய்யும் முடிவே இறுதியானது. "கிராம நலத்தில்" பிரசுரிக்கப்படாத கதைகள், கட்டுரைகள் முதலியவற்றைத் திருப்பி அனுப்புவது சாத்தியமல்ல. எனவே, தங்கள் எழுத்தோவியங்களின் மூலத்தை அனுப்பாமல், நகல்களை மட்டும் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம். அரசாங்க உத்தியோகச் சார்புள்ளவர்களும், இந்தப்பணியில் நேரடியாகக் கலந்துகொள்ளலாம். அரசாங்கப் பத்திரிகையான "கிராம நலத்திற்கு" எழுத, அவர்களுக்கு எந்த விதத் தடையும் இல்லை. சன்மானம் பெற அவர்களும் உரிமை உள்ளவர் ஆவர்.

சிறப்பாக, புதிய எழுத்தாளர்கள்—கிராம சேவையில் ஊறியவர்கள்—தாம் பெற்ற அனுபவங்களை மற்றவருடன் பகிர்ந்துகொள்ளும் தொண்டுள்ளமும் கலை ஆர்வமும் படைத்தவர்கள்—இந்த வாய்ப்பை உடனடியாகப் பயன்படுத்திக் கொண்டு, திறமை மிக்க எழுத்தோவியங்களை உடனடியாக அனுப்புவார்கள் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆசிரியர்,
"கிராம நலம்"
கிராம அபிவிருத்தி, தல நிர்வாகத் துறை, சென்னை-9.

மாதர்கள் ஆட்சிபுரியும் கிராமப் பஞ்சாயத்து

[மட்டம்பள்ளி கிராமப் பெண்களின் அரியதொரு சாதனை]

சமுதாய நல அபிவிருத்தித் தொகுதிகள் சிலவற்றில் பெண்களின் ஆட்சி ஆரம்பமாகிவிட்டது என்பதை மட்டம்பள்ளி கிராமப் பெண்கள் நன்கு நிரூபித்துள்ளனர். ஆண்களைவிடப் பெண்கள் திறமையாக நிர்வாகம் நடத்த முடியும் என்பதற்கு இது ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. ஆந்திரப் பிரதேசத்தைச்சேர்ந்த நல்கொண்டா ஜில்லாவில் ஹுஜூர் நகர் தொகுதி பஞ்சாயத்து சமிதியிலுள்ள இந்த கிராமத்தின் கிராமப் பஞ்சாயத்துக்கு எல்லா அங்கத்தினர்களும் பெண்களாகவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் ; 1959 நவம்பரில் நடத்தப்பட்ட தேர்தல் ஒன்றில் இந்த எட்டு ஸ்திரீ அங்கத்தினர்களும் பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பஞ்சாயத்துக்குப் பெண்கள் மட்டுமே தேர்ந்தெடுக்கப் படவேண்டும் என்ற கருத்தை, புதுமையில் நாட்டமில்லாத அக்கிராமவாசிகளில் சிலர் விரும்பவில்லை. பெண்களின் ஆதிக்கம் ஓங்கிவிடும் என்று மற்றும் சிலர் புகார் செய்தார்கள்.

ஆனால், ஜில்லா பரிஷத்தின் தலைவர், கிராம நிர்வாகத்தை மாதர்களும் நல்ல முறையில் நடத்தமுடியும் என்றும், அவர்கள் தங்களுடைய திறமைகளை வெளிபடுத்துவதற்கான ஒரு வாய்ப்பை நாம் எந்தவகையிலும் தடுத்துவிடக் கூடாது என்றும், அக்கிராமவாசிகளுக்கு எடுத்துரைத்து சமாதானம் கூறினார்.

கைதூக்கும் முறை மூலம் அக்கிராமத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்தப்பட்டன. ஆதன் ஜனத்தொகை 1,710 ஆண்கள், 1,890 பெண்கள். மொத்தம் எட்டு ஸ்தானங்களில் ஆறு ஸ்தானங்களுக்கு ஆறு பெண்கள் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். மீதி இரண்டு ஸ்தானங்களில் பெண்களுக்கு எதிராகப் போட்டியிட்ட இரண்டு ஆண்கள் தோற்கடிக்கப்பட்டார்கள்.

பெண்களால் நிர்வகிக்கப்பட்டுவருகிற இந்த கிராமப் பஞ்சாயத்து இந்த ஒரு வருஷ காலத்துக்குள் சிறப்பான சாதனைகள் புரிந்திருக்கிறபடியால், முன்பு பெண்களின் நிர்வாகத்தை விரும்பாதிருந்தவர்கள்கூட, இப்போது இப் பஞ்சாயத்துக்குப் பூரண ஒத்துழைப்பு அளித்துவருகின்றனர். அபிவிருத்தி வேலைகளை ஆண்களைவிடப் பெண்கள் மிகவும் சிரத்தையுடன் செய்துவருகின்றனர்.

கிராம வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் ஏற்கெனவே கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. மாதிரி கிராமமொன்றுக்கு இருக்கவேண்டிய மூன்று அடிப்படை ஸ்தாபனங்களும், அதாவது ஒரு கிராமப்பஞ்சாயத்து, ஒரு கிராமக் கூட்டுறவு சங்கம், ஒரு கிராமப் பள்ளிக்கூடம் ஆகியவை இப்போது இந்த கிராமத்தில் இருக்கின்றன.

இந்த கிராமப் பஞ்சாயத்து மேற்கொண்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளில் தீவிர விவசாய உற்பத்தித் திட்டத்துக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின் கீழ், பாசன வசதி அளிப்பதற்காக, ஏற்கெனவே இருந்துவந்த நான்கு சிறிய குளங்கள் பழுதுபார்க்கப்பட்டுள்ளன. ரசாயன உரங்களின் வினியோக வேலையைக் கையாள்வதற்காக விவசாயத் துறைக் கிடங்கு ஒன்று அங்கே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த ஒரு வருஷத்தில் மொத்தம் ரூ. 29,000 மதிப்புக்கு ரசாயன உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. நெல் சாகுபடிக்குமட்டுமின்றி, பருத்தி சாகுபடிக்கும் நேர் கோட்டு நடவுமுறை பிரபலப்படுத்தப்பட்டிருக்கிறது. பயிர்களைப் பாதிக்கும் பூச்சிப் பொருட்டுகளையும் நோய்களையும் கட்டுப்படுத்துவதற்காக மருந்து தெளிக்கும் சாதனங்கள் 12-ம், மருந்து தூவும் சாதனங்கள் 4-ம் இந்த கிராமப் பஞ்சாயத்தில் வாங்கப்பட்டுள்ளன. இந்த கிராமத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள கிராமக் கடன் வசதி சங்கம் உற்பத்திக் கடன்களாக மொத்தம் ரூ. 20,000 வழங்கியிருக்கிறது.

கால்நடை வைத்தியத்துக்கான முதல் உதவி நிலையமொன்றும் அங்கே இயங்கி வருகிறது. உள்நாட்டு வாத்து, கோழிகளுக்குப் பதிலாக வெளிநாட்டு இனங்களை அபிவிருத்தி செய்வதற்கும் இந்தப் பஞ்சாயத்து முயற்சி செய்துவருகிறது. கால்நடைகளின் இனவிருத்தியை உயர்த்துவதற்காக முர்ரா எருமை ஒன்று வாங்கப்பட்டிருக்கிறது.

பஞ்சாயத்து சமிதியின் உதவியுடன் முதியோர் கல்வி நிலையமொன்றும் நடத்தப்பட்டு வருகிறது ; அங்கே இது வரையில் 300 பேர் எழுதப் படிக்கக் கற்றுக்கொண்டுள்ளனர். இந்தப் பஞ்சாயத்து ரூ. 275 க்கு சமுதாய ரேடியோ பெட்டியொன்றை வாங்கியிருக்கிறது.

குழந்தைகளுக்கான பூங்காவுடன் கூடிய "பால விஹார்" ஒன்று ரூ. 1,000 செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. இளைஞர் சங்க உறுப்பினர்கள் தங்கள் உடலுழைப்பை நல்கி நூல் நிலையக் கட்டட மொன்றைக் கட்டிக் கொடுத்துள்ளனர்.

ஐம்பது கிராமப் பெண்கள் சேர்ந்து அமைத்துள்ள மகிள மண்டலி அக்கிராமப் பெண்கள் க்ஷேமநலத்தைக் கவனித்துவருகிறது. மகிள மண்டலி உறுப்பினர்களின் முயற்சிகளின் மூலம் 30 புகைமண்டாத அடுப்புகள் கட்டப்பட்டுள்ளன ; தையல் பயிற்சி நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

ஹரிஜனங்களின் மேம்பாடு விஷயத்திலும் இந்த கிராமப்பஞ்சாயத்து மிகுந்த அக்கரை எடுத்துவருகிறது. ஹரிஜனங்களுக்காக இரண்டு குடித்தண்ணீர் கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன ; வீடுகள் கட்டிக்கொள்வதற்காக 23 ஹரிஜனங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. மட்டம்பள்ளி கிராமத்துக்கும் அமராவரத்துக்கும் இடையே ரூ. 3,000 செலவில் கச்சா ரஸ்தா ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது அந்த கிராமத்துக்கு பஸ் போக்குவரத்து ஏற்பட்டிருக்கிறது.

இப்போது ரூ. 10,000 செலவில் பஞ்சாயத்துக் காரியாலயமொன்று கட்டப்பட்டு வருகிறது.

பத்து வருட திட்ட ரீதியான முன்னேற்றம்

சென்றகாலச் சிறப்பும் வருங்கால வளமும்

இந்தியாவில் அடுத்த ஐந்து வருட காலத்தில் சுய பலம் பொருந்திய வளர்ச்சியை நோக்கிக் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என்பதை இப்போது நிச்சயமாகக் கூறலாம். 1950–51 முதல் 1960–61 வரையில் நடைபெற்ற திட்ட ரீதியான முயற்சியில் நமக்கு ஏற்பட்ட அனுபவம் இதற்கு உறுதுணையாக இருக்கும்.

அதாவது நாம் விரும்பும் அளவுக்கு அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்குத் தேவையான மூலதனச் சரக்குகளையும், கருவிகளையும் இந்தியாவில் தயாரிப்பதற்கான உற்பத்தி சக்தி கிடைக்கும் ; வருமானம் வளருவதற்கேற்றபடி சேமிப்புகளும் முதலீடுகளும் போதுமானவையாக இருக்கும்.

ஜனநாயகக் கட்டுக்கோப்புக்குட்பட்ட பத்து வருடத் திட்ட முயற்சியின் பயனாக எல்லா துறைகளிலும் நம்நாடு கணிசமாக முன்னேறியிருக்கிறது. தேசிய வருமானம் ஸ்திர விலைகளின் அடிப்படையில் சுமார் 42 சத வீதம் அதிகரித்திருக்கிறது. நபர் விகித வருமானம் சுமார் 20 சதவீதம், உபயோக அளவு 16 சத வீதம் உயர்ந்திருக்கின்றன ; நமது மக்கள் எண்ணிக்கை வருடந்தோறும் 2 சத வீதம் அதிகரித்துவருகிற இந்த சந்தர்ப்பத்தில் இவை கணிசமாகவே இருக்கின்றன.

உணவு உற்பத்தி

பொருளாதார வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கிற விவசாயத்துறையில் உணவு உற்பத்தி அதிகரித்திருக்கிறது. முதல் திட்ட கால ஆரம்பத்தில் 5 கோடி 22 லட்சம் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி அளவு இரண்டாவது திட்டக் கடைசியில் 7 கோடி 50 லட்சம் டன்னாகப் பெருகியிருக்கிறது.

விவசாயிகள் நிறைந்துள்ள சுமார் நான்கு லட்சம் கிராமங்களிலும், அவர்களின் முன்னேற்றத்துக்காக விவசாய விஸ்தரிப்பு சேவைகள் செயலாற்றி வருகின்றன. பிரதம விவசாய சங்க வளர்ச்சியில் நல்ல கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது ; அவை விவசாய வளர்ச்சியில் முக்கிய பங்குவகிக்கின்றன. அவற்றின் எண்ணிக்கை இரட்டித்திருக்கிறது. அங்கத்தினர் எண்ணிக்கை 44 லட்சத்திலிருந்து ஒரு கோடி 20 லட்சமாக வளர்ந்திருக்கிறது. இப்போது சுமார் 7 கோடி ஏக்கராவுக்குப் பாசன வசதி கிடைக்கிறது. முதல் திட்ட ஆரம்பத்தில் இது 5 கோடி 15 லட்சம் ஏக்கராவாக இருந்தது.

தீவிர விவசாயம்

சுமார் 2 கோடி 20 லட்சம் ஏக்கராவில் பசுந்தாள் உரமிடப்படுகிறது. ரசாயன உர உபயோகம் 55 ஆயிரம் டன்னிலிருந்து 3 லட்சத்து 60 ஆயிரம் டன்னாக உயர்ந்திருக்கிறது. ரசாயன உரத் தேவை சமாளிக்கமுடியாத அளவில் இருக்கிறது ; அதாவது நவீன முறைச் சாகுபடி எங்கும் பரவியிருக்கிறது.

தொழில் வளர்ச்சி

தொழில் வளர்ச்சி இன்னும் கணிசமாகவும் பரவலாகவும் இருக்கிறது. புதுப் பகுதிகளில் தொழில்மய நடவடிக்கை பரவியிருப்பதோடு உற்பத்தி சாதனத் தொழிற்சாலைகளும், யந்திர உற்பத்தித் தொழிற்சாலைகளும் ஏராளமாக நிறுவப்பட்டு வருகின்றன. சென்ற பத்து வருடங்களில் தொழிலியல் உற்பத்தி சுமார் 60 சத வீதம் அதிகரித்திருக்கிறது.

உருக்கு உற்பத்தித் திட்டத்தின்கீழ், முதல் திட்டத் துவக்கத்தில் 10 லட்சம் டன்னாக இருந்த உருக்கு உற்பத்தி சக்தி இரண்டாவது திட்ட இறுதியில் 45 லட்சம் டன்னாக உயரும் நிலையிலிருக்கிறது. பொதுத்துறையில் ரூர்க்கேலா, துர்க்காப்பூர், பிலாய் ஆகிய இடங்களில் மூன்று உருக்கு ஆலைகள் இருக்கின்றன. தனியார் துறை உற்பத்தி சக்தி இருமடங்காகப் பெருகியிருக்கிறது. ரசாயனத் தொழில்களில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றமும் கணிசமாக இருக்கிறது. வருடாந்திரத் தொழில் யந்திர உற்பத்தி மதிப்பு 11 கோடி ரூபாயாக இருந்தது பத்து வருடங்களில் 100 கோடி ரூபாயாகப் பெருகியிருக்கிறது. பூரண உருக்கு ஆலைக்குவேண்டிய யந்திரங்களை உற்பத்தி செய்ய அஸ்திவாரமிடப்பட்டிருக்கிறது.

சிறு தொழில்கள்

ஒரு காலத்தில் அழியும் தருவாயிலிருந்த கைத்தறித் தொழிலுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டதனால் 74 கோடி 20 லட்சம் கஜம் துணி உற்பத்தியாகி வந்த இந்த தொழிலில் இப்போது 210 கோடி கஜம் உற்பத்தியாகிறது. கதர் துணி உற்பத்தியும் பெருகியிருக்கிறது.

சிறு தொழில் நிலையங்களும் எதிர்பார்த்த அளவை விடக் கணிசமாக வளர்ந்திருக்கின்றன.

மின்சார உற்பத்தி சக்தி 23 லட்சம் கிலோவாட்டிலிருந்து 58 லட்சம் கிலோவாட்டாக அதிகரித்திருக்கிறது. திட்ட துவக்கத்தில் சுமார் 3,700 நகரங்களுக்கும் கிராமங்களுக்குமட்டுமே மின்சார வசதிகிடைத்தது. இன்று தொழில், விவசாயம், வெளிச்ச வசதி ஆகியவற்றுக்காக 19,000 நகரங்களிலும் கிராமங்களிலும் மின்சாரம் பயன்படுகிறது.

வாகனப் போக்குவரத்து

1950–51-ல் 9 கோடி 10 லட்சம் டன்னை ஏற்றிச் சென்றுக்கொண்டிருந்த ரயில்வேக்களில் இன்று 16 கோடி 20 லட்சம் டன் சரக்குகள் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இந்திய உயர்தர ரஸ்தாக்களின் மொத்த நீளம் 97,500 மைலிலிருந்து 1,44,000 மைலாக அதிகரித்திருக்கிறது. பத்து வருடங்களுக்குமுன் ரோடுகளில் ஓடிக்கொண்டிருந்த வர்த்தக வாகனங்களின் எண்ணிக்கையைவிட இருமடங்கு இன்று ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்தியாவில் போக்கு வரத்தும் கணிசமாக அதிகரித்திருக்கிறது.

சமூக சேவைத்துறையைப் பொறுத்தவரையில் 6–11 வயது வரம்புக்குட்பட்ட சிறுவர் சிறுமியரில் 60 சதவிகிதம் பேர் பள்ளிக்குச் செல்கின்றனர். 1950–51-ல் இது 43 ஆக இருந்தது. மாணவர்களின் எண்ணிக்கை பள்ளிகளில் 75 சத விகிதம், சர்வகலாசாலைகளில் 140 சத விகிதம் உயர்ந்திருக்கிறது.

ஆஸ்பத்திரி வசதிகள் பெருகியிருக்கின்றன. வைத்தியக் கல்லூரிகளின் எண்ணிக்கை 30-லிருந்து 55 ஆக உயர்ந்திருக்கிறது. மலேரியா, போன்ற நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கின்றன. மரண விகிதம் குறைந்திருக்கிறது. குடும்பக் கட்டுப்பாடுமுறையில் ஆலோசனை அளிக்கும் நிலையங்கள் சுமார் 2,000 இருக்கின்றன.

திட்ட மனப்பான்மை

இவை எல்லாவற்றிலும் மிகச் சிறப்பான அம்சம், மக்கள் அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றிப் பேசவும் சிந்திக்கவும் தொடங்கியிருப்பதாகும். எங்கு சென்றாலும் அங்குள்ள மக்கள் திட்ட முன்னேற்றத்தைப் பெருமையாகப் பேசுவதைக் காணலாம். பல்வேறு திட்டங்களில் ஏற்படும் நன்மைகள் பற்றியும் அடிக்கடி விவாதிக்கப்படுகிறது.

சென்ற பத்து வருடங்களில் சமூகப் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளைக் குறைப்பதற்காக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிலச் சீர்திருத்தம் கணிசமாக முன்னேறியிருப்பதோடு, குத்தகைதாரர்களுக்கு குத்தகைப் பாதுகாப்பும் கிடைத்திருக்கிறது. குத்தகை அளவும் குறைந்திருக்கிறது. நில உச்சவரம்பு திட்டம் அமுல் செய்யப்பட்டு வருகிறது. பின்தங்கிய வகுப்பினர் க்ஷேமநல நடவடிக்கை கணிசமாக முன்னேறிக்கொண்டு வருகிறது. ஆரம்பக் கல்வி விஸ்தரிப்பு கூட்டுறவு-சமுதாய அபிவிருத்தித் திட்ட முன்னேற்றம் ஆகியவை சமுதாயத்தில் பொருளாதார வளம்பெறாத மக்களும் முன்னேறுவதற்கு வாய்ப்பளித்திருக்கின்றன. பிற்பகுதிகளைப்போல அவ்வளவாக அபிவிருத்தியடையாத பகுதிகளையும் வளர்ச்சியுறச் செய்வதற்கான பல்வேறு திட்டங்களும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

வருங்காலம்

நாம் எதை நோக்கி முன்னேறிக்கொண்டிருக்கிறோம் ? திட்ட ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்க வேண்டிய ஒரு முறையாகும். ஐந்தாண்டுத் திட்டங்கள் குறியளவுகளைத் தீர்மானிப்பதற்கும் நிறைவேற்றுவதற்கும் அவற்றை மதிப்பீடு செய்வதற்கும் ஏற்ற கட்டங்களேயாகும். நாம் நீண்டகாலக் கண்ணோட்டத்தில் திட்டம் தயாரிக்கவேண்டுமென்று திட்ட துவக்கத்தில் உணரப்பட்டது.

தேசிய வருமானம் 1967-68-க்குள்ளாகவும் நபர் விகித வருமானம் 1973-74-க்குள்ளாகவும் முதல் திட்ட ஆரம்பத்திலிருந்ததைவிட இருமடங்காகப் பெருகவேண்டுமென மென்பது லட்சியமாகும். கிராமப் புறங்களில் விவசாயத்தை நம்பியிருப்பவர் அளவை 60 சத விகிதம் ஆகக் குறைப்பதற்கு அங்கு தொழில் வளர்ச்சி நடவடிக்கை மேற்கொள்ளுவதும் நீண்ட கால லட்சியங்களில் ஒன்றாகும்.

மூன்றாவது திட்ட காலத்தில் தேசிய வருமானத்தை வருடமொன்றுக்கு 5 சத விகிதத்துக்குமேல் உயர்த்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. மூன்றாவது திட்ட காலங்களில் முதலிரண்டு திட்டங்களில் ஒதுக்கப்பட்ட தொகையான 10,110 கோடி ரூபாயைவிட, அதிகத் தொகையை 10,200 கோடி ரூபாய் முதலீடு செய்ய உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அதாவது மூன்றாவது திட்ட காலத்தில் தேசிய வருமானத்தில் 14 சத விகிதம் முதலீடு செய்யப்படும். முதலிரண்டு திட்ட காலங்களிலும் இவை இரண்டும் முறையே 7 சத விகிதம், 11 சத விகிதம் ஆக இருந்தது.

இரண்டாவது திட்ட காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முதலீட்டுப் பாணி மூன்றாவது திட்ட காலத்திலும் தொடர்ந்து இருக்கும். விவசாயம், தொழில், மின்சாரம், சமூக சேவைகளில் சில அம்சங்கள் ஆகியவை சிறப்பாகக் கவனிக்கப்படும்.

உணவு உற்பத்தி 7 கோடி 50 லட்சம் டன்னிலிருந்து 10 கோடி 60 லட்சம் டன்னாக உயரும்; அதாவது தினமொன்றுக்கு நபருக்கு 15 அவுன்ஸ் தானியங்களும் 3 அவுன்ஸ் பருப்பு வகைகளும் கிடைக்கும். வேலை தீராத உருக்கு உற்பத்தி ஒரு கோடி டன்னாக உயரும். மின்சார உற்பத்தி சக்தி 58 லட்சம் கிலோவாட்டிலிருந்து இருமடங்காகப் பெருகி ஒரு கோடி 18 லட்சம் கிலோவாட்டாக இருக்கும். 35,000 நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் மின்சார வசதி கிடைக்கும்.

கிராமப் பகுதிகளெங்கும் சமுதாய அபிவிருத்தித் திட்டம் பரவும். 6-11 வயது வரம்புக்குட்பட்ட எல்லா சிறுவர் சிறுமியரும் இலவசக் கட்டாயக் கல்வி பெறுவார்கள். எல்லாக் கிராமங்களிலும் குறைந்தபட்சம், குடித்தண்ணீர், அருகிலுள்ள ரயில்வே நிலையங்களுடன் அல்லது பிரதான ரஸ்தாவுடன் இணைக்கும் ரோடுகள், பள்ளிக் கட்டடம் ஆகியவை இருக்கும்.

மக்களின் திட்டம்

மக்களுக்கு வாழ்க்கையில் நல்ல அம்சங்களைத் தருவதற்காக நிறைவேற்றப்படும் திட்டங்களில், மக்கள் மனப்பூர்வமாகவும் திறமையாகவும் பங்குகொள்ளாவிட்டால் அவை வெற்றிபெறமுடியாது. சென்ற பத்து வருடங்களில் ஓரளவு ஒத்துழைப்பு கிடைத்துவந்திருக்கிறது. திட்ட வேலைகளில் மக்கள் பங்குகொள்ளுவதற்கு பஞ்சாயத்துராஜ்யம் துணையாக இருக்கும். இதன்படி, திட்டங்களைத் தயாரிப்பது, அபிவிருத்தித் திட்டங்களையும் க்ஷேமநலத் திட்டங்களையும் நிறைவேற்றுவது ஆகிய வேலைகள் கிராம அளவிலும், ஜில்லா அளவிலும் மக்கள் பிரதிநிதிகளுக்கு விடப்பட்டிருக்கின்றன.

திட்ட ரீதியான முயற்சியில் மக்களுக்கு எவ்வளவு பங்கு இருக்கிறது என்பதை அவர்கள் உணர்ந்து அதை நிறைவேற்றினால், நமது லட்சியங்கள் நிச்சயமாக ஈடேறும்.

Printed by the Controller of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Secretary, Rural Development and Local Administration Department, Government of Madras.









R.P

சென்னையில்

குடியரசு தின விழா

சென்னை கவர்னர் ராணுவ அணி வகுப்பை பார்வையிட்டார்.

Regd. No. M. 7277,

©
GOVERNMENT OF MADRAS
1961

பல்வேறு அபிவிருத்தி சாதனைகளை விளக்கும் அணிவகுப்பு

26—1—61 அன்று குடியரசு தின விழாவை ஒட்டி சென்னையில் நடைபெற்ற அலங்கார அணி வகுப்பு. அரசாங்கத்தின் பல்வேறு துறையினரும் கலந்துகொண்டனர்.